
264
உமா
ஆசிரியர் : ஜி. உமாபதி
ரமணி

மாலைப் பொழுதை
மனோரம்யமாகப் போக்க
புஹாரியின்
மாடிப் பூங்கா

இனிய குளுமை - மனோரம்யமான தென்றல் - உற்சாகம்
தரும் சூழ்நிலை - எல்லாவற்றிற்கும் மேலாக
ருசி மிகுந்த உணவு வகைகள்

'புஹாரி'யின் சிறந்த தயாரிப்புகள்
சினிமா நக்ஷத்திரங்களும், மற்றும் பல பிரமுகர்களின்
பாராட்டைப் பெற்றவை.

ஹோட்டல் இரவு 12 மணி வரை
திறந்திருக்கும்

ஆராம்
புஹாரி ஹோட்டல்
3/17, மவுண்ட் ரோடு,
மதராஸ்-2.

போன்: 85972

EP



STRAR OF
16 JUL 1954
MADRAS

சென்ற ஏழாண்டுகளாகச் செய்த பெரு முயற்சியின் பயனாகத் தமிழ் மூதாட்டியார் ஔவைப் பிராட்டியின் சரித்திரத்தைத் திரைப்படமாக ஆக்கி உங்கள் முன் வெளியிடும் அரிய வாய்ப்பு இப்போது எமக்குக் கிடைத்திருக்கிறது.

கிடைத்தற்கரிய இந்த அரிய பணியில் எங்களை ஊக்கு வித்த தமிழறிஞர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் எங்கள் மனமார்ந்த வணக்கத்துடன் தமிழ்த் தாயின் பாதார விந்தங்களில் இந்த அரிய மலரைப் பணிவுடன் சமர்ப் பிக்கின்றோம்.

ஜெமினியின்

ஔவையார்

இப்பொழுது 60 தியேட்டர்களில்


When ASTHMA
attack is imminent
use
MULTIMIX
Indo-French Pharmaceutical Co.,
P. B. No. 1542.
DRS-1.
MULTIMIX
(ELIXIR)
EUPNEIC
AND
CARDIO TONIC

PHONE:
2200
UMA PRINTERS
Specialists in CARTONS
& CARD BOARD BOXES
4/32, THATHAMUTHIAPPAN STREET,
MADRAS-1 (NEXT TO SELECT TALKIES)

உமா

ஆசிரியர்: ஜீ. உமாபதி

நிர்வாக ஆசிரியர்: ர. சண்முகம்

செடி 1 மலர் 5	செப்டம்பர் 1953	விஜய ஸ்ரீ ஆவணி மீ

பொருளடக்கம்

தூண்டுகோல் (கவிதை)	பிரம்மம்	... 6
பிரதமரின் பேச்சு	தலையங்கம்	... 7
நாமும் நீங்களும்	...	... 9
எதிரொலி	...	... 10
உழைப்பும் சந்தர்ப்பமும்	'பதி'	... 12
பிறை நிலாவும் போர் வாளும்!	மேலட்டைச் சித்திரம்	... 14
சதியும் பதியும்	பி. வி. பாரதியன்	... 19
தந்திரம் பலித்தது	எஸ். ரங்கநாயகி	... 26
கால்கொடுத்த தெய்வம்	பரணி குமார்	... 30
மனோரமாவின் மனமாற்றம்	சண்முகம்	... 36
வசந்தம் வந்தது	பூவை எஸ். ஆறுமுகம்	... 44
ரேவதி	ஏ. கே. பட்டுசாமி	... 53
அழகு	கலைப்பித்தன்	... 65
இருளும் ஒளியும்	"செளரி" (உலக இலக்கியம்)	67
சாரதாவின் கண்ணீர்	எஸ். சகுந்தலா	... 74
தமிழ்ப் பாசுரங்கள்	கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி	... 83
இலங்கைக் கடிதம்	ராஜன்	... 88

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

தூண்டுகோல்

[பிரம்மம்]

1 மின்னலாம் சிற்றிடை மீதினிலே—அவள்
வெண்ணலிப் பொன்மலர்க் கையை வைத்து- இன்பப்
பண்ணெல்லாம் பாடும் பவளவிதழாள்—போம்
பாதையைப் பற்றுது கோழையுள்ளம்

2 மோன நிலைதனில் நானிருந்து—ஒரு
மோகனக் கவிதை செய்ய எண்ணி—என்னால்
ஆனவரைக்கும் முயலும்போது—ஐயோ
ஆளை மயக்குதவ் வாழி விழி !

3 விண்ணென் றறுந்ததும் ஓலமிடும்—ஏழை
வீணையிலிழையும் சோகநாதம்—விஷக்
கண்ணைச் சிமிட்டியே கேலிசெய்யும்—நாச
காலக் கொடுமையில் கண்டிடுது

4 என்னென்னமோ செய்து என்னையடக்கி—நான்
எப்போதும் போல இருந்திடவும்—அதோ
அன்ன நடைபோட்டு ஆங்கவள் வாராள்
அம்மம்ம ! நான் என்ன செய்திடுவேன் ?

5 பெரும் ஆனந்த நிலையை நாடி நான்
பரம்பொருளையே தியானம் செய்திட்டால்—எந்தன்
கரும பந்தமாம் கட்டழ கியவள்
கருத்தழிக்கின்றாள் புன்னகையால்

6 ஆளான அப்பொல்லாத நாள் முதலாய் நானும்
அரும்பாடு பட்ட டக்கி வைத்த—தீயாம்
பாழான உணர்வைத் தூண்டிவிட்டாள்—படு
[illegible]ளோ எந்தன் நிலை ?

பிரதமரின் பேச்சு!

குடும்பத்தில் சச்சரவு ஏற்பட்டால் குடும்பத் தலைவனான தந்தை தலையிட்டு சமரசப்படுத்துவது உலக வழக்கம். ஏதாவது ஒரு தகராறு காரணமாக புதல்வர்களுக்கிடையே மோதல் உண்டானால், அது, சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் கவலை, அதற்கு தந்தையின் தலையீடு தேவையில்லை என்று தந்தையே கூறும் நிலை ஏற்பட்டால் பொறுப்பற்ற அந்தக் குடும்பத் தலைவனைக் கண்டு ஊரார் எள்ளி நகையாடுவர்.

இந்தியப் பிரதமர் நேருவின் மீது இப்படிப்பட்டதொரு குற்றச் சாட்டுதலைச் சுமத்த நாம் விரும்பவில்லை. ஆனால் அண்மையில் அவர் பேசிய பேச்சின் பொருள் என்னவென்று நமக்குப் புலப்படவில்லையே!

“எல்லைக் கமிஷன் நியமிப்பது மத்திய அரசாங்கத்தின் வேலையல்ல, அது சம்பந்தப்பட்ட மாகாண அரசாங்கங்களின் கடமை” என்று பிரதமர் நேரு பேசியதாக ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருக்கிறது.

ஆந்திர ராஜ்யப் பிரகடனத்தை மார்ச் 25-ந் தேதி வெளியிட்டபோதும், சித்தூரில் தமிழர்கள் நடத்திய தேசீயப் போராட்டத்தின் சாத்வீக சக்தி மத்திய அரசினரைத் தாக்கியபோதும், பிரதமர் நேரு இப்படிப் பேசித் தட்டிக் கழித்திருந்தால், மனம் நொந்தாலும் “இன்றைய அரசாங்கத்தின் போக்கு இதுதான்” என்று தீர்மானித்து ஆறுதல் அடைந்திருக்கலாம்.

“ஆந்திர ராஜ்யம் பிரிவுபட்டபின்பு தகராறுக்கு இடமுள்ள பிரதேசங்களை எல்லைக் கமிஷன் ஒன்று அவசியம் வந்து பரிசீலனை செய்யும்” என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியவர்; சித்தூர் தமிழ் பகுதியும் தகராறுக்கு இடமுள்ள பகுதியே என்பதை ஒப்புக்கொண்டு “ஒன்றுக்கு மேற்பட்ட எல்லைக் கமிஷன்கள் நியமிக்கப்படும்” என்று உறுதியளித்து நம்பிக்கைக் குரல் கொடுத்தவர் திடீரென்று தடம்புரண்டுவிட்டார் என்பதைக் கண்டு நமக்கு பிரமிப்பும் பதற்றமும்தான் ஏற்படுகிறது. நேற்றைய வாக்குறுதி

களை இப்படிக் காற்றில் விடும் அளவுக்கு இன்று ஏற்பட்டுவிட்ட விபத்து என்ன? என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

தமிழகமும் ஆந்திர ராஜ்யமும் தங்கள் எல்லைத் தகராறுகளைத் தாங்களே எப்படித் தீர்த்துக் கொள்ளும்? தமிழகம் ஏமாந்தால் சித்தூர் தமிழ்ப் பகுதிகளை ஆந்திர நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது ஆந்திரர்களின் பேராசை. இந்த விஷயத்தில் அணுவளவும் விட்டுக்கொடுக்க தமிழர்கள் தயாரில் இல்லை. எல்லைக் கமிஷன் வர நேர்ந்தால் ஆந்திரப் பேராசை பஞ்சாகப் பறந்துவிடும். ஆகவே கூடியவரை எல்லைக் கமிஷன் வராமலேயே பார்த்துக் கொள்வதில் ஆந்திரருக்கு அனுகூல முண்டு. இந்த மாறுபட்ட இருமனேபாவமுள்ள ராஜ்யங்கள் ஒன்றுசேர்ந்து எல்லைக்கமிஷனை நியமிக்கும் என்று பிரதமர் நேரு எந்த நம்பிக்கையின் கீழ் எதிர்பார்க்கிறார்?

தவிரவும் மாகாண அரசாங்கங்களிடையே ஏற்படும் தகராறுகளை சம்பந்தப்பட்ட அரசாங்கங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றால் "மத்திய அரசாங்கம்" என்ற ஒன்று எதற்காக இருக்க வேண்டும்?

பிரதமரின் இந்தப் பொறுப்பற்ற பேச்சு "வட நாட்டிலிருந்து தென்னாட்டைத் துண்டாட வேண்டும்" என்று கூக்குரல் போடும் பிரிவினை வெறியர்களைத்தான் உற்சாகப்படுத்துமே தவிர, மாகாணங்களிடையே நட்புணர்ச்சியை வளர்க்க ஒரு சிறிதும் பயன்படாது.

பிரதமர் நேருவின் பேச்சிலிருந்து அவர் சித்தூர் தமிழர்களின் கோரிக்கையை ஒரு அற்ப விஷயமாகக் கருதுகிறார் என்பது திட்டவட்டமாகத் தெளிவாகிறது. தகுந்த சாத்விக கிளர்ச்சிகளுடன் நியாயமான போராட்டங்கள் நடைபெருவிட்டால் சித்தூர் தமிழர்கள் கோரிக்கைமட்டுமின்றி தமிழகத்திலிருந்து செல்லும் எந்த கோரிக்கைக்கும் மத்திய அரசினர் மதிப்புத் தருவர் என்று நிச்சயம் எதிர்பார்க்க முடியாது.

சித்தூர் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கி நடத்தியவர்கள் மீது குற்றப் பத்திரிகை வாசிப்பவர்கள், "கிளர்ச்சி அனுவசியம்" என்று தீர்மானம் செய்பவர்கள் ஆகியோரின் மனதில் இனியாவது தெளிவு பிறக்கும் என்று நம்புகிறோம். தமிழர்களின் உரிமைகளைக் காப்பாற்றும் நோக்கத்துடன் உரிமைப்போர் புரிவோருக்கு உதவி செய்யாவிட்டாலும் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அவர்கள் உபத்திரமாவது செய்யாமல் இருந்தால், அது தமிழகத்துக்கு செய்யும் பெருந்தொண்டு என்று பணிவன்புடன் கூறிக் கொள்கிறோம்.

நாமும் நீங்களும்

தவிர்க்க முடியாமல் ஏற்பட்ட ஒரு அசௌகரியம் காரணமாக இந்த மாத 'உமா' இதழ் சற்று தகுதி குறைந்த தாளில் அச்சாக நேர்ந்தமைக்கு மிகவும் வருந்துகிறோம். பெரிய அளவில் எதிர்பார்த்திருந்த உயர்தர பத்திரிகைத் தாள் குறித்த நேரத்தில் கிடைக்கவில்லை. மேலும் 'உமா' விற்பனையாளர்களில் பெரும் பகுதியினர் ஆகஸ்ட் 25-ந் தேதிக்குப் பிறகு வழக்கத்தை விட ஒருமடங்கு அதிக பிரதிகள் கோரி விண்ணப்பித்தனர். எதிர் பாராத இந்த நிலைமையை சமாளிப்பதற்காக கைக்குக் கிடைத்த மட்ட ரக தாளைக் கொண்டு இந்த இதழை ஒரு வழியாக முடித்திருக்கிறோம். 'உமா'வின் வாழ்வில் இம்மாதிரி நிகழ்வது இதுதான் முதல் தடவை, கடைசி தடவையுங்கூட. இனி எக்காரணத்தை முன்னிட்டும் இம்மாதிரி தகருறு நிகழாதவண்ணம் நிரந்தர ஏற்பாடுகள் செய்து முடித்து விட்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் தடவை பத்திரிகைத் தாளின் தரம் குறைந்திருந்தாலும் விஷயங்களின் தரம் உயர்ந்து விளங்குவதை அன்பர்கள் கவனிக்கவும். நீண்ட காலமாக நடைபெறும் பிரபல பத்திரிகைகளில் வெளிவரும் கதைகளைவிட தரத்திலும், கருத்தாழத்திலும் 'உமா'வின் கதைகள் சிறந்து விளங்குவதாக பெரும்பான்மையான வாசகர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். அந்த அபிப்பிராயத்தை மேலும் மேலும் நிலைப்படுத்துவோம்.

'பதி' எழுதும் அருமையான கடிதங்களைப் பாராட்டி, "இதுவரை வெளிவந்துள்ள கடிதங்களைப் படித்ததன் மூலம் என் வாழ்வையே புரட்சிகரமாக மாற்றியமைத்துக்கொண்டேன்" என்று மதுரையிலிருந்து ஒரு மாணவர் கடிதம் எழுதியுள்ளார். இம்மாதிரி ஏராளமான கடிதங்கள் கிடைத்துள்ளன. வாசகர்களுக்கு மிகவும் பிடித்தமான பகுதி என்ற காரணத்தால் 'பதி'யின் கடிதங்கள் தொடர்ந்து வெளிவரும் என்று உறுதியளிக்கிறோம்.

தொடர் கதை இல்லையென்பது 'உமா' வாசகர்களின் அன்பான குற்றச்சாட்டுகளில் முதன்மை வகிக்கிறது. விரைவில் தொடர் கதையொன்று வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துக்கொண்டிருக்கிறோம். அடுத்த இதழில் இது சம்பந்தமான விவரங்களை அறிவிக்கிறோம்.

மேலும் சில புரட்சிகரமான புது அம்சங்களை அடுத்த இதழில் இணைக்க தீர்மானித்துள்ளோம். மிக உயர்தரமான தாளில் ஏராளமான படங்களுடன், ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த விஷயங்கள் மிளிர அடுத்த இதழ் விளங்கும் என்பதை பெருமையுடன் முன்னதாகக் கூறிக் கொள்கிறோம்.

எதிரொலி

பாராட்டுகிறோம்

'குமுதம்' பத்திரிகை நிர்வாகிகள் தங்களது சிறு கதைப் போட்டியின் பரிசளிப்பு விழாவை ஆகஸ்ட் 3-ந் தேதியன்று ஸெயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் நடத்தினர். ஏராளமான எழுத்தாளர்களும், பத்திராதிபர்களும் குழுமியிருந்தனர். சுவையான சிற்றுண்டி விருந்துக்குப்பின் சிறுகதைப் போட்டியில் பரிசுகள் பெற்ற திருமதிகள் கோமதி சுப்பிரமணியம், வேங்கட லட்சுமி, திரு. தி. நா. தி. ராஜவேத சிகாமணி நாடார், ஆகியோருக்கு சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா பரிசுகள் வழங்கி ஹாஸ்ய ரசம் ததும்பும் சொற்பொழிவு ஒன்றையும் ஆற்றினார்.

தமிழ் எழுத்தாளர்களுக்கு உற்சாக மூட்டுவதன் மூலம் தமிழ்க் கலைக் களஞ்சியத்தை வளப்படுத்த 'குமுதம்' காரியாலயத்தினர் மேற்கொண்ட முயற்சிக்கு மனப்பூர்வமான பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காஷ்மீர் காட்டும் பாதை

இயற்கை அழகும் இனிய சூழ் நிலையும் நிறைந்த காஷ்மீர் தேசத்தில் கொஞ்ச காலமாக துர்ப்பாக்கியத்தின் சாயல் படியத் தொடங்கியிருந்தது. எந்த நேரத்தில் என்ன நேருமோ என்ற பயங்கர சூழ்நிலை திடீரென்று அங்கே உருவாகி வளர்ந்தது. கொஞ்சம் தாமதித்திருந்தால் காஷ்மீரத்தில் ஒரு கொரியாவைப் பார்க்க வேண்டிய அபாயம் நிகழ்ந்திருக்கும். நல்ல வேளையாக புயல் வேகத்தில் அங்கே நிலைமை சமாளிக்கப்பட்டுவிட்டது.

வேலியே பயிரை அழிக்கும் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்? நீண்ட நாள் தேசீயப் பாதையில் நடந்து மக்களின் மனங்கவர்ந்திருந்த ஷேக் அப்துல்லா இப்படித் திடீர் துரோகியாவார் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்.

காஷ்மீரம் உலக மக்களுக்கு புதிய பாடமொன்றை கற்பித்திருக்கிறது. மக்களின் தலைவர்களிடம் அரசாங்கத்தை ஒப்படைப்பதோடு தங்கள் கடமை தீர்ந்துவிட்டதாக இனி பொது மக்கள் எண்ணுவது தவறு. அவர்கள் எப்படி நாட்டை நிர்வகிக்கிறார்கள் என்பதையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும். கடமையை தவறுவோர் யாராக இருப்பினும், அவர்களுக்குப் பின்னால் தியாகப் பாதை எவ்வளவு தூரம் நீண்டுகிடப்பினும் லட்சியம் செய்யாது புத்தி கற்பிக்க மக்கள் முன்வரவேண்டும்.

ஈரான் நிகழ்ச்சிகள்

ஈரான் என்று குறிக்கப்படும் பாரசீகத்தில் நடைபெறும் அரசியல் நாடகம் உலகக் கவனத்தை ஒரேயடியாகக் கவர்ந்திருக்கிறது. புயல் வேகத்தில் அங்கு நடைபெறும் மாறுதல்கள் துப்பறியும் நாவல்களில் கூடக் காண முடியாத திடுக்கிடும் நிகழ்ச்சிகளாக உள்ளன. மேலும் பல விஷயங்கள் நமக்கு ஒரே புதிராக இருக்கின்றன. சில நாட்களுக்கு முன்பு மன்னரையே மண்ணைக் கௌவ வைத்து மக்களின்

மதிப்புக்குப் பாத்திரமாக நின்ற முஸாதிக் இப்பொழுது இருந்த இடம் தெரியாமல் உருண்டுவிட்டார். முஸாதிக் ஒரு ஒப்பற்ற தேசபக்தர், உண்மை உழைப்பாளி, மக்களுக்கு பணி செய்யத் துடிக்கும் பண்பு மிகுந்தவர். அவருக்கு மக்களின் துணை பேரளவில் இருந்தது எதிர்பார்த்த செய்திதான். ஆனால் இன்று நிலை சிந்திக்க முடியாத அளவு மாறிவிட்டதோடு மக்களின் மனநிலையும் புதிராக இருக்கிறது. நாடோடியாக இருந்து நாடு திரும்பிய மன்னரை மக்கள் மகிழ்ச்சிக் கோஷத்துடன் வரவேற்றதாக செய்திகள் கூறுகின்றன. முஸாதிக் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனரா? அப்படியாயின் அதற்குக் காரணம் என்ன என்பன போன்ற விஷயங்கள் இன்னும் மூடு மந்திரமாக இருக்கின்றன. என்ருலும் மக்களுக்குப் பிடிக்காத யாரும் மக்களை ஆள்வோராக பதவியில் இருக்க முடியாது என்பது உலகமெங்கும் வேகமாக பரவிவரும் உண்மை என்பது மட்டும் ஈரான் விஷயத்திலிருந்து புலனுகிறதல்லவா!

டில்லி சந்திப்பு

பாக்கிஸ்தான் பிரதமரும் இந்தியப் பிரதமரும் நிகழ்த்திய பேச்சுவார்த்தைகள் மகிழ்ச்சிகரமாக முடிவுற்றதாக செய்திகள் கூறுகின்றன. இந்தச் செய்திகளை ஆதாரமாக கொண்டுமட்டும் நாம் உடனடியாக குதூகலமடைந்து விடுவதற்கில்லை. சொந்த நாடு திரும்பிய பின்னர் பாக்கிஸ்தான் பிரதமரின் மனப்பண்பு மாருமலிருக்க வேண்டும், மாருவிட்டாலும் அவருடைய தீர்மானங்களை அவருடைய சகாக்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்; ஒப்புக்கொண்டாலும் பொது மக்களுக்கு அவற்றின் முக்கியத்துவத்தை உள்ளபடி உணர்த்தி அதை மக்கள் புரிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். இவ்வளவு தடைகளையும் பாக்-பிரதமர் தாண்டினுல்தான் டில்லி பேச்சுவார்த்தைகள் கோரிய பலனைத் தரும்.

ஏ. எல். ஆர். எம். பாலசுப்பிரமணியம்

சென்னை மாம்பலம் லட்சுமி நரசிம்மன் தெரு 3-ம் எண்ணுள்ள இல்லத்தில் 27—8—53ல் திரு. ஏ. எல். ஆர். எம். ராமநாத செட்டியார் குமாரன் சிரஞ்சீவி **ஏ. எல். ஆர். எம். பாலசுப்பிரமணியனுக்கு** காதணி விழா மிகச்சிறப்பாக நிகழ்வுற்றது. சென்னை மந்திரிகள் திருவாளர்கள்: சி. சுப்பிர்மணியம், யு. கிருஷ்ணுராவ், திரு. ஏ. எல். ஆர், எம். அழகப்ப செட்டியார் ஆகியோர் குழந்தைக்குஆசிச் செய்தி அனுப்பியிருந்தனர். 'உமா'வின் ஆசியும் உரித்தாகுக.

உழைப்பும் சந்தர்ப்பமும்!

அன்புள்ள தம்பி,

சென்ற கடிதத்தில் வாழ்வில் முன்னேற்றமடைய பெரிய படிப்போ, பட்டமோ தேவையில்லை. முயற்சியும், தளர்ச்சியடையாத உள்ளமும் தேவை என்று குறிப்பிட்டிருந்தேனல்லவா? திரும்பத்திரும்ப இதே உபதேசத்தை நான் உனக்குச் செய்வது ஒரு வேளை சலிப்பைத் தருகிறதோ என்னவோ! என்றாலும் உண்மையைத் திரும்பத்திரும்பக் கூறும் பொழுதுதான் அது மனதில் நிற்கும். காலட்சேபம் செய்வதுபோல நான் எதையாவது எழுதிக்கொண்டிருக்க நீ கதை கேட்பதுபோல அவற்றைப் படித்து ரசிப்பதோடு நின்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான் முயற்சியைப் பற்றியும், தளராத உளப்பண்புப் பற்றியும் திரும்பத்திரும்பக் கூறுகிறேன். நீ இன்னொரு விஷயத்தையும் மறந்துவிடக்கூடாது. என்னுடைய இந்த அறிவுரைகள் கேவலம் கேள்வி ஞானத்தால் ஏற்பட்டதல்ல. என் வாழ்வில் நான் பெற்ற அனுபவத்தின் சாரமேதான் என்னுடைய கடிதமாக உருவெடுத்துள்ளது. ஆகவேதான் சமயம் நேரும்பொழுதெல்லாம் முயற்சியைப் பற்றியும், தளராத உழைப்பைப் பற்றியும் நான் கூறுகிறேன்.

முயற்சி நிறைந்த உழைப்பு என்பது எவரஸ்ட் சிகரத்தை அடைய செய்யப்பட்ட பிரயத்தனங்களுக்குச் சமமானது. எவரஸ்ட் சிகரத்தை எட்டிப் பிடிக்க எத்தனையோ நூற்றுக் கணக்கான கோஷ்டிகள் வந்தன. கோஷ்டிகளைச் சேர்ந்த பெரும்பாலோர் மீளாமல் உயிர்விட்டசெய்தியும் உலகறியும். எவரஸ்ட் சிகரம் இனி மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு பயங்கர விஷயம் என்று உலகம் ஒதுக்கிவிட்ட போதுதான் டேன்சிங் என்ற இந்தியர் அச்சிகரத்தில் அடியெடுத்து வைத்து உலகத்தை பிரமிப்பில் ஆழ்த்தினார்.

தம்பி, வாழ்வின் முன்னேற்ற சிகரத்தை எட்டுவதற்கும் இப்படிப்பட்டதொரு அசுர முயற்சி வேண்டும் என்பதைக் குறிப்பிடத்தான் இவ்வளவு விரிவாக எழுதுகின்றேன்.

தம்பி, வாழ்வின் உயர்வுக்கு இன்னொரு பண்பும் அவசியம் இருந்தாக வேண்டும். இது பற்றி முன்னர் ஒரு தடவை குறிப்பாககூறியுள்ளேன். அதாவது சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் பயன்படுத்திக் கொள்ளல்.

நீ பல நண்பர்களை வாழ்வில் சந்தித்திருப்பாய். அவர்களில் வாழ்க்கையில் வெற்றியடைந்தவர்கள் மிகச் சிலராகத்தான் இருப்பார்கள். மற்ற எல்லோரும் தோல்விப் பாதையில் நடப்பவர்களாகத்தான் இருப்பர். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் இப்படி தோல்விப் பாதையில் நடக்கும் கூட்டத்தில் நல்ல திறமைசாலிகளும், உழைப்பாளிகளும்கூட நிறைந்திருப்பதைக் காணலாம்.

''உழைப்பும் முயற்சியும் வேண்டும்'' என்று நான் பன்னிப் பன்னிக் கூறும்போது இப்படி முயற்சியாளர்

'பதி'

களும், உழைப்பாளிகளும் தாழ்ந்து தேய்கிருர்களே, காரணம் என்ன என்று உன் மனம் குழம்பலாம்.

அவர்களைக் கேட்டால் இது பற்றி ஒரே ஒரு பதில் தான் கிடைக்கும். அதாவது தங்கள் முயற்சி பலிப்பதற்கான சரியான சந்தர்ப்பம் இன்னும் கிட்டவில்லை என்பது தான். இது சம்பந்தமாக ஒரு மேல் நாட்டு அறிஞன் பின்வருமாறு கூறுவதைக் கவனி. ''சந்தர்ப்பம் கிட்டவில்லை என்று சதா கூறிக் கொண்டு திரிபவர்கள், கிடைத்த சந்தர்ப்பங்களை கை நழுவவிட்ட கணக்கைப் பார்த்தால் வெட்கித் தலை குனிவார்கள்'' என்கிருன் அந்த ஆங்கில அறிஞன். ஆம், கிடைத்தற்கரிய பெரும்பேருக கிடைக்கும் சந்தர்ப்பத்தை மனிதன் தன் மதியீனத்தால் தவற விட்டுவிட்டு பிறகு சந்தர்ப்பம் கிட்டவில்லையே என்று ஏங்குகிருன்.

தம்பி, சந்தர்ப்பம் தாளுக வருவதல்ல. மனிதன் தனக்குத் தானே உற்பத்தி செய்துக் கொள்ள வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். எப்படி எப்படி நடந்தால், எந்தெந்த முறையில் முயன்ருல் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக் கொள்ளலாம் என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். நீண்ட நேரம் நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டால் மட்டும் பலனடைந்துவிடாது. எந்த சந்தர்ப்பத்தில் எப்படி உழைத்தால் பெரும்பயனை அடையலாம் என்று சிந்தித்தால் குறைந்த உழைப்பிலேயே நிறைந்த பயன் பெற்று மகிழலாம்.

தம்பி, உழைப்புடன் கூடிய முயற்சி உனக்கு அவசியந்தான் என்ருலும் சந்தர்ப்பம் உணர்ந்து செய்யும் முயற்சியும், உழைப்புந்தான் உன் வெற்றியைத் துரிதப்படுத்தும் என்பதை இப்பொழுது உன் நினைவில் நிறுத்து. பின்னர் உனக்கு விரிவாக எழுதுகிறேன்.

உன் அன்பான,

தமையன்.

சென்ற மாதம் 16-ம் தேதி சென்னை அண்ணாமலை மன்றத்தில் **குமாரி சசி—பேபி கலா** இருவரது நடன அரங்கேற்றம் நடைபெற்றது. அரங்கேற்றக் கச்சேரியாக அது இருந்தாலும் காரம், மணம், குணம் நிறைந்த ஒரு நல்ல புரோகிராமாகவே இருந்தது! ஏன் திகைக்கிறீர்கள்? அந்தச் சிறுமிகள் ஒரிஜினல் ஷண்முகம் பொடி கம்பெனியின் உரிமையாளர் வரதராஜுலுவின் குமாரிகள். இந்தச் சிறுமிகளைப் பயிலுவித்தவர் இன்று புகழடைந்துள்ள பல நடனமணிகளைத் தயார் செய்திருக்கும் சென்னை எம். கே. செல்வமணி என்பதால் அவர்கள் நடனம் நன்ருக இருந்ததுபற்றி ஆச்சர்யப்படுவதற்கில்லை. விரைவில் முன்னணிக்கு வரக்கூடிய ஆர்வமும் திறமையும் சகோதரிகளுக்கு இருக்கின்றன.

மேலட்டைச் சித்திரம்:

பிறை நிலாவும் போர் வாளும்!

அந்தி மறைந்து உலகம் இருளுகிறது. அடுத்தாற்போல இருளைத் துரத்திக் கொண்டு வான வெளியில் எழுந்து புன்னகை புரிகிறது பிறை நிலா.

அந்த அமைதி நிறைந்த சூழ்நிலையை சலசலக்க வைக்கிறது அவள் விடும் அந்தப்பெருமூச்சு உப்பரிகையிலே தன்னந்தனியே அமர்ந்திருந்த அந்தக் கட்டழகியின் இதயத்தில் பிரிவின் தாபம், நிறைந்து கிடக்கிறது. அவள் விடும் அந்தப் பெருமூச்சிலே ஏக்கத்தின் சாயல் படிந்து கிடக்கிறது.

காதலன் இப்போது உடன் இல்லை. நீண்ட காலத்துக்கு முன் பிரிந்து எங்கோ சென்று விட்டான். பிரிவுத் துயரில் ஆழ்ந்து கிடந்த காதலியின் உள்ளம் அன்று பிறை நிலாவைக் கண்டபோது பழைய நிகழ்ச்சிகளை நோக்கிப் பாய்ந்தோடியது.

அன்று நிகழ்ந்த அந்த வாட்போரின் போது காதலன் கையில், இந்த இளம் பிறையைப் போல்தானே வீரவாள் வளைந்து நின்று மின்னியது! அன்று அவன் பெற்ற வெற்றி தானே அவனை அவளுடன இணைத்தது! இன்று அவன் அருகில் இல்லை. ஆனால் அவன் கை வாளின் சின்னம் அதோ வான வீதியில் பிரகாசிக்கிறது!

காவியத்தில் காண முடியாத இந்த ஓவியத்தின் மூலம் பண்டைய தமிழரின் வாழ்வையே படம் பிடிக்கிறார் சித்திரக்காரர்.

சென்ற இதழின் அட்டைப் பட விளக்கத்தைப் பற்றி, 'உமா' அன்பர் ஒருவர் "பண்டைய தமிழன், அதாவது, சங்க காலத் தமிழன் கடவுளை இணைத்துத்தான் கலையை வளர்த்தானா?" என்றொரு ஐயவினாவை எழுப்பியுள்ளார். அவசியமான கேள்வி: அதற்கு விளக்கந்தரும் முறையிலேயே இந்த இதழின் அட்டைப் படத்தை அமைத்துள்ளோம்.

சங்க காலத் தமிழனின் உள்ளத்திலே கடவுள் நம்பிக்கை ஆழப் படிந்திருந்தது உண்மை தான். எனினும் அன்று அவன் கலைகளிலே கடவுள் தன்மைக்கு முதலிடம் அளிக்கவில்லை. மனிதனின் உணர்ச்சிக்குக்குத்தான் சங்க காலத் கலைஞன் முதலிடம் அளித்தான்.

இதயத்தின் ஆழத்திலிருந்து மென்மையாக கிளர்ந்தெழுவது அன்புணர்ச்சி; அதற்கு காதல் என்ற இனிய பெயரிட்டான். அடுத்தது உணர்ச்சித் துடிப்பின் உச்சத்தை விளக்கும் வீர உணர்ச்சி.

வீரன் காதலை விழைந்தான். அந்தக் காதல் அவனது வீர உணர்ச்சியை வெறியுணர்வாக மாறிவிடாமல் தடுத்து அவ்வுணர்ச்சியை அறவழி ஒழுக வகை செய்தது. வீரத்தையும், காதலையும் இணைத்தே மனிதனின் குணப் பண்பாடுகளை அன்று வகுத்தனர் தமிழர்கள்.

சங்க காலத்திற்குப் பிற்பட்ட தமிழகத்தில் தான் கடவுள் நம்பிக்கையுடன் இணைந்த கலா உள்ளம் தமிழனிடம் நிலை பெற்றது.

விரைவில் வெளிவருகிறது
அஸோஸியேடட் புரொட்யூஸர்ஸ்
ஆசைமகன்
பத்மினி · B.S. சரோஜா · R. கணேஷ்
T.S. பாலையா · கிரிஜா · B.R. பந்துலு
K. ராமஸ்வாமி. மாஸ்டர் சேது
ஸ்டுடியோ .... வாஹினி
அஸோஸியேடட் புரொட்யூஸர்ஸ்,
11, கோபாலகிருஷ்ண ரோடு, தி. நகர், மதராஸ்-17.

இளமை இன்பத்தை வெறுத்து பொதுநல நோக்குடன் விநாயக ரிடம் முதுமையை வேண்டிப் பெற்ற ஔவையார், பாரிவள்ளல் மக்க ளான அங்கவை, சங்கவை திருமணத்தை தானே முன்னின்று நடத்தி வைத்து அவர்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்கிறுர்.

ஜெமினியின் ஔவையை 'வருக வருக தமிழ்த் தாயே' என்று முகமன் கூறி வரவேற்கிறோம். துந்துபி முழங்க, மங்கையர் மலர் மாலையுடன் வர இப்படிப் பலவிதத்திலும் கோலாகலமாக வரவேற்க முடியாவிட்டாலும் ஆயிரமாயிரம் தமிழ் மக்களின் பிரதிநிதியாக மகிழ்ச்சி நிரம்பிய உள்ளத்தோடு வரவேற்கிறோம்.

நாடு நாசப் பாதையிலே செல்லும் இந்தக் காலத்திலே ஈடு இணையற்ற முறையில் நல்லது சொல்லி வரும் தமிழ்ப் பாட்டியே வருக! இசையின் பத்தில் மக்களை மூழ்கடித்து அம்முறையிலேயே கெட்டதை அகற்றித் தூயதைப் புகட்டிடும் தமிழன்னையே வருக! ஜெமினி தந்த தமிழ்ச் செல்வமே வருக.

ஔவை கதையில் பல சிக்கல்கள்; சரித்திரங்களின் மூலம் மூன்று ஔவைகள் இருந்ததாக அறிகிறோம். மூவரில் ஒருவர் கூட கட்டுக் கோப்பான கதையமைப்புக்கு உட்பட்டிராமல் தனித்தனி துண்டு சம்பவங்களுடன் இயங்கியவர்தான். ஆகையால் சிக்கல்களுக்கிடமின்றி இந்த ஜெமினி ஔவையை நான்காவது ஔவையாகக் கொண்டுவிடலாம்.

கொத்தமங்கலம் சுப்பு இதன் டைரக்டர். அவர் பெருமைப்படலாம், எந்த அளவுக்கு வேண்டுமானாலும். அவ்வளவு சிறப்பாக இருக்கிறது படம். ஆனால் அவருக்கு அதைவிடப் புகழ் தருவது அவரது (கி. ரா. வுடன் சேர்ந்து செய்த) வசனமும் இயற்றிய பாடல்களும் தான். அவர்களது வசன நடை எப்படியிருக்கிறது? எளிய தமிழ்; ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று வரகவி பாரதி பாடினானே அந்தத் தெள்ளுதமிழின் சுபாவீகமான இனிய நடை; போதனைகளைக் கொண்ட, உபமான உபமேயம் கொண்டு உண்மையை எடுத்துரைக்கும் உண்மை நடை; ஹாஸ்யத்திற்கென்று வசனத்தைக் கண்டபடி அமைக்காமல், அனுபவித்துச் சிரிக்கச் செய்யும் வசன அமைப்பு படம் நெடுகிலும் வந்து நம் உள்ளத்தைத் தொடுகின்றது. குறவஞ்சி நடனப் பாடல்கள் உள்ளங்கவருகின்றன. சுப்பு தன் வசனம், பாடல்கள் மூலம் ஔவையின்

பெருமையையும், தமிழ் நாட்டின் பண்பையும் நன்கு வெளிப்படுத்துகிறார்.

கே. பி. சுந்தராம்பாள் ஒளவையாராக நடிக்கிறார். அவர் ஒருவருக்காகத்தான் இந்தப் படமே தயாரிக்கப்பட்டிருப்பதுபோல் இருக்கிறது. நமக்குத் தெரிந்து ஒளவையாகவே வாழ்ந்து வரும் சுந்தராம்பாள் ஒளவையின் பாத்திர மேற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர் ஒருவரால்தான் அந்தப் பாத்திரத்தை இவ்வளவு அற்புதமாகவும் இயற்கையாகவும் நடிக்க முடியும். தெள்ளத் தெளிவுடன் அவர் வசனங்களை உச்சரிக்கும் போது, அவை உருப்பெற்று எதிரில் வந்து காட்சியளிப்பது போன்ற பிரமை ஏற்படுகிறது. பாடல்கள் ஒவ்வொன்றையும் பிரமாதமாகப் பாடியிருக்கிறார். சுந்தராம்பாள் வாழ்விலும், படத்திலும், ஏன் சரித்திரத்திலும் கூட—இடம் பெற்றுவிட்ட நான்காவது ஒளவை. ஒவ்வொரு கட்டத்திலும் சிறப்பாக நடித்திருக்கிறார் அவர். எம். கே. ராதா, ஆர். கணேஷ், டி. பாலசுப்ரமணியம், கொத்தமங்கலம் சுப்பு, எல். நாராயண ராவ், குசல குமாரி, குமாரி வனஜா, எம். எஸ். சுந்தரிபாய், டி. வி. குமுதினி, துளசி முதலிய பலரும் தங்கள் பாகங்களைக் கச்சிதமாக நடித்திருக்கின்றனர். குசல குமாரிக்குச் சிறந்த எதிர் காலம் இருக்கிறது.

ஒளவையாரில் வரும் பாடல்கள் எல்லாமே சிறப்பாக இருந்தாலும் 'எல்லோர்க்கும்

சுந்தரி பிக்சர்ஸின் 'வீர சுந்தரி'யில்
கே. பி. ஜே. சுந்தராம்பாளும்,
குமாரி என். ராஜமும்.

இதுதான். ராமுவின் வாழ்வு இனி உன் கையில்தானிருக்கிறது. அவனை உன் வசம் ஒப்புவிக்கிறேன். அவன் நல் வாழ்வுக்காக நீ பாடுபட வேண்டும். அதை நீ செய்தால்தான் என் ஆத்மாவுக்குச் சாந்தி ஏற்படும்...."

சர்மாவின் தலை சாய்ந்துவிட்டது. "அப்பா!" என்று அலறியபடி அவரது சடலத்தின் மீது விழுந்தான் சுப்பு. வீடே சோகமயமாகக் காட்சியளித்தது.

எதற்காக எது நிற்கும்? காரியங்களெல்லாம் ஒரு மாதிரியாக முடிந்ததும் சுப்பு தன் கடமையைச் செய்வதில் முனைந்தான். தகப்பனாரின் ஏராளமான சொத்துக்களில் பாதியை ராமுவின் வைத்தியத்துக்கே செலவிட்டான். இளம் வயதானாலும் அசாதாரண பொறுமையும், வைராக்கியமும் ஏற்பட்டுவிட்டது அவனுக்கு. அவன் மனோபாவத்தைக் கண்டு யாவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

வருஷங்கள் உருண்டன. சுப்பு தன் சகோதரி சீதாவுக்கு மண முடித்துவிட்டான். யார் எவ்வளவு சொல்லியும் பிடிவாதமாக மணம் செய்துகொள்ள மறுத்துவிட்டான். அவனது கவனமெல்லாம் இன்னும் ராமுவின் மேலேயேதான். அவன் தன் தகப்பனாரைப்போல் வைத்தியங்களுடன் மட்டும் நின்றுவிடாமல் தெய்வத்திற்கு வேண்டாத வேண்டுதல்களையெல்லாம் வேண்டிக் கொண்டான்.

கடைசியில ஒரு நாள் ஒரு வயோதிகர், தான் ஒரு சிறந்த நாட்டு வைத்தியர் என்று சொல்லிக் கொண்டு சுப்புவிடம் வந்தார். "இரண்டு மாதங்கள் பச்சிலைகளை வைத்



துக்கட்டுகிறேன். அறுபத்தியோராவது நாள் அவன் நடக்கா விட்டால் பாருங்களேன்" என்றார் அவர். இப்படிச் சொல்லி ஆயிரமாயிரமாகப் பணம் டறித்தவர்கள் பலர். ஆனாலும் சுப்பு அலுத்துக் கொள்ளவில்லை. 'என்ன ஆனாலும் சரி' என்றான் அவன்.

ஆயிற்று. வைத்தியம் ஆரம்பமாகி சுமார் இருபது நாட்கள் ஆயின. ராமுவின் உடலமைப்பில் மாறுதல்கள் ஏற்பட்டன. முன்னைக்கு இப்போது அவன் தென்புடன் இருந்தான். உடலும் புஷ்டி கண்டது. சுப்புவின் மகிழ்ச்சியைச் சொல்லி முடியாது. காலையில் எழுந்து கோயிலுக்குக் கிளம்பிவிட்டால், அவன் தன் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு எப்போது திரும்புவான் என்று யாராலும் சொல்ல முடியாது. நாட்கள் நெருங்க நெருங்க அவன் வீட்டுக்கு எப்போதாவது ஒரு தரம்தான் வருவது என்று வைத்துக்கொண்டான். கோயிலில் சதா சர்வ காலமும் பிரார்த்தனைதான்.

அன்று கட்டவிழ்க்கும் நாள். சுப்புவின் இதயம் தாங்க முடியாத சந்தோஷத்தாலும் வருத்தத்தாலும் அதிகம் கனத்துப் போய்விட்டது. அதிகாலையில்

பெய்யும் மழை', 'பொறுமை யென்னும் நகையணிந்து', 'கன்னித் தமிழ் நாட்டினிலே', 'முத்தமிழ்த் தெய்வமே', 'கணநாதனே வருக', 'மயிலேறும் வடிவேலனே' ஆகியவை நம்மை நீல வெளி தனிலே சிறகடித்துப் பறக்கச் செய்கின்றன. இடத்திற்கும் சம்பவங்களுக்கும் பொருத்தமான ராகங்களில் பாடல்கள் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. எம். டி. பார்த்தஸாரதி, அனந்தராமன் மாயவரம் வேணு ஆகியோரின் திறன் நன்கு வெளிப்பட்டிருக்கிறது. பாபநாசம் சிவன், கொத்தமங்கலம் சுப்பு இருவரும் அருமையான பாடல்களை இயற்றித் தந்திருக்கிறார்கள்.

ஔவையாரில் ஒளிப்பதிவும், ஒலிப்பதிவும் திறமையின் சிகரமாக இருக்கின்றன. பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளிலும் கூட இரண்டும் நாரும் மணமும் போல் இழைந்திருக்கின்றன. ஒளிப்பதிவாளர் தம்பு, ஒலிப்பதிவாளர் ஸி. இ. பிக்ஸ் இருவரும் உதவியாளர்களின் துணை கொண்டு பிரமாதமாகச் செய்திருக்கிறார்கள். காட்சி ஜோடனைகளின் பொறுப்பு ஏ. கே. சேகர், கே. ஆர். சர்மா, எம். எஸ். ஜானகிராம் ஆகியோரிடம் விடப்பட்டிருக்கிறது.

கைலாசம், தெய்வீகன் சிறை வைக்கப்பட்டிருக்கும் கோட்டை, ராஜ வீதி, மூவேந்தர் அரண்மனைகள், கோவிலாழ்வான் மாளிகை முதலிய காட்சிகள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. படத்தின் தனிப் பெருமைக்கு இவைகள் முக்கிய காரணங்கள். ஏலாங்குழலி ஆடும் கதகளி நடனம், குறத்தி நடனம் இரண்டும் தரமாக இருக்கின்றன. இவைகள் தவிர மற்ற அம்சங்களிலும் மிகவும் உயர்தரமாக இருக்கிறது ஔவையார். ஒவ்வொரு சிறு விஷயமும் நன்கு விவாதித்து அலசப்பட்டு பின் படமாக்கப்பட்டிருக்கின்றது. ஸ்ரீவாஸன் இதன் தயாரிப்பாளர். பணத்தைக் கருதாது கலைக்காக, தமிழரின் மேம்பாட்டை விளக்கும் இப்படிப்பட்ட சிக்கலான தொரு கதையைப் படமாக்க அவர் முற்பட்டதே அவரது உறுதியையும் தன்னம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகின்றது. அவரது இந்த உழைப்பு அவருக்குப் புகழும் பொருளும் வாரிக்கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. பட உலக சரித்திரத்தில் புரட்சி செய்து முக்கியத்துவம் பெற்றுவிட்ட ஜெமினி ஔவையாரைத் தமிழ்ப் பெரு மக்களின் சார்பிலே 'வருக வருக' என்று கூறி வரவேற்கிறோம்.

சண்டிராணி

சென்ற 28-ம் தேதி இந்தியாவெங்கும் வெளியிடப்பட்டிருக்கிறது பரணியின் சண்டிராணி; பானுமதி கதை, வசனம் எழுதி நடிக்கும் இந்தப் படத்தை அவரே டைரக்ட் செய்துமிருக்கிறார். தமிழ், தெலுங்கு, ஹிந்தி மூன்று பாஷைகளிலும் தயாரான இப்படத்தில் பானுமதி, வித்யாவதி, என். டி. ராமராவ் ரங்காராவ், அமர்நாத், ரேலங்கி துரைசாமி, ஆகா முதலியோர் நடித்திருக்கின்றனர்.

ஆசைமகன்

இன்னும் மூன்றே நாட்கள் தான். 4-ம் தேதியன்று அசோஸியேடட் புரொட்யூஸர் ஸாரின் 'ஆசை மகன்' மலை

யாளம், தமிழ் இரு பாஷைப் படம், தமிழ், கேரள நாடுகளில் வெளி வந்துவிடும். ஸ்ரீவாஸ மேனனும் மிஸ்டர் ஜோஸப்பும் இதற்காக ரொம்பவும் சிரமப் பட்டிருக்கின்றனர். படத் தொழிலின் நிலையறிந்து நிதான மாகவும் நிச்சயமாகவும் முன் னேறுபவர்கள் இவர்கள். ஆசை மகன் ஒரு சிறந்த சமூகப் படம் என்று சொல்லுவோம் நாம். பத்மினி, பி. எஸ். சரோஜா, கிரிஜா, கணேஷ், டி. எஸ். பாலய்யா முதலிய பலர் நடித் திருக்கும் இந்த ஆசை மகனை ஆட்டி வைத்திருக்கிருர் ஜி. ஆர். ராவ்.

வீரசுந்தரி

ஸ்ரீசுந்தரி பிக்சர்ஸார் ரொம்ப வும் உற்சாகத்துடன் தயா ரித்து வரும் வீரசுந்தரி படம் ரூபாய்க்கு பன்னிரண்டணு விகி தம் முடிவடைந்துவிட்டதாம். கே. பி. ஜானகிராமனும், கே. பி. ஜே. சுந்தராம்பாளும் பிர தான பாகங்களில் நடிக்கும் இப்படத்தில் என். ராஜம், ஜி. என். ராஜகோகிலம், சேது ராமன், சாயிராமன், கிருபா நிதி முதலியோரும் நடிக்கின்ற னர். விஸ்வநாத் ஜிங்கதே சிரத்தையுடன் டைரக்ட் செய் யும் இந்த ஸ்டண்ட் படம் ஒரு நல்ல மார்க்கெட்டைப் பெறும்.

இன்ஸ்பெக்டர்

சமூகக் கதையை நல்ல முறை யில் படமெடுக்க தமிழர்களுக் குத் தெரியாது என்ற பழியை 'இன்ஸ்பெக்டரி'ன் மூலம் துடைத்துவிட்டனர் ஜுபிடர் பிக்ஸர்ஸார். நல்ல படத்திற்கு கதையம்சம்தான் முக்கியம் என்ற உண்மையையும் இன்ஸ் பெக்டர் நமக்குத் தருகிறது. ஆரம்ப முதல் இறுதிவரை கொஞ்சங்கூட சலிப்புத் தட் டாத வகையில் நிமிஷத்துக்கு நிமிஷம் நம்மைத் திகைக்க வைத்து கதையோடு நம்மை ஒன்றுபட வைக்கிருர் கதாசிரி யர் நா. சோமசுந்தரம்: திரு. டி. கே. ஷண்முகம் நடிப்பின் உச்சிக்குத் தாவி விட்டார்; குறையே சொல்ல முடியாத உயர்ந்த நடிப்பு; அஞ்சலிதேவி இப்படத்தின் மூலம் சினிமா உலகத்தில் ஒரு உயர்ந்த இடத் தைப் பெறுகிருர்.

'இன்ஸ்பெக்டர்' எல்லா அம் சங்களும் தரமாக பூர்த்தியுடன் அமைக்கப்பட்ட உயர்ந்த படம் என்பதில் சந்தேகமே இல்லை.

'ஆசை மக'னில் பாலையா, பத்மினி, கணேஷ்.

சதியும் பதியும்

பி. வி. பாரதீயன்

ஆங்கு ஓர் குட்டிப்போராட்டம் நிகழ்ந்தது. அது கால ஓட்டத்திலே புரட்சியாக மாறிப் பரிணமித்தது. புரட்சி கண்ட முடிவிலே முளைத்தது ஓர் எண்ணம்!

"பெண் படித்துவிட்டாலுங்கூட ஒருநாள் மணமாகி வீட்டிலே 'பானை பிடிக்கத்'தான் போகிறாள். அவள் பி. ஏ., எம். ஏ. என்று படித்ததெல்லாம் வீண்தான். பெற்றோரின் பணச் செலவுதான். அவள் வளர்த்துக் கொண்ட அறிவு மக்கி அழிந்து தான் போகப்போகிறது. மனையாளாகி, தாயாகித் தனயனைச் சீராட்டி வளர்த்துப் பின் மறைந்து போகிறாள் — இதை நான் மாற்றிவிடுவேன். மணமாகாத மங்கையாக வாழ்நாளைக் கழிப்பேன். என் தேவைகளுக்கு வேண்டிய பணத்தை ஆண்மகன் போலவே உழைத்து ஊதியமாகத் தேடிக் கொள்வேன். ஆணுக்கு அடிமையாகாது வாழ்வேன். பெண்களின் பெயரை நிலை நாட்டுவேன். நான் வேலைக்குத்தான் போகப் போகிறேன். நிச்சயமாக வேலைக்குத்தான். ....கல்யாணம் வேண்டாம்.... வேண்டாம் எனக்கு!........"

முடிவு கொண்ட மனத்தினள் மறுபடி ஒருமுறை படித்தாள் வந்திருந்த 'பேட்டி'க் கடிதத்தை.

25—3—53

20-ம் தேதியிட்ட வேலை மனுவை நினைவுறுத்தி, திருமதி மல்லிகா அவர்கள் கீழே கையொப்பமிட்டிருப்பவரை, விரைவிலே வேலை நாட்கள் ஒன்றில் மாலை 4 மணி முதல் 6 மணிக்குள் 'பேட்டி' காண வருமாறு, இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேவி அண் கம்பெனிக்காக

....

மானேஜர்.

'ஏ மல்லி, என்ன பண்ணிண்டிருக்கே? அந்த கடுதாசியைக் கையிலே எடுத்துட்டியா. சரிதான்! நீ வேலையும் பார்க்கவேண்டாம், வெட்டியும் பார்க்க வேண்டாம்....'

'அம்மா போறும், போறும்! நான் தீர்மானம் பண்ணியாச்சு. வேலைக்குத்தான் போகப் போகிறேன். கல்யாணம் வேண்டாம் எனக்கு. பி. ஏ. வரை படிக்க வைச்ச பணத்தை சம்பாதிச்சுத் திருப்பித் தந்துடுவேன் முதலிலே அப்பாவுக்கு....'

'ஆமாம் நீ சம்பாதிச்சுத் தாராமேத் தான் உங்கப்பா பணம் முடையினாலே கஷ்டப்படுகிறார். அவர் பத்தாயிரம் ரூபாய் உன் கல்யாணத்துக்குன்னு ஒதுக்கணும்னு நேத்து ராத்திரி சொல்லிண்டிருந்தார். இந்த மூணே முக்கால் துட்டு.... இவள் பி. ஏ. வரை வா....சிச்சதுக்கு, இன்னிக்கெல்லாம்....இருந்தால் இரண்டாயிரம் ரூபாய்....அப்பாவுக்குத் தரப்போறாளாம் இவள்!'

'எல்லாம் நான் அப்பாகிட்டேப் பேசிக்கிறேன் போ! உனக்கு ஒண்ணுமே தெரியாது அம்மா!'

அம்மா மறுபடி பேசுவதற்குள் மாடி அறையை விட்டு வெளிக்கிளம்பி கீழே இறங்கிவிட்டாள். தன் பெரிய சரீரத்தை நகர்த்த சிரமப்படும் மல்லிகாவின் தாயார் அங்கிருந்த சோபா ஒன்றிலே சாய்ந்து பெருமூச்சுடன் ஓய்வெடுக்கத் தொடங்கினாள்.

* * *

வக்கில் சங்கர சுப்பு 'வாதாடும் தீரர்' என்று அழைக்கப்படும் அளவுக்குத் தொழிலிலே தேர்ச்சி பெற்று, பட்டம் பெற்றுப் 'போர்டு' போட்ட நாள் முதலாக வருமானத்தைத் தொடங்கியவர். கொழுத்த அனுபவமும் பை வழியப் பணமும் நிறைந்து விளங்கினார். அவருடைய செல்லப் பெண் மல்லிகாவுக்கு வேலை பார்க்கவேண்டும் என்ற அவசியம் இல்லையாயினும், அவளுடைய முற்போக்கு அபிப்பிராயங்களால் முன் தள்ளப்பட்டு' தான் செய்த முடிவைத் தகப்பனாரிடம் தெரிவித்து அவருடைய அனுமதியையும் கோரினாள். ''எப்படியாவது நீ சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதுதான் என் விருப்பம். மற்றவர்கள் ஏதாவது சொல்வார்களே என்று நான் பயப்படுபவனில்லை. மகளே, உன் சமத்து''

என்று தன் அனுமதியைத் தட்டாமல் வழங்கிவிட்டார் சங்கர சுப்பு.

அன்று மாலை நான்கு மணிக்கு 'தேவி அண் கம்பெனி' வாசற்படியைக் கடந்து உள்ளே போய்க்கொண்டிருந்தாள் ஒரு மாது.

பேட்டி காண வந்திருக்கும் மனுதாரரை உதவி மானேஜர் தானே பேட்டி அளித்துப் பரீக்ஷைகள் செய்வார் என்று சேவகன் மூலம் தெரிவிக்கப்பட்டு உதவி மானேஜரின் அறையை அடைந்துவிட்டாள் மல்லிகா.

'தங்கள் பெயர் என்ன?'

'மல்லிகா'

'அந்த நாற்காலியில் உட்காருங்கள்'

உதவி மானேஜர் மூக்குக் கண்ணுடியைக் கழற்றி கைக்குட்டை கொண்டு துடைக்க ஆரம்பித்தார். கை கண்ணுடியைத் தேய்த்துத் துடைக்க அவர் நாவு பேசியது.

'உங்கள் வயது என்ன?'

மல்லிகாவுக்கு கோபம் வரத் தலைப்பட்டது. 'என் வயது இவனுக்கு எதற்கு?' என்று மனத்துள் எண்ணிக் கொண்டே 'பத்தொன்பது' என்றுள்.

'ஹூ....ம்' என்று தலையை ஆட்டிக் கொண்டே கண்ணுடியை மறுபடி மூக்கில் மாட்டிக்கொண்டு ஒரு முறை அவளைப் பார்த்துவிட்டு கண்ணுடியைக் கழற்றினுர் அவர். நாவு பேசியது.

'உங்களுக்கு விவாகம் செய்து கொள்ளும் அபிப்பிராயம் உண்டா?'

இந்தக் கேள்வி அவள் கோபத்தை நெஞ்சிலிருந்து நுனி மூக்குவரை கொணர்ந்து நிறுத்த, கேள்விக்கு பதில் சொல்லும் முன்பே வெட்கத்தால் கன்னங்கள் சிவந்துவிட்டன. கோபவேகத்தில் அவள் கீழுதடு தந்திக் கம்பிபோல் அடித்துக்கொள்ள, 'வேலை தேடி வந்த பெண்ணிடம்........ என்ன கேள்வி கேட்க வேண்டும் என்ற அறிவில்லையா?.... விவாகம் என்பது என் சொந்த விஷயம்....அதைப் பற்றிக் கேட்க நீங்கள் யார்?....'

உதவி மானேஜர் குறுக்கிட்டார் 'இல்லை....'

'மரியாதை தெரியாத மனிதர்கள்! உங்கள் மானேஜரை

உடனே நான் பார்க்க வேண்டும். எனக்கு உங்கள் வேலை தேவை இல்லை. உங்கள் கேள்வி முறையைப் பற்றி பேசியாக வேண்டும் அவரிடம்...' விடாமல் மடமடவென்று அவள் பேசியதில் மூச்சு பெருமூச்சாக வெளிவரத் தொடங்கியது.

'மானேஜர் விட்டிற்குப் போய்விட்டார். காலையில் பதினொரு மணிக்கு அவரைப் பார்க்கலாம். நீங்கள் என் கேள்வியைக் காரணம் புரிந்து கொள்ளாமல்....'

அந்தப் பேச்சு முடியு முன்னே அவள் அவ்வறையின் கதவைப் பட்டென்று திறந்து மூடிவிட்டு வெளியேறிவிட்டாள்.

உதவி மானேஜர் கணேசன் மேலும் கீழும் பார்த்துக் கொண்டு கைக்குட்டை கொண்டு கையிலிருந்த கண்ணாடியை அழுத்தித் துடைத்துக் கொண்டே சிந்தனையில் விழுந்துவிட்டார்.

* * *

'அம்மா, உங்களைத்தான் பார்க்கணும்னு யாரோ வந்திருக்காங்க!'

'யாரு, அது, இங்கே மாடிக்குக் கூட்டிக் கொண்டு வா!'

வேலைக்காரன் ஸ்ரீமான் கணேசனை அழைத்துக் கொண்டு வந்து மல்லிகாவின் முன் நிறுத்தினான்.

'உட்காருங்கள்!'

அவர் ஆபீஸிலிருந்து நேரே வந்திருக்கிறார் என்பதற்கு அவரது ஆங்கில பாணி உடை சான்றாகத் தோன்றியது.

மல்லிகாவின் கோபம் ஆறாததால், 'அவன் கண்ணாடியைக் கழற்றிக் கழற்றிப் போட்டுப் பார்த்த போக்கிரித்தனம், அனாவசியமான 'கேள்விகள்' எல்லாவற்றிற்கும் பழிவாங்க எண்ணினாள்.

'தாங்கள் யாரென்று தெரியவில்லையே?'

'தெரியவில்லை....? நான் தான்....தேவி அண் கம்பெனி உதவி மானேஜர், இன்று மாலை....உங்களுக்குப் பேட்டி... அளித்தேனே...'

'ஓஹோ....என் தங்கை வந்திருந்தாள்........உங்கள் பெயரென்ன?'

கணேசன் சற்று விழித்துவிட்டார். தன் கண் பார்வை மங்கிவிட முடியாது அதற்குள். 'என்ன துணிச்சலுடன் பேசுகிறாள். ஹூம்....காலம்!'

'என் பெயர் கணேசன்!'

'உங்கள் வயது....?'

'பழிவாங்குகிறாள்!' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டே 'இருபத்தொன்பது!' என்றான்.

'தாங்கள் இங்கு வந்த காரணம்?'

'தங்கள் தங்கையைப் பார்த்துப் பேச வேண்டும்!'

ஒரு விநாடி அசந்து போனாள் அவள், தன்னையே மடக்கிவிட்டார் வந்தவர் பேச்சில், என்ற எண்ணம் பிறந்ததும்,

'என் தங்கையைப் பார்க்க முடியாது உங்களால்! என்ன வேண்டுமோ சொல்லுங்கள் அவளுக்கு நான் தெரிவித்து விடுகிறேன்!'

இனி சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்ற எண்ணம்

மேலோங்க கணேசன் பேசினார்.

'இன்று மாலையிலே எங்கள் கம்பெனியின் மானேஜருக்கு தனிப்பட்ட காரியதரிசியாக வேலை செய்வதற்காகப் பேட்டி காண வந்திருந்தாள் தங்கள் தங்கை மல்லிகா. மானேஜர் வெளியே போகும் போது என்னையே தனக்கு பதிலாகப் பேட்டி கொடுக்க உத்தரவிட்டிருந்த படியால் பேட்டி கொடுத்து சில கேள்விகள் கேட்டேன்.

சாதாரணமாகப் பெண்கள் வேலைக்கு வந்தால் சில வருடங்கள் வேலை பார்த்து விட்டுப் பின் மணம் புரிந்து கொண்டவுடன் சென்றுவிடுகிறார்கள். அனுபவமுள்ளவரை இழந்து விட்டால் மறுபடி வேறு ஆள் தேட வேண்டி இருக்கிறது. புதிய பெண்ணை மறுபடி வேலையில் பயிலுவிக்க வேண்டி இருக்கிறது. அதனால்தான் வயதையும், மணம் செய்து கொள்ளும் அபிப்பிராயம் உண்டா என்பதையும் கேட்டேன். மல்லிகா என் கேள்விகளைச் சரியானபடி புரிந்து கொள்ளவில்லை. கண்ணிலே ஏதோ தூசு விழுந்து விட்டதால் கண் சரியாகத் தெரியவில்லை. கண்ணாடியைத் துடைத்துக் கொண்டு போட்டுப் பார்த்தேன். அதையும் தவறாக நினைத்துவிட்டாள் என்று தோன்றுகிறது. நாளைக்கு மானேஜரைப் பார்த்து நான் தவறாக நடந்து கொண்டதாகச் சொல்லப் போகிறாளாம்....'

'நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்...?'

'மானேஜர் என்னை உண்மையா என்பதைப் பற்றி சிந்திக்காமலே கோபித்துக் கொள்ளலாம்!....மேலும்....'

'விளக்கிச் சொல்லுமே உண்மையை!'

'இல்லை....அவர் தான் என் தகப்பனார்....

'மானேஜர் உங்கள் தகப்பனாரா? கம்பெனியின் முதலாளி?'

'அதுவும் அவர் தான்!'

'ஓ....!' என்றாள் மல்லிகா ஆச்சரியத்தால் கண்களை அகல விரித்து.

'அதனால் தயவு செய்து ஒன்றும் சொல்ல வேண்டாம். அவள் தொடர்ந்து எங்கள் கம்பெனியில் வேலை செய்யத் தயாரானால் வேலைக்கு நான் நியமித்துவிடுகிறேன். கேட்டுச் சொல்லுங்கள்...!'

மல்லிகா யோசித்தாள். 'சரி நாளை வரச்சொல்கிறேன்!' என்ற பதிலையும் தெரிவித்தாள்.

கணேசன் உள்ளம் களிக்க 'போய் வருகிறேன்' என்ற வார்த்தையுடன் மனமில்லாது நகன்றார் அங்கிருந்து.

* * *

'நேற்றுச் சொன்னபடியே வந்துவிட்டீர்களே தாங்கள்?'

'ஆமாம்!' என்று தலையை ஆட்டிவிட்டாள் ஒரு சிறு புன்னகையுடன் மல்லிகா. பிறகு தான் நினைவு வந்தது தான் செய்தது தவறு என்று. உடனே மறுபடி 'இல்லை, எங்கள் அக்கா....'

கணேசன் குறுக்கிட்டார். 'எனக்குத் தெரியும் நேற்றே. உங்கள் அக்காவும் நீங்களும் ஒன்றுதான் என்று!' தோற்று விட்டோமே என்று மல்லிகா

வுக்குவெட்கம் 'பிடுங்கித் தின்றது'.

மல்லிகா பி. ஏ., தேவி அண் கம்பெனியில் மானேஜருக்கு தனிப்பட்ட காரியதரிசியாக வேலைக்குச் சேர்ந்தாள். மிகவும் திறமையாக வேலை செய்தாள். மானேஜருக்கு அவள் மீது அலாதி அன்பு ஏற்பட்டது.

கணேசனும் மல்லிகாவும் மானேஜரின் இருகரங்கள் போல இருந்து தேவி அண் கம்பெனியின் வியாபார வளர்ச்சிக்கு பெருவாரியாகச் சேவை செய்ததிலே கம்பெனி வளர்ந்தது. லாபம் மிகுந்தது.

மல்லிகா கணேசனை ஒருநாள் அழைத்துச் சென்று தன் பெற்றோருக்கு அறிமுகம் செய்துவைத்தாள். அவர் திறமையை வெகுவாகப் புகழ்ந்தாள். பிறகு சங்கர சுப்புவும் கணேசனும் தனித்துப் பேசிக்கொண்டிருந்தனர். தன் பெண் மிகவும் சாமர்த்தியமாக வேலை செய்கிருள் என்பதைக் கேட்க சங்கர சுப்புவுக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது. பேச்சிடையே அவர் சொன்னர்,

'எங்க மல்லிக்கு கல்யாணம் பண்ணிண்டு விட்டோட அடைஞ்சு கிடக்கிறதிலே பிரியமில்லை. நானும் சரிதான் என்று சொல்லிவிட்டேன். வேலை நன்ருகப் பார்க்கிருள் என்கிறதிலே எனக்கு ரொம்ப திருப்தி. சாதாரணமாக இந்த நாளிலே பார்த்தேளுனு பெண்கள் வேலைக்குப் போனல் பல பேரோடு பழக சந்தர்ப்பம் ஏற்படுகிறது. நெருங்கிப் பழகும் போது சில பேர்வழி தவறிவிடுகிருர்கள்....'

'நீங்கள் சொல்வது ரொம்பவும் சரி, ஆனல் என்னுடை அபிப்பிராயம் பெண்கள் வேலை பார்க்கட்டும். வயது வந்தவுடன் கல்யாணம் செய்து கொள்வது தான் உத்தமம். வயசிலே உணர்ச்சிக்கு வசப்படாமே இருக்கிறது ரொம்ப கஷ்டம். அப்படி இருக்கிறவாளும் ரொம்பவும் குறைவு. கணவன் என்கிறதாக ஒருத்தன் இருந்துட்டால், இரண்டுமாச்சு. தான் சுயமாக இருக்க முடியும், அனுவசியமாகப் புருஷன் விரட்ட முடியாது என்கிறதை நிருபித்தாப்பிலேயும் ஆச்சு. இன்னென்று இயற்கை வழியிலேயே ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒண்ணு வாழ்ந்தாப்பிலேயும் ஆச்சு. படிப்பும் வீணுகாது'.

'அடேயப்பா, பெரிய மேடைப் பிரசங்கமென்னு பண்ணிடுவேள் போல இருக்கு. ஹூம்....எங்க மல்லி, எல்லாம் அவள் இஷ்டம் போல செய்ய அனுமதிச்சுட்டேன்....'

பேச்சு வேறு விஷயங்களில் திரும்பியது. இரவு நேரங் கழித்து கணேசன் காரிலே விட்டிற்குத் திரும்பும் போது அவர் மனத்திலே உருவாகியிருந்த ஆசை, ஊன்று கோல் ஒன்று கிடைத்துவிட்டது என்று புளகாங்கிதமடைந்திருந்தது.

* * *

கணேசன் விரித்த வலை வீணுகவில்லை. வெற்றி கிட்டி

யது! மிகுந்த பிரயாசைப் பட்டு மல்லிகாவின் பல கேள்வி களுக்கும் சமாதானமளிக்கும் பதில் கொடுத்தார். உள்ளூர அவள் மனத்திலே அவர்பால் தன்னையறியாமலே வளர்ந் திருந்த அன்பு, காதல்தான் என்று அவள் ஒப்புக்கொள்ளும் நிலை வந்தது, மணம் புரிந்து கொள்ள ஒப்புக்கொண்ட போது.

மல்லிகா விதித்த நிபந்தனை கள் நிறைவேற்றப் பட்டன. தேவி அண் கம்பெனி, மல்லிகா தேவி அண் கம்பெனி யாக மாறியது. மல் லிகாவும் ஒரு உதவி மேனேஜராக மாறி ஞள். 'மணம் புரிந்து கொண்டாலும் பெண்கள் ஆணுக் குச் சமமாக வாழ வேண்டும். வேலை பார்க்க வேண்டும். படிப்பையோ நேரத் தையோ வீணுக்கக் கூடாது. ஆணுக்குச் சமமான ஆற்றல் படைத்த பெண்கள் வீட்டிலே அடைந்து கிடக்கப் பிறக்க வில்லை.....' என்ற மல்லிகாவின் லட்சியங்கள் அந்த திருமணத் தால் தடைப்படவில்லை. நிறை வேறவே செய்தது, என்று மாற்றியமைத்துக் கொண் டாள்.

மணம் முடிந்த சில தினங் களில் ஒரு நாள் உதவி மானே ஜர் இருவரும் ஆபீஸ் போனில் பேசிக் கொண்டனர்.

'மல்லி, நான் செய்த சூழ்ச்சி தெரியுமா உனக்கு?'

'என்ன சூழ்ச்சியாம்?'

'நீ முதல் முதலில் வந்த போது உன்னைக்கண்டு மயங்கி பெண்தானே, இல்லை மயக்க வந்த ரம்பையோ என்கிற தைக் கண்ணுடியைத் துடைத் துப் போட்டுக் கொண்டு....'

'போக்கிரித் தனம்!' என்ருள் மெல்லிய குரலில்.

'உனக்கு கல்யா ணம் ஆகிவிட்டதா என்பதையும் கேட்டு....கோபிச்சிக் கிண்டு போறப் போ.... விட்டுக்கு வந்து, பறந்த பற வையைப் பிடிச் சுண்டு வந்து....'

'கூட்டிலே போட்டாத் தலை மேலே ஏறி உட்கார்ந்துண்டு டுத்து. இனிமேல் கொத்தப் போறது!'

'இல்லை, கொஞ்சப்போறது!'

'சரி, சரி. கொஞ்சலெல்லாம் வீட்டிலே வைச்சுக்கலாம். வேலையைக் கவனியுங்கோ!' என்ற உத்தரவுடன் போனின் ரிஸீவரை அதனிடத்தில் பட் டென்று வைத்துப் பேச்சை நிறுத்திஞள் மல்லிகா.

பிறர் நம்மைப் புகழும் புகழ்ச்சி, பூவைப் போன்றது. நாம் அதன் வாசனையைப் பிடிக்கலாம். ஆனுல் அதை நாம் விழுங்கி விடக் கூடாது.

— அறிவுத் திரள்

தந்திரம் பலித்தது

எஸ். ரங்கநாயகி

சேகரும் பிரபுவும் ஆதி நாளைய நண்பர்கள். ஒரே ஊரில் பிறந்து வளர்ந்து எஸ். எஸ். எல். ஸி. படிப்பையும் ஒரே ஊரில் முடித்துக்கொண்டனர். மேல் படிப்பிற்கு சென்னையில் காலை வைத்த அவர்கள் ஒரே காலேஜில் சேர்ந்து ஒரே வருடத்தில் பி. ஏ. வும் தேறினர். பிறகு சிறிது நாட்களுக்கு பிரிவு காலம் ஏற்பட்டது.

பி. ஏ. பாஸ் செய்த சேகருக்கு சென்னையில் கமலா பாங்கில் காஷியர் வேலை கிடைத்தது. ஆனால் பிரபுவிற்கு வெகு நாட்கள் வரை வேலையே கிடைக்காமலிருந்தது. உத்யோகத்தில் இருக்கும் பையனை பிரம்மசாரியாக இருக்க விடுவார்களா உலகத்தார்கள். சேகர் நல்ல படித்த பெண் சுசிலாவை விவாகம் செய்துக் கொண்டான். மாமனார் தயவில் பெரிய வேலையும் கிடைத்தது. அவர்கள் விட்டிலேயே அடைக்கலம் புகுந்தான்.

ஆரம்பத்தில் வாழ்க்கை இன்பமாகத்தான் நடந்தது. ஆனால் படித்த பெண்ணின் ஆசைகள் அவனுக்கு ரசிக்கவில்லை. கணவன் ஆபீஸிலிருந்து திரும்பிவரும் நேரத்தில் அவனை இன்முகத்துடன் வரவேற்க விட்டிலில்லாமல் லேடிஸ் கிளப், சினிமா, டிராமா என்று சுசிலா சுற்றுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் வேட்டகத்தில் அடைக்கலம் கொண்ட அவன் வாய் திறக்க முடியவில்லை.

இச்சமயத்தில் தான் திடீரென பழைய நண்பன் பிரபுவை ஒரு நாள் அவன் சந்தித்தான். யோகக்ஷேம சமாசாரத்தின் பிறகு பிரபு வேலை தேடி வந்திருப்பதாகவும், அழகான ஆனால் அதிகம் படித்திராத கிராமீயப் பெண்ணை விவாகம் செய்துக்கொண்டிருப்பதாகவும் அந்தப் பெண் கணவனுக்கு அனுசரணையாக நடப்பவள் என்றும் அறிந்தான்.

உடனே ஒரு உபாயம் செய்தான். தன் ஆபீஸிலேயே பிரபுவிற்கு ஒரு வேலை தேடிக் கொடுத்தான். கூடவே ஒரு தனி வீடு தேடி அதில் குடியிருக்க ஒரு போர்ஷன் அவனுக்கு தேடிக் கொடுத்தான்.

பிறகு மெதுவாக மாமியார் விட்டிலிருந்து பிரிந்து தனிக் குடித்தனம் நடத்த ஒரு உபாயமும் செய்தான். கிராமியப் பெண் கல்யாணிக்கு சென்னை புதியதாகையால் அவளுக்கு சில விஷயங்கள் சுசிலா கற்றுக் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, சுசிலாவை மெதுவாக சமாதானப்படுத்தி அவ் விட்டின் மறு போர்ஷனில் அவளுடன் குடியேறினான். கல்யாணியைப் பார்த்தாவது சுசிலா தண்டச் செலவுகளை மறந்து நன்றாக குடித்தனம் செய்யட்டும் என்பது அவன் எண்ணம்.

குடியேறிய 4, 5 நாட்கள் வரை சுசிலாவும் கணவனுக்கேற்ற மனைவியாக வாழ்க்கை நடத்தி வந்தாள். சேகர் பூரித்

துப் போய்விட்டான். வேளா வேளைக்கு சாப்பாடு, ஆபீஸி லிருந்து களைத்து வரும் அவ னுக்கு ரெடியான காபி, இதெல் லாம் சேர்ந்து சேகரை இன்பத் தில் ஆழ்த்தின. பிரபுவிற்கு ஆயிரம் நன்றிகள் செலுத்தி னன்.

ஆரும் நாள் சேகரும் பிரபு வும் உல்லாசமாக வீடு திரும்பி யதும் வீடு பூட்டியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டனர். "சரியா

"என்ன செய்கிறது. எல் லாம் நம் தலைவிதி" என்று கூறிக்கொண்டே திண்ணையில் சாய்ந்தேவிட்டான் சேகர்.

இரவு 8 மணி சுமாருக்கு கல்யாணியும் சுசீலாவும் சிரித் துக்கொண்டே உல்லாசமாக வீடு திரும்பினர் "இன்று நம்ம லேடிஸ் கிளப்பில் மீடிங். கிளப்பை காட்டிவர கூடவே கல்யாணியையும் அழைத்துச் சென்றேன். அவளுக்கு என்ன

கப் போச்சு போ, 'பழைய குருடி கதவை திறவடி' என் ருகிவிட்டது, என்று கூறிக் கொண்டே வாசல் திண்ணையில் உட்கார்ந்தான் சேகர்.

"அது போகட்டும். உன் மனைவி என் மனைவியைப் பார்த்து திருந்துவது போக இவளும் அவள் வழியை பின் பற்றிவிட்டாள் போலிருக்கே" என்ருன் பிரபு.

சந்தோஷம் தெரியுமா! அதில் தானும் ஒரு மெம்பர் ஆகிவிட் டாள்" என்ருள் சுசீலா.

சேகர் கோபத்துடன், "நீங் கள் எங்கேயாவது போய்க் கொள்ளுங்கள். ஆனல் அலுத்து வரும் கணவனுக்கு ஒரு வாய் காபி தர அச்சமயத்திலாவது வீட்டிலிருக்கக் கூடாதா?" என் ருன்.

பிச்சைக்காரப் பையன் :- பாலும் பழமும் வேண்டாந் தாயே பசிக்குச் சோறு கொடுத்தாப் போதும்.

நெசவாளி மனைவி :- அட! பாலும் பழமும் வேண்டாமாமே இவருக்கு. இங்கே அரை வயத்துக்கஞ்சிக்கே வழியைக்காணோம்...!

"நன்றாகச் சொன்னீர்கள். எங்களுக்கு மட்டும் அலுப்பே கிடையாதா? பகல் முழுவதும் வீட்டில் வேலை செய்து உழைக்கும் எங்களுக்கு சற்று நேரம் மாலையிலாவது வெளியே செல்ல அனுமதி கிடையாதா?" என்று சுடச்சுட கூறினாள் சுசீலா.

"அது போகட்டும். இரவு வேளைகளில் தனியாக நீங்கள் சுற்றிவருவது எனக்குப் பிடிக்கவில்லை. காலம் கெட்டுகிடக்கிறது"

"நாங்கள் என்ன கோழையா எல்லோரையும் கண்டு பயப்பட. இன்று எங்கள் மீட்டிங்கில் அதைப் பற்றிதான் பெரிய லெக்சர் கொடுத்துவிட்டு வந்தேன்" என்றாள் சுசீலா தற்பெருமையுடன்.

அதற்குள் கல்யாணி "ஆமாம் சுசீலா அக்கா எவ்வளவு அழகாக பேசினார்கள்! நாம் ஆண்களுக்கு சரிசமானவர்கள். ஆண்கள் நினைப்பது போல் கோழைகளல்ல. தனியாக நின்று எக்காரியத்தையும் சாதிக்கும் வல்லமை உண்டு. ஆண்களை சார்ந்து நிற்க வேண்டிய அவசியமில்லை. ஆண்களுடன் சரிசமத்துவத்தை நிலை நிறுத்த நாம் பாடுபடுவோம். ஆண்கள் துணை நமக்கு அவசியமில்லை. என்று கர்ஜித்த பொழுது உண்மையாகவே நாங்கள் மயங்கிவிட்டோம்" என்றாள்.

சேகரும் பிரபுவும் செய்வதொன்றுமறியாமல் உள்ளே சென்றனர். மறுதினத்திலிருந்து பூட்டிற்கு மாற்று சாவியும் எடுத்துச் சென்றனர். ஆபீஸிலிருந்து திரும்பி வந்தால் வீட்டிற்குள்ளாவது போயிருக்கலாமல்லவா!

ஒருநாள் ஒய்யாரமாக சுசீலாவும் கல்யாணியும் ஆடம்பரப் பையை ஆட்டிக் கொண்டே பஸ்ஸிலிருந்து கீழே இறங்கினர். அப்பொழுது இரவு 8 மணி. அதே பஸ்ஸிலிருந்து இரண்டு கிருதா மீசைக்காரர்களும் இவர்களுடன் கூடவே இறங்கினர். கல்யாணியும் சுசீலாவும் தங்கள் வழியே செல்ல, பின்புறம் இவர்களும் வந்தது அவர்களுக்கு சற்று அச்சத்தை விளைவித்தது. சுசீலா பின்புறம் திரும்பி ஒரு முறைப்பு முறைத்துவிட்டு வேகமாக நடந்தாள். அவ்விருவரும் பெரியதாக சிரித்து

விட்டு வேகமாக அவர்களைப் பின் தொடர்ந்து வந்தனர். அதிக ஜனசந்தடியற்ற இடத்தில் அந்த கிருதா மீசைக்காரர்கள் சுசிலாவையும், கல்யாணியையும் வளைத்துக் கொண்டனர்.

"சட், நகரப் போகிறீர்களா இல்லையா" என்ருள் சுசிலா கோபத்துடன். கல்யாணிக்கு உதறல் எடுத்தது.

"ஹா....ஹா....நகர முடியாது அம்மா. முதல்லே உங்க நகைகளை களட்டி வெச்சுடுங்க" என்ருன் ஒருவன்.

"என்ன சொன்னுய்? சீ போ அப்பாலே. சத்தம் போடுவேன்" கொஞ்சம் நடுக்கத்துடனேயே சுசிலா கூறினுள்.

"சத்தம் போட்டால் மென்னியை முறிச்சுவிடுவேன். ஜாக்ரதை" கையிலிருந்த கயபை ஓங்கினுன் அந்த முரடன்.

கல்யாணியின் சப்த நாடியும் ஒடுங்கியது. எல்லா நகைகளையும் கழற்றி வைத்தாள். சுசீலா சற்று தயங்கினுள். ஆனல் அதில் ஒரு முரடன் அவள் மீது கை வைக்கவே அவள் பயந்து தன் நகைகளையும் கழற்றிவிட்டாள்.

சுசிலாவும் கல்யாணியும் கண்களில் நீர் வழிய நின்றனர். நகைகளை வாங்கிக்கொண்ட இரண்டு முரடர்களும் "இதோ பார், நாங்க இந்த தெருவை தாண்டும் வரை அப்படியே நிக்கணும். இல்லாட்டி இதோ இந்த துப்பாக்கியால் சுட்டுவிடுவோம்" என்றனர். அவ்விருவர்களையும் பார்க்க பரிதாபமாக இருந்தது.

கல்யாணியும் சுசிலாவும் வீடு திரும்பிய பொழுது சேகரும் பிரபுவும் வீட்டில் உல்லாசமாகப் பேசிச் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

உள்ளே வந்த கல்யாணி அடக்கிக் கொண்டிருந்த துக்கம் தாளமாட்டாமல் "ஓ" வெனக் கதறிவிட்டாள். சுசிலா ஒரு மூலையில் நின்று கண்ணீர்விட்டாள்.

அவர்களிடமிருந்து விஷயத்தைப் புரிந்து கொள்வதற்குள் சேகருக்கும் பிரபுக்கும் பாதி உயிர் போய்விட்டது. கடைசியில் ஒரு வழியாக விஷயம் புரிந்ததும். "எனக்கு அப்பவே தெரியும்" என்று உறுமினுன்.

"ஆண் பிள்ளைகள் பேச்சைக் கேட்டால் தானே" என்று பிரபு முணகினுன். கல்யாணியும் சுசீலாவும் உள்ளே சென்ற பிறகு சேகர் பிரபுவை நோக்கி 'எப்படி நாடகம்?' என்று சிரித்தான்.

"பலே.... கேடி வேஷம் உனக்கு அப்படியே பொருந்தியிருந்ததே.... குரலைக்கூட மாற்றிக் கொண்டு பேசிட்டியே. நன்ருக ஏமாந்துவிட்டார்கள். இனி திருந்திவிடுவார்கள் கவலையில்லை" என்று சட்டைப் பைக்குள் வைத்திருந்த பறிக்கப்பட்ட நகைகளை வெளியே எடுத்தான் பிரபு.

இருவரும் போட்ட சிரிப்பொலி வீடெங்கும் எதிரொலி செய்தது. இதைக் கேட்டு வெளியே வந்த கல்யாணியும் சுசிலாவும், தங்கள் கணவன்மாரின் மகிழ்ச்சிக்குக் காரணம் புரியாமல் விழித்தனர்.

கால் கொடுத்த தெய்வம்

அன்று வெய்யில் ரொம்பவும் கடுமையாக இருந்தது. கண்ணைத் திறக்கமுடியாதபடி அனல் காற்று வீசியது. கண்ணுக் கெட்டிய வரை கானல் ஓடியது. இந்தப் பயங்கரமான வெய்யிலிலே அந்த கிழவர் நடக்க முடியாமல், ஒரு கால் ஊனத்துடன், நொண்டி நொண்டி நடந்து கொண்டேயிருந்தார்.

கோயிலின் உச்சிகால பூஜா மணி 'டாண் டணுர்' என்று ஒலித்துக் கொண்டிருந்தது. கூப்பிடு தூரத்திலிருந்த அந்தக் கோயிலைநோக்கித்தான் அந்தக் கிழவர் நொண்டி நொண்டி நடந்து சென்றூர். அவர் உடலெங்கும் வியர்வை வழிந்து நீராகப் பெருகிக் கொண்டிருந்தது. அவர் உடல் தளர்ந்துவிட்டிருந்தது. ஆனல் அவர் மனதில் அசாதாரண உறுதி ஏற்பட்டிருந்தது. கண்களில் வழிந்த நீரை அடிக்கொரு தரம் மேல் துண்டால் துடைத்துக்கொண்டு அவர் ஒரு பக்கக் கட்டையில் ஊன்றிக்கொண்டு நின்றது பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அதோ கோயில் வந்துவிட்டது! இன்னும் நூறு கெஜ தூரம்தான் இருக்கும். கிழவரால் மேலும் நொண்ட முடியவில்லை. வலது காலிலேயே ஊன்றி நடந்ததால் அது கொப்பளித்துப் போய் விட்டது. கண்கள் இருண்டன. இரு தோள் பட்டைகளிலும் தாங்கமுடியாத வலி ஏற்பட்டது. அப்படியே அந்த மரத்தடியில் உட்கார்ந்துவிட்டார். அவர் மனதில் பழைய சம்பவங்கள் நிழற் படம் போல ஓடின.

* * *

கிருஷ்ண சர்மா என்றுல் அந்த வட்டாரத்திலேயே அவரைத் தெரியாதவர்கள் யாருமில்லை. மிகவும் செல்வந்தர்; தயாள குணமுள்ளவர். கிராமத்தின் அவ்வப்போதைய பொதுத் தேவைகளைக் கூடத் தன் செல்வம், செல்வாக்கு இவைகளைக் கொண்டு பூர்த்தி செய்து சர்க்கார், மக்கள் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர். செல்வத்தை அவருக்களித்த ஆண்டவன் சந்தான பாக்கியத்திற்கும் குறை வைக்கவில்லை. சுப்பு, ராமு, சீதா மூவரும் அவரது வயிற்றுப் பிறப்புக்கள்.

சர்மா மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். அப்படிப்பட்டவர்களைச் சோதிப்பதில்தானே ஆண்டவனுக்கு ஆனந்தம். அவரது இரண்டாவது மகன் ராமு இளமையிலிருந்தே நடக்கவில்லை. மாந்தம் என்றூர்கள்; இளம் பிள்ளை வாதம் என்றனர்; வேதாந்திகள் கர்மவினை என்று சொன்ஞர்கள். ஆக அவன் நடக்கவில்லை. சர்மா செய்யாத முயற்சிகளில்லை. மின்சார சிகிச்சை செய்தால் உடனே குணமாகிவிடும் என்றூர்கள்; கிராமவைத்தியம்தான் நல்லது என்று பெரியவர்கள் சொன்ஞர்கள்; ஆற்று மணலிலோ, சமுத்திரக் கரை

பரணி குமார்

யிலோ இடுப்பளவு பள்ளம் தோண்டிவிட்டு அவன் இருகால்களையும் அதில் இடுப்பளவு புதைத்தால் ஊற்று காரணமாகச் சரியாகி அவனால் நடக்க முடியும் என்றார்கள்; இதற்குக் கைகண்ட வைத்தியம் மலையாள வைத்தியம்தான் என்றனர்.

எல்லாவிதமான வைத்தியங்களையும் செய்து பார்த்துவிட்டார் சர்மா. பணம் ஆயிரக்கணக்கில் செலவழிந்தது. வருஷங்களும் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் ராமு நடக்கவில்லை. சர்மா இதனால் மனமுடைந்து போய்விட்டார். ராமுவுக்கும் வயது பத்தாகி விட்டது. தன் நிலையைக் கண்டு வருந்தும் அளவுக்கு அவன் வந்தபோது சர்மாவின் இதயமே வெடித்துவிடும் போலாகிவிட்டது. அவனைப் பார்க்கும்போதெல்லாம் அவர் மனம் படாத பாடுபடும். தன் அறைக்குச் சென்று முருகன் படத்தின் முன் நின்று கண் கலங்குவார்.

இந்த ஏக்கமே அவரைப் படுக்கையில் போட்டுவிட்டது. சதா சர்வகாலமும் ராமுவின் சிந்தனைதான் அவருக்கு. அவரது மூத்த மகன் சுப்புவுக்கு இப்போது வயது இருபது. அன்று சர்மாவின் நிலைமை ரொம்பவும் மோசமாகி விட்டது. தன் முடிவு நெருங்கிவிட்டதையறிந்ததும் சர்மா உடனே சுப்புவை தன் அருகில் அழைத்தார். அவர் கண்களில் நீர் அருவியாக வழிந்தோடியது. சுப்பு அப்பாவுக்குத் தைரியம் சொன்னான்.

"அழாதீர்களப்பா. அதைரியப்படக்கூடாது. எல்லாம் சரியாகிவிடும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்".

சர்மா ஏளனமாகச் சிரித்தார். "சுப்பு! எனக்கு எல்லாம் தெரியும். இதில் டாக்டர் தைரியம் சொல்லும் அளவுக்கு எனக்கு எந்த விதமான பயமுமில்லை. என் முடிவு நெருங்கிவிட்டது. யாராலும் அதைத் தடுக்க முடியாது. எனக்கு நீ ஒரு உபகாரம் செய்வாயா?"

"அப்பா....! என்னப்பா இது? நான் உங்களுக்கு உபகாரம் செய்வதா? கட்டளையிடுங்களப்பா...."

"இல்லை சுப்பு இதில் நான் கட்டளையிடுவதற்கு ஒன்றுமே இல்லை. நான் உன்னிடம் கேட்கும் இந்த வாம் உன் வாழ்வையே கூட வளம் பெறாமல் செய்துவிடக் கூடும். அதனால்தான்...."

"அப்பா! நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேனப்பா. சத்தியமாகச் சொல்லுகிறேன்...."

"வேண்டாம் சுப்பு, வேண்டாம். நீ சொன்னதே போதும். என் இந்த முடிவுக்குக் காரணம் ராமுவின் நிலைதான் என்று உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எனக்காக நீ செய்ய வேண்டியது

எழுந்து கோயிலுக்கு ஓடினுன். கட்டவிழ்த்தபின் ராமுவின் நிலை பழையபடியே இருந்துவிடு மானல்....? இதை நினைக்கும் போது அவன் நெஞ்சே வெடித்துவிடும் போலாகிவிட் டது. கோயில் கர்ப்பக்கிரகத் துக்கு எதிரே வந்து உட்கார்ந்து கொண்டான் அவன். உருக்க மாகப் பிரார்த்தனை செய்தான்.

''முருகா! முருகா!! என் ராமுவுக்குக் காலைக் கொடு முருகா! என் குடும்ப விளக்கை ஏற்றி வைப்பாயா? அவனுக் காக என் உயிரையும் நான் பலி கொடுக்கத் தயாராக இருக்கி றேன். அவனுக்குக் கால்களைக் கொடு. என் கால்களைப் பதி லுக்கு வெட்டிக்கொள். முருகா! என்னைக் கைவிட்டு விடாதே.'' பயித்தியம்போல் பிதற்றிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டிருந்தான் சுப்பு.

''மாமா! மாமா....!''

சுப்புவின் சகோதரி மகன் சேது ஓடிவந்தான். அவன் குரலைக் கேட்ட சுப்புவிற்குத் தூக்கிவாரிப் போட்டது. திடுக் கிட்டுக் கண்விழித்தான் அவன்.

''கால் சரியாப் போயிடுத்து மாமா. ராமு மாமா நடக்கரு. வாயேன்... வந்து பாரேன்....'' சேது முடிக்கவில்லை.

"முருகா! முருகா!! ராமூ.... ராமூ....'' என்று கத்திக் கொண்டே வயதையும் பாரா மல் ஓடினுன் சுப்பு.

''ஐயோ........!''

ஓடின வேகத்தில் பிராகாரத் தின் மேல் படிக்கட்டிலிருந்து கால் தடுக்கி 'தடால்' என்று விழுந்தான் சுப்பு. அவனுக்கு மூர்ச்சையாகி விட்டிருந்தது. சேது போட்ட கூச்சலில் அங்கு கும்பல் கூடிவிட்டது. சுப்புவை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டு போனுர்கள். சின்ன வைத்தியர் வந்தார்; பெரிய வைத்தியர்கள் வந்தார்கள். எல் லோரும் ஒருமுகமாக அடிபட்ட இடது காலை அகற்றிவிட வேண் டும் என்று சொல்லிவிட்டார் கள். ராமுவிற்கு வைத்தியம் செய்தவரும் அதையேதான் சொன்னுர். சுப்புவுக்கு மயக்கம் தெளியவேயில்லை. இடது கால் முட்டிக்குக் கீழே அப்படியே எடுக்கப்பட்டுவிட்டது.

ஒரு வாரம் சென்றது. சுப்பு வுக்கு மயக்கம் தெளிந்தது. ''ராமு.... ரா....மு'' என்றுதான் அப்போதும் அவன் முனகினுன்.

''அவனுக்குக் கால் குணமாகி இப்போது நடக்கிறுன். இன் னும் ஒரு மாதம் போனுல் அவன் வெளியே போகலாம்; இஷ்டப்படி சுற்றலாம்'' என் ருர் டாக்டர். 'ஆனுல் உங்கள் கால் போய்விட்டதே என்று தான்....' என்று மேலும் இழுத் தார் அவர்.

''இல்லையில்லை.... முருகன்.... என் வேண்டுகோளுக்கு இணங் கினுன். என் ராமுவுக்குக் காலைக் கொடுத்தான். அவனுக்காக என் கால்களைக் கொடுப்பதாக நான்தான் வேண்டிக் கொண் டேன். என் கால் போனுல் பாதகமில்லை. முருகன் கண் கண்ட தெய்வம்; தயாளு. எனக்கு நடப்பதற்கு வேண் டுமே என்பதற்காக ஒரு காலை யாவது கொடுத்தானே, முருகா.... முருகா.''

சுப்புவின் உணர்ச்சிவசமான பேச்சைக் கேட்டு டாக்டரின் கண்களில்கூட நீர் வழிந்தது. விரைவில் வீடு வந்து சேர்ந் தான் சுப்பு. பிறகு ஏராளமான சம்பவங்கள் அடுத்தடுத்து

நடைபெற்றன. ராமுவுக்கு மணமாகிவிட்டது. அவன் படித்துப் பட்டம் பெற்று பெரிய உத்தியோகஸ்தனுகிவிட்டான். அவன் மனைவி சாரதா ஒரு தாடகை. வரும்போது நல்லவளாக வந்த அவள் நாளடைவில் அரக்கியாகிவிட்டாள். தினமும் சுப்புவுடன் அவள் சண்டைக்கு நிற்பதும் ராமு சமாதானப்படுத்துவதுமாக ஆகிவிட்டது.

சுப்புவுக்கு நாளுக்குநாள் மனம் வெறுப்படைந்து கொண்டே வந்தது. பேசாமல் க்ஷேத்திராடனம் செய்யக் கிளம்பி விடலாமா என்று யோசித்தார். வயது ஏற ஏற அவர் மனம் முருகனையே நாடியது. ஒரு சமயம் அவர் வீட்டை விட்டுக் கிளம்பக்கூடத் தீர்மானித்து விட்டார். ஆனுல் ராமுவின் நல்வாழ்வுக்காக தன் உயிரையும் கொடுப்பதாகத் தகப்பனுருக்கு உறுதி கூறியது ஞாபகத்திற்கு வரவே, எங்கு கிளம்புவதையும் நிறுத்திவிட்டார்.

* * *

அன்று ஏதோ சிறிய தவறு நேர்ந்துவிட்டது. அதைப் பிரமாதப்படுத்தி அவருடன் ஒரு மணி நேரம் சண்டை போட்டாள் சாரதா. சுப்புவின் பொறுமை எல்லை கடந்துவிட்டது. அவள் கேட்ட கேள்விகள் அவர் இதயத்தைப் பிளந்தன. பேசாமல் 'விர்' ரென்று வீட்டை விட்டுக் கிளம்பி விட்டார் முருகன் கோயிலுக்கு. முன்னும் பின்னும் நினைவுகள் உந்தித் தள்ள, நினைவிழக்கும் தறுவாயில் 'முருகா, முருகா' என்று முணுமுணுத்தார் அவர்.

"அண்ணு! அண்ணு!!"

ராமு ஓடிவந்து அவரது பாதங்களில் விழுந்து கதறினுன்.

"அண்ணு! சாரதாவை மன்னித்துவிடண்ணு, அவளுக்காக நீ வீட்டை விட்டு வருவானேன், வாண்ணு! எனக்குக் காலைக் கொடுத்த தெய்வமல்லவா நீ? நீ வீட்டை விட்டுப் போனபின் எனக்கு மட்டும் அங்கு என்ன வேலை?...."

"இல்லை ராமு. நான் உனக்குக் காலைக் கொடுக்கவில்லை. அதோ அந்த முருகன்தான் உனக்குக் கால் கொடுத்த கடவுள்; கன்கண்ட தெய்வம். வா! அவன் சந்நிதிக்கு முதலில் போகலாம்."

தன் பேச்சுக்கு மறு பேச்சு கூட சொல்லாமல் எல்லாத் தவறுகளையும் தன் ஒருவனுக்காக மன்னித்து தனக்காகத் தன் உயிரையே பணயம் வைத்த அண்ணனின் தன்மை கண்டு ராமுவின் கண்களில் 'பொல பொல' வென நீர் கொட்டியது. இருவரும் கோயிலை நோக்கிக் கிளம்பிய போது அந்த வேளையின் பயங்கர நிசப்தத்தைக் கலைத்து ஓட்டுவது போல 'டாண் டாண்' என்று கோயில் மணி ஒலித்தது.

காதல்—அது கடையில் விற்கும் பட்சணமல்ல, கண்ணுல் பார்த்துக் காதால் கேட்டு மனத்தால் அனுபவிக்கும் இன்பமது, உடல் உறை என்ற கிண்ணத்தின் மூலம் அதன் போதை இன்னும்அதிகமாக நீடிக்கிறது.

— ஷா.

மனோரமாவின்

"மனோரமா...." என்று குரல் கொடுத்தார் மேலப்பட்டி முனிஸிபல் சேர்மன் முருகானந்த முதலியார். அவருக்கு முன்னால் மேஜை மீது காலை ஆகாரம் இரண்டு தட்டுகளில் தயாராக இருந்தது.

தன் அறைக்குள் நிலைக் கண்ணாடிமுன் நின்று மணிக் கணக்கில் அலங்காரத்தில் ஈடுபட்டிருந்த முருகானந்த முதலியாரின் செல்வப் பெண் மனோரமா நீலாம்பர மலர்க்கத்தை ஒன்றைத் தூக்கி தலையில் சொருகி அலங்காரத்தை ஒரு வழியாக முடிவுக்குக் கொண்டுவந்த வண்ணம் "வந்துட்டேனப்பா...." என்று கொஞ்சலுடன் எதிர்க் குரல் கொடுத்தாள்.

"இங்கே எல்லாம் ஆறி அவலாப்போகுது. சாப்பிட்டுட்டு அப்புறம் போய் உன் வேலையைக் கவனிக்கக் கூடாதாம்மா."

முருகானந்த முதலியார் மகளை செல்லமாகக் கடிந்து கொண்டார்.

அங்கே மனோரமா தலையை ஒரு ஆட்டு ஆட்டி, இடுப்பை வளைத்து நிமிர்த்தி, பல கோணங்களில் தன் அழகைத் தானே ரசித்து முடித்துவிட்டு ஒய்யாரமாக ஆடி அசைந்து அறையைவிட்டு வெளியே புறப்பட்டாள்.

இதற்குள் வாசற் கதவை யாரோ இலேசாக தட்டும் ஓசை கேட்கவே சிறு குழந்தையைப் போல துள்ளிக் குதித்து ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

பணிவு ததும்பும் நிலையில் ஒரு இளைஞன் வெளிக் கூடத்தில் நின்றிருந்தான். கதவு திறக்கப்படும் ஓசை கேட்டவுடன் அவசர அவசரமாக கரங்களைக் குவித்து "வணக்கம்..." என்று ஆரம்பித்தவன், வந்தது முருகானந்த முதலியாராக இல்லாமலிருக்கவே ஒரு வினாடி திகைத்தான்.

அந்த இளைஞனைக் கண்ட மனோரமாவின் கண்கள் வியப்பால் விரிந்தன. அமைதி ததும்பிய அந்த முகத்தில் ஒரு நொடியில் ஆத்திரத்தின் சாயல் படிந்தது. முகத்தைக் கடு கடுவென வைத்துக்கொண்டு "நீங்கள் தானா....?" என்றாள்.

இளைஞன் அதே கேள்வியை அப்படியே அவளிடம் திருப்பிக் கேட்டுவிட்டு "நான் எதிர்பார்க்கவில்லை" என்று ஒரு வார்த்தையைக் கூட சேர்த்துச் சொல்லி வைத்தான்.

"என்ன விசேஷம்...."

"உங்கள்...தந்தை....ஆமாம் தந்தை என்றுதான் நினைக்கிறேன். அவரைப் பார்க்க வேண்டும்"

"சாப்பிடுகிறார். வர பதினைந்து நிமிஷமாகும்" என்று கூறி இளைஞன் முகத்திலறைவது போல தடாலென்று கதவை அடித்து மூடிவிட்டு வேகமாக தந்தையிடம் சென்று அவருக்கு முன்னால் நாற்காலி மீது 'தொப்' பென உட்கார்ந்தாள்.

மன மாற்றம்

மனோரமாவுக்கு கோபம் வந்துவிட்டது என்பதை முருகானந்தம் உணர்தார். ஆனல் காரணம் புரியவில்லை. கேட்கவும் துணிவு வரவில்லை. கேட்டுவைத்தால் ஒரு வேளை சாப்பிடமாட்டேன் என்று முரண்டு பிடித்தால்....? அனுபவம் அவர் வாயை அடைக்கவே இட்லியை பிட்டு வாயில் போட்டு அடைக்க ஆரம்பித்தார்,

வெடுக் வெடுக்கென்று இட்லியை விழுங்கிக் கொண்டிருந்த மனோரமா 'டக்'கென நிறுத்தி தந்தையை நோக்கி "யாரோ ஒரு ஆள் உங்களைப் பார்க்க காத்துக் கொண்டிருக்கிறன்" என்றுள்.

"ஓ....ஜெகதீசனுக இருக்கும். இருக்கச் சொல்லிவிட்டு வந்தாயல்லவா!" என்று மலர்ந்த முகத்துடன் கேட்டார் முருகானந்தம்.

"எதற்காக வந்திருக்கிருனும்" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்டாள் மனோரமா.

"ஜெகதீசனை உனக்குத் தெரியாதோ! ரொம்ப நல்ல பையன். அடக்க ஒடுக்கமான யோக்கியன். அனுவசியமாக யாரிடமும் பழகமாட்டான். அதனல், அவனைப் பற்றி உனக்கு தெரியாமலிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை...."

மனோரமா குறுக்கிட்டுக்கத்தினள். "அவன் எதற்காக வந்திருக்கிருன்...."

செல்லப் பெண் மனோரமாவின் இந்த உருட்டல் மிரட்டல் எல்லாம் முருகானந்தருக்கு புதிதல்லவே! ஆகவே அவர் சிரித்துக்கொண்டே "அவனுக்கு நம்ம முனிஸிபாலிட்டியில் ஒரு வேலை பார்த்து தருவதாக வாக்களித்திருந்தேன்...." என்று பேச ஆரம்பித்தார். மனோரமா சாப்பிடுவதை நிறுத்திவிட்டு திடீரென எழுந்திருப்பதைக் கண்டு திகைத்த முருகானந்தம் "எங்கேம்மா?" என்றுர்.

"வேலை ஒன்றும் பார்த்துத்தர முடியாது என்று அந்தப் பையனிடம் சொல்லி அனுப்பிவிடுகிறேன்...."

முருகானந்தம் உண்மையாகவே மிரண்டுவிட்டார்.

"ஐயய்ய....நான் வாக்குறுதி அளித்துவிட்டேனம்மா! அவனுக்கு ஒரு வேலை வாங்கித் தருவதிலே நமக்கு என்ன நஷ்டம்..." என்றுர் பரபரப்புடன்.

"அவனுக்காக நீங்கள் முயற்சிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான். அவன் அப்படியொன்றும் யோக்கியனல்ல...."

மனோரமா மடமடவென வெளி ஹாலுக்கு போகும் கதவைத் திறந்துகொண்டு காளிகாதேவி சொரூபத்தில் ஜகதீசன் முன்னல் போய் நின்றுள்.

"சாப்பிட்டுவிட்டாரா?" என்று சிரித்த முகத்தோடு கேட்டான் ஜகதீசன்.

"அவர் உமக்கு வேலை பார்த்துத்தர விரும்பவில்லை. நீர்

சண்முகம்

போகலாம். கண்ட கண்ட பேருக்கு வேலை தேடித்தர இது என்ன எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் ஆபீஸா?... நீர் போகலாம்....''

மூச்சுவிடாமல் ஒரு குதியாட்டம் போட்டு நிறுத்தினள் மனோரமா. அவள் பேசிய வேகத்தில் கையிலிருந்த கைக்குட்டை தரையில் நழுவி விழுந்தது.

ஜெகதீசன் மனோரமாவின் கோபத்தைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அலட்சியமாக கீழே கிடந்த கைக் குட்டையை எடுத்து அவளிடம் நீட்டி ''பாவம்....ரொம்ப சிரமப்பட்டுவிட்டீர்கள். முதலில் முகத்தில் அரும்பியிருக்கும் வியர்வையைத் துடைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் உள்ளே போய் ஒரு கப் காபி சாப்பிடுங்கள்....'' என்று சிரிக்காமல் கூறினன்.

மனோரமா கைக்குட்டையை வெடுக்கென்று அவன் கையிலிருந்து பிடுங்கினள். பிறகு எரித்துவிடுவது போல அவனை ஒரு தடவை பார்த்துவிட்டு 'தப் திப்'பென்று கால்களை போட்டு அடித்துக்கொண்டு உள்ளே போய் தன் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

இப்படிச் செய்தால் மனோரமாவுக்குக் கோபம் அதிகமாகி விட்டது என்று அர்த்தம். ஆகவே இப்போது அவளிடம் பேசுவது ரிஷியின் தவத்தைக் கலைப்பதற்கு ஒப்பாகும் என்பதை அறிந்திருந்த முருகானந்த முதலியார் பேசாமல் சிற்றுண்டியை முடித்துவிட்டு பிறகு உடுத்திக்கொண்டு தன் வேலையாக வெளியே புறப்பட்டு விட்டார்.

* * *

முருகானந்த முதலியாருக்கு மேலப்பட்டியில் செல்வமும் செல்வாக்கும் குவியத் தொடங்கியபோது இந்த கோலாகலத்தைப் பார்க்கக் கொடுத்துவைக்காமல் அவர் மனைவி யோகாம்பாள் கண்ணை மூடிவிட்டாள். அப்போது மனோரமாவுக்கு வயது எட்டு. ஒரேகுழந்தை என்பதனாலும், தாயில்லா பிள்ளை என்ற காரணத்தாலும் முருகானந்தம் மனோரமாவை அவள் போன போக்கிலேயே விட்டு வளர்க்க ஆரம்பித்தார். ''வருகிறவள் எப்படி இருப்பாளோ'' என்ற நியாயமான அச்சத்தினுல் முருகானந்தம் மறுமணம் செய்துக் கொள்ளாமலிருந்து விடவே, மனோரமா தட்டிக் கேட்க ஆளில்லாமல் எட்டு வருடங்களில் சண்டப்பிரசண்டமாக வளர்ந்து விட்டாள். என்றாலும் மனோரமாவிடம் பிரமாதமான கெட்ட குணங்கள் எதுவும் படிந்துவிடவில்லை. எடுத்ததற்கெல்லாம் மூக்கின் மேல் கோபம் வந்துவிடும். தன் தந்தையின் செல்வம்—செல்வாக்கின் காரணமாகவும், தன்னிடம் அமைந்துவிட்ட பேரெழிலின் காரணமாகவும் கொஞ்சம் தற்பெருமையும் ஆணவமும் இருக்கத்தான் செய்தது. அதனுல் சிறு விஷயத்துக்குக்கூட யாரையும் எடுத்தெறிவது போலப் பேசத்தயங்கமாட்டாள். கொஞ்சம் ஆடம்பரப் பிரியம் உள்ளவள். மற்றபடி தங்கமானவள் தான். படிப்பில் கெட்டிக்காரி. இண்டர்மீடியட் வகுப்பில் நல்ல பெயருடன் தேறியிருந்தாள்.

அதற்குமேல் படிக்க விரும்பாமல் பொதுநல சேவை என்ற பெயரால் லேடிஸ் கிளப்புகளிலும், மற்றும் பற்பல ஸ்தாபனங்களிலும் பங்கு கொண்டு சொற்பொழிவுகள் செய்வதும், பொழுதுபோக்கு

வதுமாக காலம் கழித்துக் கொண்டிருந்தாள்.

தன் பெயருக்கு இழுக்கைத் தரும் அளவுக்கு அவ்வளவு மோசமாக மனோரமா போய் விட மாட்டாள் என்பதை உணர்ந்திருந்ததால் முருகானந்த முதலியார் மனோரமாவின் வழிகளில் அதிகம் குறுக்கிடுவதில்லை.

முகமறியாத அந்த இளைஞனிடம் மனோரமா அன்று நடந்துக்கொண்டதற்கு, முதல் நாள் மாலை நடந்த சிறு நிகழ்ச்சிகளே காரணமாகும்.

முனிஸிபாலிட்டியார் நடத்தும் ஆரம்பப் பள்ளி ஒன்றின் ஆண்டு விழாவில் மனோரமா பேசுவதாக இருந்தது. அதற்காக மாலையில் தந்தையின் மோட்டாரில் மனோரமா சென்றுக் கொண்டிருந்தாள். காரை அவளே செலுத்திக் கொண்டிருந்தாள். கார் ஒரு குறுகிய சந்து வழியாக சென்றுக் கொண்டிருந்தது.

முன்னால் சற்று தொலைவில் ஒரு இளைஞன் நடந்து சென்றுக் கொண்டிருக்கவே அவன் விலகுவதற்காக மனோரமா திரும்பத் திரும்ப ஹார்ன் அடித்தாள். அவன் நகருவதாகத் தெரியவில்லை. தன் போக்கில் மெதுவாக போய்க்கொண்டிருந்தான் மனோரமா விடாமல் எலக்டிரிக் ஹாரனை காது செவிடுபடும்படி ஒலித்தாள். நடக்கிற வழியாகத் தெரியவில்லை.

அவன் வேண்டுமென்றே செய்கிறானா அல்லது காதுசெவிடா? என்று மனோரமாவால் யூகிக்க முடியவில்லை. ஆத்திரம் கொப்பளிக்க அந்த இளைஞனை இடித்துத் தள்ளுவது போல காரை அவன் ஓரமாக வேகமாக ஓட்டிச் சென்று சட்டென்று 'பிரேக்' போட்டாள்.

இப்போது அவன் திரும்பினான்.

''என்ன மிஸ்டர்....தெருவை அளவெடுத்தாகிறதா? அல்லது ஏதாவது சத்தியாக்கிரகமா?'' என்று அவனிடம் சீறி விழுந்தாள் மனோரமா.

நிதானமாக அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ''நிச்சயம் அளவெடுக்கவில்லை. ஆனால் சத்தியாக்கிரகம் செய்கிறேன் என்பது மட்டும் உண்மை'' என்றான்.

''என்ன பைத்தியம் பிடிச்சு போச்சோ! ரோட்டிலே என்ன சத்தியாக்கிரகம் வேண்டிக் கிடக்கிறது..'' என்று கம்பிரமாக கார் ஜன்னல் மீது சாய்ந்துக்கொண்டு கேட்டாள் மனோரமா.

''வேறென்ன செய்வது. முறை தவறி நடப்பவர்களை சத்தியாக்கிரகம் செய்துதான் திருத்த வேண்டும்....'' அவசரப்



உபாத்தியாயர் (தம் மகனிடம்) மூணு மணி நேரம் படிச்ச பிறகு அப்பாவுக்குத்தானே உதவி செய்யனும். வாடா என்னோடு பள்ளிக்கூடத்திற்கு.

படாமல் திடமான குரலில் கூறினன் இளைஞன்.

மனோரமா காரின் கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்தாள். கோபத்தால் அவள் முகம் சிவந்துவிட்டது. ஆத்திரத்தில் வாய், வார்த்தைகளை சரியாக உச்சரிக்க முடியாமல் திணறியது.

"என்ன சொன்னய்...யார் முறை தவறி நடந்தது. நீயா நானு?....என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்.... உம்...." என்று உறுமினள்.

ஒருவித பதட்டமும் அடையாமல் சிரித்துக்கொண்டே அந்த இளைஞன் தெரு முனையில் காட்சியளித்த ஒரு அறிவிப்புப் பலகையை சுட்டிக் காட்டினன். "குறுகிய சந்தானதால் எந்த வண்டியும் போக அனுமதியில்லை" என்று கூறும் முனிஸிபாலிட்டி அறிவிப்புப் பலகை அது

எக்கச் சக்கமாக மாட்டிக் கொண்டதால் தலையில் அடிபட்ட நாகத்தைப்போல மனோரமா ஒரு வினடியில் ஒடுங்கிவிட்டாள். ஆனல் இளைஞன் மீது ஏற்பட்ட ஆத்திரம் ஒரு மடங்கு அதிகமாகவே பெருகியது. "நான் யார் தெரியுமா? முனிஸிபல் சேர்மன் முருகானந்த முதலியாரின் மகள்.... ஞாபகமிருக்கட்டும். எனக்கு யாரும் எதுவும் கற்றுத்தரத் தேவையில்லை" என்று தோல்வியினல் ஏற்பட்ட தாழ்வை மாற்ற முயன்று கூச்சல் போட்டாள்.

"முனிஸிபல் சேர்மன் மகள் முறை தவறி நடக்கலாம் என்று ஒரு சட்டம் இருப்பது எனக்குத் தெரியாது. மன்னிக்கவும்" பரிகாசம் கலந்த கும்பிடு ஒன்றைப் போட்டுவிட்டு புன்சிரிப்பு தவழ தன் போக்கில் போகத் தொடங்கினன் இளைஞன். அவன் தலை மறையுமட்டும் அவனையே பார்த்திருந்துவிட்டு "முறை தெரியாத மிருகம்" என்று முணு முணுத்துக் கொண்டே காரில் ஏறி திருப்பி வந்த வழியே காரை விட்டாள் மனோரமா!

பள்ளிக்கூட ஆண்டு விழாவில் "மாணவர்களின் எதிர்காலம்" என்பது பற்றி மனோரமா சொற்பொழிவாற்றினள். "அழகான மாடி வீடு; வாய் திறக்குமுன் நம் உத்தரவை நிறைவேற்ற வேலையாட்கள்; நினைத்தபோது உல்லாச சவாரி செய்ய மோட்டார்கார், ஆகிய இப்படிப்பட்டதொரு உயர்ந்த சூழ்நிலையை எதிர்காலத்தில் அமைத்துக்கொள்ள மாணவர்கள் முயற்சிக்க வேண்டும்" என்று தனது கருத்தைக் கூறி பிரமாதமான கரகோஷத்துடன் மனோரமா அமர்ந்தபோது, தலைமை வகித்தவர் அடுத்து பேச இருப்பவரைப் பற்றி அறிவிக்கத் தொடங்கினர்.

"....அடக்கமாக தேசசேவை செய்யும் பிரபல எழுத்தாளர் ஜெகதீசன் இப்பொழுது பேசுவார்" என்று தலைவர் அறிவித்த உடன் மேடைக்கு வந்த இளைஞனைப் பார்த்து மனோரமா திகைத்து விட்டாள். வரும் போது தகராறு செய்த அதே ஆசாமிதான்.

"....திருமதி மனோரமா மாணவர்களின் எதிர்காலத்தைத் தன்னுடைய கண்ணோட்டத்தில் பார்த்து தன் அபிப்பிராயங்களைக் கூறினர்.

எனக்கு என்னவோ மாடி வீட்டில் வாழ்வதும், வீட்டில் வேலைக்காரர்களை நிரப்பிக் கொள்வதும், மோட்டாரில் உல்

லாச சவாரி செய்வதும் ஒரு மாணவனின் எதிர்கால லட்சிய வாழ்வாகிவிடும் என்று ஒப்புக்கொள்ளத் தோன்றவில்லை. மனிதன் செல்வம் நிறைந்த ஆடம்பர வாழ்வை மேற்கொள்வது தன்னுடைய வாழ்வின் ஊழலை திரை போட்டு மறைத்துக்கொள்ளத்தான் வசதியாக இருக்கும். மாணவர்களின் எதிர்காலம் பற்றி அவர்களுக்கு உபதேசம் செய்யும் அளவுக்கு நான் உயர்ந்தவன் அல்ல என்றாலும் என் கருத்தை சுருக்கமாகக் கூறுகிறேன்.

"மாணவர்களே, எதிர்காலத்தில் நீங்கள் பணக்காரனாக உலாவ முடியாவிட்டால் பரவாயில்லை. அப்பழுக்கற்ற நேர்மைசாலி என்று பெயரெடுங்கள். உங்களுக்கு மாடி வீடு இருந்தாக வேண்டும் என்ற அவசியமில்லை; குடிசையாக இருந்தாலும் சுற்றமும் நட்பும் குவிந்து நிற்க, கஞ்சியாயினும் பிறருக்குப் பகிர்ந்தளித்து உண்ணும் நற்பண்பு உங்களை பற்றட்டும், உல்லாச சவாரிக்கு உங்களுக்கு மோட்டார் வேண்டாம்; நடந்தே செல்லுங்கள். அப்பொழுதுதான் உலகத்தின் உண்மைத் தோற்றம் உங்களுக்குப் புரியும், மக்களின் கஷ்ட நஷ்டங்களை உணருவீர்கள்...."

வானம் அதிருவது போன்ற ஒலித்த கரகோஷத்தினிடையே ஜெகதீசன் பேச்சை முடித்துவிட்டு உட்கார்ந்தான்.

ஜெகதீசன் தன்னை வேண்டுமென்றே அவமானப்படுத்தியதாக மனோரமா நினைத்தாள். எல்லை மீறி எழுந்த கோபத்துடன் கழுத்தை ஒரு ஒடி ஒடித்துவிட்டு விர்ரென்று மேடையை விட்டு இறங்கி காரை நோக்கி நடந்தாள்.

ஒரு சில மணி நேரங்களில் ஒன்றன்பின் ஒன்றாய் நிகழ்ந்த அந்த விநோத சம்பவங்கள் ஜெகதீசன் மீது மனோரமாவுக்கு ஆழ்ந்த ஒரு வெறுப்பை விதைத்துவிட்டது.

ஜெகதீசன் யார் என்பதை அவள் அறியாள். பிரசித்தி பெற்ற எழுத்தாளர்—ஆடம்பரமற்ற தேச சேவகர் என்றெல்லாம் அன்று கூட்டத் தலைவர் ஜெகதீசனைப் பற்றிக் கூறியதை நினைத்தபோது மனோரமாவின் உள்ளம் பொருமையால் கருகியது. பிறர் குறுக்கீடின்றி தான் வைத்ததே சட்டம் என்ற முறையில் வளர்ந்து பழகியவளாதலால் ஜெகதீசனின் துணிவான அந்தப் பரிகாசங்கள், கூட்டத்தில் ஒரேயடியாக தன் பேச்சைத் தட்டிப் பேசிய ஆணவம் இதையெல்லாம் நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் எரிந்தது.

இந்த நிலையில் தான் அன்று காலை மனோரமா ஜெகதீசனை சந்தித்து தன் வயிற்றெரிச்சல் தீர அவனைத் திட்டி அனுப்பி வைத்தாள்.

* * *

> பெண்கள் தூக்கத்தில் தங்களைப் பற்றியும், கோபத்தில் தங்கள் கணவன்மாரைப் பற்றியும் உண்மையைச் சொல்லிவிடுகிறார்கள்.
>
> —பாபுராவ்.

நமது சங்க ஆண்டு விழாவுக்கு இந்தத் தடவை ஜெகதீசனை அழைத்தால் என்ன'' என்றாள் 'மகளிர் அறிவு மன்ற' காரியதரிசி ரங்கநாயகி.

''யார் அந்த ஜெகதீசன்'' என்று இருந்தாற் போலிருந்து கூச்சல் போட்டாள் மனோரமா. அவள் அந்த மன்றத்தின் தலைவி.

அங்கே நிறைந்திருந்த ஒரு டஜன் பெண்மணிகளுக்கு இந்தக் கேள்வி விசித்திரமாகப் பட்டது.

''ஜெகதீசனைத் தெரியாதா!'' என்று வாய்விட்டுக் கூறி ஆச்சரியப்பட்டாள் ஒரு பெண்.

மனோரமா கையிலிருந்த அழகுப் பையை 'தொப்' பென்று மேஜைமீது வீசியெறிந்து ''ஊரிலிருக்கும் குப்பன்-சுப்பனையெல்லாம் எனக்குத் தெரிந்திருக்குமா என்ன?'' என்று முணகினாள்.

''அவர் ரொம்ப பிரசித்தி பெற்றவர் அம்மா.... இந்த ஊர் ஜனங்களுக்கு அவர் தெய்வம் மாதிரி....'' என்று மெல்ல ஆரம்பித்தாள் காரியதரிசி ரங்கநாயகி.

''மகளிர் மன்றத்தில் எந்த மடையனும் வந்து பேசவேண்டியதில்லை. பெண்கள் நடத்தும் இந்த மன்றத்துக்கு தலைமை தாங்க ஒரு பெண்ணையே தேர்ந்தெடுத்தால் போதும்....''

இதைச் சொல்லிவிட்டு மிருகக் காட்சி சாலையில் கூண்டுக்குள் உலாவும் சிங்கம்போல அங்கும் இங்கும் நடந்தாள் மனோரமா.

''நீங்கள்தானே இந்தத் தடவை ஒரு ஆடவரைத் தலைவராக போட்டு பெண்களாகிய நமது சாதனைகளை அவருக்குக் காட்டி ஆணுலகத்தைப் பிரமிக்க வைக்க வேண்டுமென்று கூறினீர்கள்....'' என்றாள் ரங்கநாயகி அடக்கமான குரலில்.

''சொன்னேன். அதற்காக இந்த அட்ரஸ் தெரியாத ஆசாமிகளையெல்லாம் இழுக்கச் சொன்னேனா? எனக்கு பிடிக்கவில்லை அவ்வளவுதான்''.

மனோரமாவின் விருப்பப்படி ஆண்டு விழாவுக்கு மனோரமாவே தலைமை தாங்குவது என்று ஏற்பாடாயிற்று.

''மகளிர் அறிவு மன்றம்'' முழுக்க முழுக்க மனோரமாவின் சிருஷ்டி. மேலப்பட்டியில் மேல்படியில் இருக்கும் படித்த பெண்களைக் கூட்டி வைத்துக்கொண்டு அரட்டையடிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மன்றந்தான் அது.

மனோரமா இரவு வீட்டுக்குத் திரும்பியபோது முருகானந்த முதலியார் ஏதோ ஒரு புத்தகத்தை மிக ருசியுடன் படித்துக் கொண்டிருந்தார்.

''என்ன புத்தகம் அப்பா'' என்று கொஞ்சிக் கொண்டே வந்து புத்தகத்தைப் பிடுங்கி அட்டைப் பக்கத்தைப் பார்த்த மனோரமா திடுக்கிட்டாள். ''மனிதனின் வீழ்ச்சி'' என்ற அந்த நூலின் ஆசிரியர் ஜெகதீசன்.

புத்தகத்தை மேஜை மீது விட்டெறிந்து விட்டு உம்மென்று முகத்தைக் தூக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் மனோரமா.

''ஜெகதீசன் எழுதின புத்தகம் அம்மா அது'' என்றார் முருகானந்தம் மனோரமாவின் கோபத்தைப் புரிந்து கொள்ள முடியாமல்.

''அதுதான் தெரிகிறதே'' என்று, முகத்தைச் சுளித்தாள் மனோரமா.

பிறகு இருவரும் சாப்பிட எழுந்தனர்.

* * *

மனோரமா ஜெகதீசனைப் பற்றிய சிந்தனையோடு ஒவ்வொரு தினமும் தூக்கம் பிடிக்காமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

மேலப்பட்டியில் ஜெகதீசனுக்கு மதிப்பும் கௌரவமும் இருக்கிறது என்பதை இப்பொழுது மனோரமா கொஞ்சங் கொஞ்சமாக உணர்ந்திருந்தாள். ஆனால் அவனைப் பற்றிய முழு விபரம் அவளுக்கு புரியவில்லை. யாரிடமாவது கேட்டு சுலபமாகப் புரிந்து கொண்டிருக்கலாம். அதற்கு அவளது தன்மான உணர்ச்சி இடந்தரவில்லை.

மனோரமா கல்லூரிப் படிப்பு காரணமாக நீண்ட காலம் வெளியூரில் தங்கியிருந்தவள். அதனால் தான் வசிக்கும் வீட்டின் அக்கம் பக்கத்திலிருப்பவர்களைக்கூட அவள் அறியாள். சமீப காலமாக அவளுக்கு சினேகிகள் பலர் சேர்ந்திருந்தனர். மற்றும் பெரிய மனிதர்களின் பழக்கமும் கிட்டியிருந்தது. ஆனால் இதெல்லாம் ஒரு தனி உலகம். பெரிய பதவிகளில் இருப்பவர்கள் பணக்காரர்கள் போன்ற தகுதியுள்ளவர்கள்தான் இந்தக் கூட்டத்தில் இருந்தனர். ஆகவே மனோரமாவின் கண்ணோட்டம் இந்த வட்டத்தைத் தாண்டிப் பாய சக்தியற்றிருந்தது. அதனால் ஜெகதீசனைப் பற்றி முழு விபரத்தை அவளால் பூரணமாகப் புரிந்து கொள்ள இயலவில்லை.

அன்று ப்ள்ளிக்கூடச் சொற்பொழிவுக்கு செல்லும்போது ஜெகதீசனுடன் ஏற்பட்ட மோதவினால் அவள் அவன்மீது மனக்கசப்பு அடைந்தது ஒருபுற இருக்க, அவனுக்கு ஊரில் மதிப்பும் செல்வாக்கும் இருக்கிறது என்ற உண்மைதான் அவள் மனதை அறுத்தது. பெயர்-புகழ் ஆகியவை தனக்கும் தந்தைக்கும் ஏகபோக உரிமை என்று எண்ணி வந்தவளுக்கு இந்த விஷயம் மன எரிச்சலைத்தானே தரும். ஆகவே ஏதாவது ஒரு வழியில் ஜெகதீசனுக்கு கெட்ட பெயர் வாங்கித் தந்தோ, அல்லது அவனை எக்கச்சக்கமானதொரு சூழ்நிலையில் மாட்டிவிட்டு. அவனைத் தன்னிடம் கெஞ்ச வைத்து பிறகு தன் தலையீட்டின்மீது அவன் துயரை நீக்கியோ பழி வாங்குவது என்றெல்லாம் அவள் மனம் தீவிரமான சிந்தனையில் மூழ்கியது.

(தொடரும்)

கற்பனையின் மூலம் ஒரே பெண்ணிடம் பலவித அழகைக் கண்டு பிடிக்கலாம். அதை ரசிக்கவும் செய்யலாம்.

—பால்ஸாக்

வசந்தம் வந்தது!

இதயத்துடிப்பு வளர்ந்தது; துடிக்கும் நெஞ்சோடு கல்யாணி கடிகாரத்தைப் பார்த்தாள். அது அப்போதுதான் ஆறு முறை தன் இதய ஒலியைப் பரப்பிவிட்ட அமைதியில் 'டக் டக்' கென்று சுருதி சேர்த்துக் கொண்டிருந்தது.

அந்தி மயங்கி வந்தது.

கை நொடிப் பொழுதிற்கு முன் கல்யாணி ஆனந்தவாரி தியில் மிதந்து கொண்டிருந் தாள். அவள் மகள் நளினு காலேஜ் முடிந்து சென்னையி லிருந்து 'வகேஷன்' லீவுக்கு வந்திருந்தாள். அவள்தான் முன்னைவிட எப்படி நகாசு பெற்று விட்டிருக்கிருள்! கல்லூரிப் படிப்பும் கல்லூரி நாகரிகமும் படிப்பித்த போதனையாக இருக்க வேண்டும். தன் மகள் ஆனுலும் தாய்க் கண் கூடப் படலாகாது என்பார்களே....! தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்' அவளைப் பொழுது விடியத் திருச்சியில் சேர்த்தது.

தாய் மகளை அழைத்து வர 'ஆட்டோ ரிக்ஷா'வுக்கு உத்தரவிட்டாள். பிறந்த மனை மிதித்த நளினுவை அப்பொழுது ஒன்றும் தூண்டித் துருவிக் கேட்கவில்லை பெற்றவள். பிரயாண அலுப்பு; படுத்தவள் எழுந்து குளித்து முழுகிச் சாப்பிட்டு விட்டுப் புறப்பட்டாள், தன் சிநேகிதி ஒருத்தியைப் பார்த்து வர.

'மத்தியானம் போன பெண்; பொழுது அணைந்து விட்டதே, இன்னும் வீட்டுக்கு வர ஞாபகம் இருக்காதோ' என்ற குற்றச் சாட்டை மனசில் நெளிய விட்டு ஆசையுடன் மகளின் வரவுக்

காக வாசலுக்கும் வெளிக்கு மாக கல்யாணி நடந்து கொண்டிருந்தாள். ஆனந்தம் கொழிக்க நின்ற அப்பொழுது தான் அந்த அதிர்ச்சி அவளை மோதிற்று. கை நொடிப்

பொழுதுதான் என்ருலும் அதற் குத்தான் எவ்வளவு சக்தி! அவள் முன் உலகம் ஆலவட்டம் சுற்றியது.

கைப்பிடிப்பில் கிடந்தது அந் தப் புத்தகம். மறுபடியும் கண் கள் பிரிந்துகிடந்த முதல் ஏட் டில் இழைந்தன. நீர்த் திரையிட் டது கண்ணீர். அவள் வாசித் தாள்: ''அன்புள்ள கல்யா

பூவை எஸ். ஆறுமுகம்

ணிக்கு, அன்பளிப்பு—நாக ராஜன்'' என்று ஓடியது வாச கம். தன்னைப் பார்த்துச் சிரிப் பது போலத் தோன்றியது தாகூரின் அந்த நூல். அவள் புத்தக இதழ்களை நுனிவிரலால் கோதிவிட்டாள். ஏதோ ஒன்று தரையில் விழுந்தது. எடுத்தாள்; பிரித்தாள். அது ஒரு கடிதம். வாசிக்கலானுள் கல்யாணி.

'' **அன்புள்ள நளினு,**

நீ ஊருக்குப் போனதும் என்னை மறந்துவிடாமலிருக்க வேண்டுமல்லவா? அதற்காகத் தான் இத்துடன் என் போட் டோவையும் இணைத்துள்ளேன். மறந்துவிடாமல் எனக்கு லெட் டர் போடு. உன்னைக் காண விரைவில் திருச்சிக்கு வருகி றேன்

அன்புள்ள,

சேகரன்''

நெஞ்சில் பரபரப்பு ஊறியது; கல்யாணிக்கு கடிதத்தில் குறித் திருந்த போட்டோ ஞாபகம் வந்தது. உதறினுள் புத்த கத்தை. அதில் குறிப்பிட்டபடி எந்தப் போட்டோவும் இருக்க வில்லை. 'ஒருகால் புகைப்படம் நளினு வசமிருந்தால்....' என்று எண்ணினுள்; ஊகம் 'சரி' சொல்லிற்று.

கல்யாணி மறுபடியும் கண் களைத் திறந்தாள். 'அன்புள்ள கல்யாணிக்கு, அன்பளிப்பு நாகராஜன்' என்ற வரிகள்தாம் கண்ணிலும் கருத்திலுமாகச் சிலையோடி நின்றன. அவள் கண்கள் 'மளமள'வென்று கண் ணீரைச் சிந்தின. அவள் இத யம் பெருமூச்செறிந்தது; அதில் ஆற்ருமையுடன் ஆருத் துயரம் முன் நின்று கதை சொல்லியது.

தூணுடன் தூணுகிவிட்டிருந்த அவள் தூணின் துணையைத் துண்டித்துவிட்டு ஓடினுள். தன் நினைவு மகள் நளினுவின் வருகையை நெஞ்சில் உணர்த்திற்று அவளுக்கு.

"நளினு, இவ்வளவு நேரம் என்ன அம்மா செய்தாய்? எனக்கு நீ வரும் வழியைப் பார்த்துப் பார்த்துக் கண்ணெல்லாம் பூத்துப் போய் விட்டது. இப்பொழுதுதான் நல்ல உயிர் வந்தது. காலம் ஆண்டுமாறிப் போய்விட்டது. உனக்கு ஒன்று என்ருல் உன் தந்தை கூட இல்லையே. நான்தானே எல்லாவற்றையும் கண்காணிக்க வேண்டியிருக்கிறது. வேளை தப்பி இனியும் எங்கும் இம்மாதிரி போகக் கூடாது. நளினு பெற்றவளின் சொல்லுக்கு கட்டுப்பட வேண்டாமா....? போய்க் காப்பியைச் சாப்பிடு. வேலைக்காரி காத்திருக்கிருள்...." என்று சொல்லிவிட்டு மகளை நிமிர்ந்து நோக்கினுள் கல்யாணி. அன்புடன் தன் மகளைக் கடிந்து கொண்டது சற்று எல்லை தாண்டி நின்றது போலப்பட்டது அவளுக்கு. ஆனல் மகளின் முகத்தில் தன் தவறுணர்ந்த தன்மை கோடு கோடாகப் பாவி நின்றதைத் தரிசித்தாள் தாய்.

"ஆகட்டும், அம்மா" என்று மொத்தத்தில் சொல்லிவிட்டு நகரப்போனுள் நளினு. தாய் வசமிருந்த அந்தப் புத்தகத்தைக் கண்ட அவளுக்குத் திரும்பவும் திகைப்பு வளர்ந்தது. அவள் கால்கள் பின்னிக்கொண்டன.

நளினுவின் குறிப்பை அறிந்தாள் கல்யாணி. "நளினு, இந்தா உன் புத்தகம்" என்று கூறிப் புத்தகத்தை நீட்டினுள். நளினு 'வெடுக்'கென்று புத்தகமும் கையுமாக மறைந்துவிட்டாள். கல்யாணிக்கு அந்தப் புத்தகம் தன் பார்வையை விட்டு விலகினதும், ஏனே கண்ணீர் மண்டியது.

* * *

கல்யாணியின் கண்முன் அந்தப் புத்தகம் சுழன்றது. அதில் கண்ட 'அன்புள்ள கல்யாணிக்கு அன்பளிப்பு-நாகராஜன்' என்ற அந்த வரிகள் சுழன்றன. அவள் சுழன்ருள்!

"அந்த நாளில் என் அத்தான் நாகராஜன் எனக்கு அன்பளிப்புச் செய்த இந்தப் புத்தகத்தை நான்தான் அவருக்கே திருப்பி அனுப்பிவிட்டேனே! இன்றைக்கு மீண்டும் இந்த இருபது வருஷங்கழித்து என் பார்வையில் பட்ட இப்புத்தகம் நளினுவிடம் எப்படி வந்தது?.... என்று பலவாறு அவள் தன்னுள் எண்ணிப் புழுங்கினுள். அவளுக்குக் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டுவந்தது. காலம் இடை வெளிவிட்டுப் பரப்பியிருந்த கழிந்த நாட்களை நோக்கிச் சிறகடித்துப் பறந்தது அவளது மனப்புள்.

நாகராஜனுக்கு கல்யாணி அத்தை பெண்; நாகராஜன் கல்யாணிக்கு மாமன் மகன். உறவு முறையிலும் ஒட்டும் முறை. 'அவனுக்கு அவள்—அவளுக்கு அவன்' என்ற பரிசமும் குழந்தைகள் இருவருக்கும் காலில் நகம் முளைத்த நாள் முதலாகப் போடப்பட்டதென்னவோ மெய்யிலும் மெய்யான சேதிதான்! அவர்கள் இருவரும் குழந்தைகளாவதை நிறுத்தி, அறியும் பருவத்திற்குள் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் நிலையிலும் கூட இருவர் மனமும் ஒன்ருேடொன்று நெஞ்சொடு நெஞ்சாகப் பின்னிப் பிணைந்தது. அத்துடன்

னின்ஞல் மட்டும் போதுமா? இரண்டு தரப்பு பெற்ரேர்களும் அந்நாளில் செய்துக்கொண்ட ஒப்பந்தம் கல்யாணியின் தந்தைக்குப் பிறகும் நிறைவேற்றப்பட்டது. ''குழந்தைகள் ஜாதகங்களைக் கூட அப்படிப் பிரமாதப்படுத்திப் பார்க்க வேண்டாம். மனப் பொருத்தம்தான் பிரதானம்........'' என்ற நாகராஜனின் தந்தையின் வாக்குக்குப் பதில் வார்த்தை சொல்லவில்லை கல்யாணியின் தாய். அண்ணன் சொல்வது சரி என்பது அவள் அபிப்பிராயம். வாஸ்தவம்தான் என்ற ரீதியில் நாகராஜனும் கல்யாணியும் இன்னும் பல மாகத் தங்கள் இருவரின் மனப் பொருத்தத்தை அடித்தளமிட எண்ணிஞர்கள். பிரிவு அவர்களிடையே குறைந்து வந்தது. குறு நகையும் குதூகல மொழியும், கண்ணடிப்பும் கள்ள விழிப் பார்வையும் அவர்களிடையே 'எக்சேஞ்ச்' ஆயின. பின் கேட்பானேன்! நாகராஜன் கலைப் பைத்தியம் கொண்டவன். கதை, நாவல் என்ருல் அவனுக்குப் 'பாதாம் கீர்' பருகுவதுபோல. கல்லூரி செல்லும்போது கண்ணீருடன் கல்யாணியைப் பிரியும் நாகராஜன் கல்லூரிவிட்டுத் திரும்புகாலில் ஆனந்தம் முகமன் கூற, பாவைக்கு வகை வகையான உடை வகைகள் சலசலக்க, இலக்கியச் சந்தையில் வெளி வந்த புதுப் புத்தகங்கள் புன்னகைக்க அமர்க்களமாக வந்து சேருவான். அவளுக்கும் அப்போதுதான் உடலில் உயிர் தரிக்கும்; அவனுக்கும் அப்படித்தானே!

காலத் தேருக்கு 'ஹோல்டான்' போட யாரால் முடியும்? நாகராஜனையும் கல்யாணியையும் தம்பதிகளாக்கத் திட்டமிட்டார்கள் உடையவர்களும் உரியவர்களும். அப்பொழுது நாகராஜன் பி. ஏ. எழுதிவிட்டு வந்திருந்தான். அதே சமயம்தான் திருமணச் செய்தியும் துவங்கியது. அதே கணம் தான் அந்த எதிர்பாராத சம்பவமும் நடந்தது. 'கல்யாணியைத் தான் மணக்க முடியாதென்று' இருந்திருந்தாற் போல ஒரு வெடிக்குண்டைத் தூக்கிப் போட்டான் நாகராஜன்! அது பாவம், கல்யாணியின் தலையில் 'டபீ ரென்று விழுந்து வெடித்தது. 'தனக்குத் தன் அத்தான்தான் இனி சகலமும்' என்றிருந்த அவள் ஆசைமிக்க இன்பக் கனவு கடைசியில் இப்படித் தேய்ந்து உருக்குலைந்து போகுமென்று அவள் துளியும் எதிர் பார்த்தவளல்லவே....!

நாகராஜனை அவன் பெற்ரேர்கள் கல்யாணியை மணக்குமாறு எவ்வளவோ வேண்டிக் கொண்டனர். அவன் மறுத்து விட்டான். கடைசியில் ஒட்டிய-ஒட்ட வேண்டிய இரு குடும்பங்களும் இரட்டைத் துருவங்களாகிவிட்டன. நாகராஜனும் கல்யாணியும் பிரிந்தார்கள்-பிரிக்கப்பட்டார்கள் — பிரிய நேர்ந்தது! தனக்கு அன்பளிப்புச் செய்த புத்தகம், புடவை வகையருக்களைத் திரும்ப அனுப்பிவிட்டாள் கல்யாணி நாகராஜனுக்கு. நாகராஜனுக்கு அடுத்த மாதமே பெரிய இடத்தில் கல்யாணமாகி பம்பாய் சென்றுவிட்டதாக அறிந்தாள் மூன்ருமவர் மூலமாக. கல்யாணியும் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தாள். அதிருஷ்டம் அவளை ஒருவகையில் கடைக்கண் பார்த்தது. பணக்கார வக்கீல் ஒருவருக்கு 'இரண்டாம் தாரமாக' வாழ்க்கைப்பட்டாள் திருச்சியில். இல்லற வாழ்வு

அவள் வசம் இருபது ஆண்டு அனுபவத்தை அளித்தது. அதற்குள் அவள் 'விதவைக் கோலம்' பூண்டாள். தன் ஒரே மகள் நளினிதான் அவளுக்கு எல்லாமாக நிழலாடினுள். ஆனல் நாகராஜனைப் பற்றி மட்டும் அப்புறம் அவள் காதுகளில் எந்தத் தாக்கலும் விழவில்லை. ஏனே அதைப்பற்றி அக்கரைப் படக்கூட மனம் இடம் தர ஒப்ப வில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில்தான் அந்தப் புத்தகம்—அவளுக்கு தன் அத்தானுல் என்ருே அன்பளிப்புச் செய்யப்பட்டுப் பிறகு விதி வசத்தால் கை மாறிய அதே புத்தகம் கல்யாணியின் கண்களில் அன்று பட்டுத் திர்த்தது. அப்போதைய அவள் உள்ளத்தை யார்தான் அறிய முடியும்....? வாழ்வே அறியக் கூடாததொன்றுதானே....!

* * *

ரேடியோவில் அதுதான் கடைசி நிகழ்ச்சி. இசைத் தட்டுச் சங்கீதம் நடந்து கொண்டிருந்தது.

படுக்கையில் சோர்ந்து சாய்ந்திருந்தாள் கல்யாணி. அவள் மனம் அலைகடலாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மகளை எண்ணினுள். நளினி ஆழ்ந்த நித்திரை வசப்பட்டிருந்தாள். அவள் இதழ்கள் முறுவல் கீற்றை உருவாக்கிக் கொண்டிருந்தன. ஆசைக்கனவு ஒன்றை அவள் கண்டிருக்க வேண்டும்.

கல்யாணிக்கு நேற்றுப் பார்த்த தாகூரின் அந்தப் புத்தகம் நினைவு வந்தது. அவள் மெல்ல எழுந்தாள். நளினியின் அறை அது. மேஜைமீது ஒட்டப்படாமல், ஆனல் தபாலில் சேர்ப்பதற்குரிய ஆயத்தங்களுடன் வைக்கப்பட்டிருந்தது ஒரு கவர். ஓசைப்படாமல் பிரித்தாள்.

''அன்புள்ள சேகரன்
அவர்களுக்கு,

தங்கள் குறிப்பு—நினைவுக் கடிதம் பார்த்தேன். நான் உங்களை மறப்பதா? நீல வானை நிறைமதி எங்ஙனம் மறக்கும்....? என் தந்திரம் பலித்தது. என் அன்னைக்கு அந்நாளிலே உங்கள் தந்தை அன்பளிப்புச் செய்த அந்தப் புத்தகத்தை என் அன்னையின் பார்வைக்கு இலக்காக்கிவிட்டேன். சலனம் பிறந்தது. 'நம் பெற்ருேர்' களிடையே அன்று நிலவிப்பின் அறுந்துவிட்ட அந்தப் பாசமும் பிணைப்பும் மீண்டும் நம் இணைப்பில் புத்துயிர் பெற்று நம் கனவும் பலிதமடைந்துவிட வேண்டும். நானே இதோ அம்மாவிடம் நம் காதலை விளக்கி நம் கல்யாணம் பற்

கட்டுரையாளர்களுக்கு

போதிய தபால் தலைகள் இல்லாமல் வரும் கதை—கட்டுரைகள் பிரசுரிக்கப்படாவிட்டால் திருப்பியனுப்ப இயலாது.

கதை, கட்டுரைகள் வரிசைக் கிரமமாக மிகவும் கவனிப்புடன் பரிசிலனை செய்யப்படுவதால் தகுதியுள்ளவை அவசியம் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப் படும். ஆகவே கதை—கட்டுரைகள் சம்பந்தமாக காரியாலயத்துக்கு கடிதம் எதுவும் எழுதத் தேவையில்லை.

—ஆசிரியர்.

றிய ஓர் முடிவைக் காணப் போகிறேன். அம்மா உடன் பட்டுவிடுவார்கள். நான்தானே அம்மாவுக்கு எல்லாம்! உங்கள் வசந்த வருகைக்கு இந்த வானம்பாடி ஆவலே உருவாகக் காத்திருக்கிறது....!

தங்கள்,

நளினு"

கல்யாணி நட்டுவைத்த கம்பமாக நின்ருள். மலையாகக் கனத்தது அவள் தலை. அழுந்தப் பிடித்தவாறு திரும்பினுள். என்ன ஆச்சரியம்! அங்கே கிடந்தது ஒரு போட்டோ. அதில் சேகரன் என்ற பெயர் காணப்பட்டது. அந்தப் புகைப் பட உருவத்தைக்கண் கொட்டாமல் பார்த்தாள். தன் அத்தான் நாகராஜனின் அசல் ஜாடையை அவள் இந்தப் படத்தில் பார்த்தாள். 'தன் அத்தானின் மகன்தான் சேகரன்' என்று முடிவு செய்தாள் அவள். உண்மையும் அதுதானே....!

புதையுண்ட கடந்த காலக் கனவுகளை எண்ணினுள் கல்யாணி; திடுதிடுப்பென்று சொல்லாமல் கொள்ளாமல் அறுந்துவிட்ட தனக்கும் தன் அத்தான் நாகராஜனுக்குமுள்ள பாசத்தை எண்ணினுள். மின்னுமல் முழங்கிவிட்ட இடி தன் வாழ்வை நீறுபூத்த நெருப்பாக்கிவிட்டதை அவள் மறப்பது எப்படி? வெண்ணெய் திரண்டு வருகையில் தாழி உடைந்த கதையாகத் தன்னைக் கைவிட்ட தன் அத்தானின் வஞ்சனை அவளை நெருப்பாகச் சுட்டுவிட, அந்நிகழ்ச்சி அவள் நெஞ்சத்தில் அணையாத் தீயாகப் புகைந்து வருவதை அவள் எப்படிக் கட்டுப்படுத்துவாள்?

* * *

உமா
சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை	ரூ. 3
வெளி நாடுகள்	ரூ. 4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

விளம்பர விபரங்களுக்கு நிர்வாகிக்கு எழுதவும்.

★

உமா

4/32, தாதா முத்தியப்பன் தெரு,
சென்னை-1. போன்: 2200.

துவளும் கொடி வெய்யிலில் வாடி வதங்குவதுபோல நளினு ஆனுள்.

"அம்மா, நானே உன்னிடம் சொல்ல வேண்டுமென்றிருந்தேன். என்னை மாப்பிள்ளை யாரும் வந்து பார்த்து என் கல்யாணத்தை 'செட்டில்' பண்ண வேண்டிய ஜோலியே இல்லை. நானே எனக்குரியவரை வரித்துவிட்டேன். நமக்கும் நெருங்கிய உறவினர். பெயர் சேகரன். அவர் கூட இன்று நாளை வருகிருர். அவர் யார் தெரியுமா? உன் அத்தான் நாகராஜனுடைய ஏகபுதல்வன். இழந்துவிட்ட நம் குடும்பங்கள் இணைந்து வாழ வேண்டுமென்பதே சேகரனின் தந்தையின் ஆசையாம். இதைப் பல முறை சொல்லியிருக்கிருராம். அம்மா, எங்கள் ஒன்ருன உள்ளங்களைப் பிரித்துவிடாதே...." என்று நளினு சொல்லும் போதே குறுக்கிட்டாள் கல்யாணி.

"போதும் நிறுத்து, நளினு பழைய ராமாயணம் இனி

எதற்கு? இழந்த உறவு இனி என்றுமே புத்துயிர் காண முடியாது. உன் தந்திரம், உன் கடிதம், சேகரனின் கடிதம், அவர் புகைப் படம் எல்லாவற்றையும் நான் அறிவேன். நளினு, நான் என் அத்தான் நாகராஜனை மறந்து எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. என்னை நம்பவைத்து கைவிட்ட துரோகியின் மகனுக்கா நீ வாழ்க்கைப்பட மனம் ஒப்புவேன்? ஒரு நாளும் இல்லை. நீ சேகரனை மறந்துவிடு....'' என்று கூவினள் கல்யாணி ஆத்திரம் குரலில் குதிபோட.

நளினு ஓடிப்போய் படுக்கையில் குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள். சேகரனுக்கு 'போஸ்ட்' செய்யவிருந்த கவரைச் சுக்கல் நூறாகக் கிழித்தாள். அவள் கைகள் நடுங்கின. கண்கள் மாலை தொடுத்துத் தரையில் விழுந்தன.

* * *

நாட்கள் சில வழிக்கு வழி ஈடு காட்டியவாறு ஓடின.

நளினு சதா சர்வ காலமும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகவே இருந்தாள். அவள் உண்ணவில்லை; உறங்கவில்லை. கல்யாணி 'நயம் பயமாக' எவ்வளவு சொல்லியும் நளினு கேட்கவில்லை. சிதைந்த காதல் அவளைச் சிதைத்து வந்தது. கல்யாணிக்குப் பயமாகிவிட்டது. அன்று மாலை மகளின் அறைக்குச் சென்றாள். அங்கே நளினு இல்லை, பதிலாக தாய்க்கு ஒரு கடிதம் இருந்தது.

அம்மா,

சேகரன் இல்லாத வாழ்வு எனக்கு இப்பிறப்பில் வேண்டவே வேண்டாம். சேகரனைத் தேடிப் புறப்படுகிறேன். மன்னித்துக்கொள்.

நளினு.

கல்யாணிக்குத் தலை சக்கரம் சுற்றியது. அன்றைக்குத் தன்னிடம் வாதாடிய மகளின் இதய ஒலியை நினைவூட்டிப் பார்த்தாள். இந்தக் கடிதமும் அவள் முன் பேய்ச் சிரிப்புச் சிரித்தது. அதே க்ஷணம் மின்னலொன்று அவள் மனவானில் கோடிழுத்துப் பாய்ந்தது. அடி நாளில் அவளைத் தன் அத்தான் நாகராஜன் கைவிட்டுச் சென்ற போதில் அவள் பட்ட வேதனையையும், கொட்டிய கண்ணீரையும் நினைத்துப் பார்த்தாள் கல்யாணி. அதே நிலையில் தானே இப்பொழுது தன் ஒரே மகள் நளினுவும் நிலைகுலைந்து புறப்பட்டிருப்பாள் என்ற உணர்வும் 'கிட்டி' கட்டிப் பாய்ந்தது அவள் நெஞ்சில்.

''என்னை என் அத்தான் கடைசி நேரத்தில் மணக்க முடியாதென்று கைவிட்டதற்கு, அவர் மகனிடம் நான் பழி வாங்குவதா? ஒட்டிய சேகரன்—நளினு ஆகிய இரட்டை உள்ளங்களைப் பிரிப்பதா? வேண்டவே வேண்டாம்! இதோ இப்போதே நளினுவைத் தேடி அவள் இஷ்டப்படியே சேகரனையே அவள் மணக்கச் செய்கிறேன்....'' என்று எண்ணியவளாக, மகளை எங்கும் தேடினள். கடைசியில் ரயிலில் சென்னைக்குப் புறப்படவிருந்த நளினுவைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டாள் கல்யாணி. சேகரனை மணப்பதற்கு தன் பூரண சம்மதத்தையும் தெரிவித்து வீட்டுக்குக் கூட்டி வந்தாள்

அங்கு இரண்டு கடிதங்கள் காத்திருந்தன. ஒன்று நளினுவுக்கு; மற்றது கல்யாணிக்கு.

முதல் கடிதம்:

"நளினா,

நேற்று கார் விபத்தில் அகப்பட்ட நான் ஒற்றைக் காலை இழந்து நொண்டியாகிவிட்டேன். என்னை மறந்துவிடு.

சேகரன்"

இரண்டாவது கடிதம்:

"அன்புள்ள கல்யாணி,

பல பல வருஷங்கள் மறைந்து, என்னுடைய இக்கடிதத்தைக் காணும் நீ அதிசயப்படுவாய்; ஆத்திரப்படுவாய். இல்லையென்றால், உன் மகள் நளினாவும் என் மகன் சேகரனும் தம்பதிகளாவதைத் தடுத்திருப்பாயா நீ? நான் உன்னை வஞ்சிக்கவில்லை. விதி நம் இருவரையும் வஞ்சித்துவிட்டது. என் ஜாதகத்தைப் பார்த்தவர் எனக்கு 'தாரதோஷம்' இருப்பதாகப் பயமுறுத்தினார். உன்னைக் கரம் பற்றி அதன் விளைவால் உன்னை நான் இழக்க மனம் துணியவில்லை. அன்றுபோல என்றென்றுமே நீ என் கனவுப் பதுமையாக நிலவவே நான் ஆசைப்பட்டேன். உலகின் எங்கோ ஓர் மூலையில் நீ உயிருடன் இருந்தால் என்றாகிலும் ஓர் நாள் காணலாமல்லவா? என் உடலின் உயிர்ப்பே நீயல்லவா? உண்மைக் காரணத்தை வெளியிட்டால் அதன் பலன் எந்த வகையில் நம் இருவரையும் பாதிக்குமோ என்றஞ்சியே நான் உன்னை நிராகரித்துவிட்டேன் பொதுவாக. எனக்கு வாய்த்தவளும் சேகரனை ஈன்றுவிட்ட மறு நிமிஷம் விதிவழி ஏகிவிட்டாள். கடைசியில் என் 'தாரதோஷம்' மெய்யாகிற்று. உன்னைத் துறந்த நினைவு, என் மனைவியின் பிரிவு எல்லாம் சேர்ந்து என்னைக் கிறுக்கனாக்கியது; என் செல்வக் குழந்தையையும் துறந்து கால்போன திக்கில் எங்கும் சுற்றினேன். நேற்றுத் தான் திரும்பினேன், சேகரன்—நளினா இருவரின் ஒன்றுபட்ட மனத்தைக் கேள்விப்பட்டு, உன் முகம் காண, உன்னிடம் கதை முழுவதையும் சொல்ல நான் வந்த சமயம் தான் நீ உன் மகளைக் கோபித்துக் கொண்டாய். கல்யாணி, குழந்தைகளைப் பிரிக்காதே. நாம் பிரிந்தது போதாதா? நம் பழைய பாசமும் பிணைப்பும் அவர்கள் மூலமாவது புத்துணர்வு பெறட்டும். நல்ல முடிவு என் காதில் விழச் செய். என்னை மீளவும் பைத்தியமாக்கிவிடாதே....! நளினா—சேகரன் வாழ்வில் வசந்தம் நிலவச் செய்!

நாகராஜன்"

தாயும் மகளும் 'ஹோ' வென்று ஓலமிட்டு அலறினார்கள்.

* * *

டாக்ஸி காத்து நின்றது. சேகரனைக் காணப் பட்டணத்துக்குப் புறப்படவிருந்தார்கள் கல்யாணியும் நளினாவும்—தாயும் மகளும்!

அதே சமயம் வாசலை அடைத்துக் கொண்டு வழி மறித்தாற்போல அங்கு வந்து நின்றது மற்றொரு கார். அதிலிருந்து இறங்கியவர்கள் கல்யாணியின் அத்தான் நாகராஜனும், நளினாவின் காதலுக்குரிய சேகரனும்!—தந்தையும் மகனும்!

"அத்தான்" என்று அழைத்தாள் கல்யாணி.

"சேகர்" என்று கூப்பிட்டாள் நளினா.

"கல்யாணி, அன்று நீ உன் மகளுடன் அவள் என் சேகரை

மணப்பதை மறுத்து உரையாடிக்கொண்டிருந்ததை நான் கேட்டேன். அதே சமயம் என் சேகரும் உன் ஆத்திர மொழிகளைக் கேட்டானும். அவள் தன்னை மறக்க வேண்டுமே என்பதற்குத்தான் தனக்கு விபத்தில் கால் நொண்டியாகிவிட்டதாகப் பொய் எழுதிவிட்டிருக்கிறான். நான் உனக்குக் கடிதம் எழுதிப் போட்ட பிறகு, நீ உன் மகளிடம் அவள் மனம் போல என் மகனை மணப்பதற்குச் சம்மதம் தெரிவித்ததையும் கேட்டேன். உடனே பட்டணத்துக்குப் புறப்பட்டுச் சேகரனை இட்டுவந்தேன். சற்று பின் தங்கியிருந்தால் கூட, நான் என் மகனைக் கண்டிருக்க முடியாது. உன் நல்ல முடிவைக் கேட்டதும் தான் அவனுக்குக் களை தட்டியது முகத்தில். விதி நம்மைப் பிரித்தது. ஆனால் நம் குழந்தைகள் விஷயத்தில் அனுசரணை புரிந்துள்ளது நம் பாக்கியமே! சேகரன்—நளினா ஜாதகங்கள் பெட்டியும் பேழையுமாக மணியாகப் பொருந்தியுள்ளன....'' என்று நிறுத்தினான் நாகராஜன் ஆனந்தம் குரலில் வரிசை செலுத்த.

''அத்தான், நீங்கள் தான் நம் குழந்தைகளின் கல்யாணத்தைச் சிறக்க நடத்தி வைக்க வேண்டும்....'' என்றாள் கல்யாணி, ஆனந்தக் குரலில் அன்பு வெள்ளம் பொங்கிக் கொப்புளிக்க.

அப்பொழுது தான் ஒருவரையொருவர் புதிதாகப் பார்த்துக் கொள்ளுவதைப் போல சேகரனும் நளினாவும் புன்னகையும் புது நிலவும் பொங்கப் பார்த்துக் கொண்டார்கள்!

'' அன்புள்ள ராமநாதன் அவர்களுக்கு,

தங்களுக்கு ஒரு சந்தோஷ சமாசாரம். தியாகராஜன் என்னை விவாகம் செய்துகொள்ளத் தீர்மானித்து விட்டார். எங்கள் திருமணம் அடுத்த வைகாசியில் நடப்பதாக இருக்கிறது, அவரும் தங்களுக்கு நேராக எழுதுவார். தாங்கள் வந்திருந்து என்னை ஆசீர்வதிக்க வேண்டும். இதுவரையில் தாங்கள் எனக்குச் செய்துள்ள உதவிகளை என்னால் என்றும் மறக்க முடியாது. தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றி.

—ரேவதி''

இக்கடிதத்தை மூன்றாவது முறையாகப் படித்து முடித்தான் ராமநாதன். அவனது உள்ளம்குமுறியது. கோபத்தால் உதடுகள் துடித்தன. சில நாட்களாகவே அவன் எழுதிய கடிதங்களுக்கு அவளிடமிருந்து பதில்வரவில்லை. ஆனால் ரேவதி இத்தனை நயவஞ்சகியாக மாறுவாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

அயோக்கியக் கழுதை!.... நன்றியாம் நன்றி! அவன் இவளை விவாகம் செய்துகொள்ளத் தீர்மானித்துவிட்டானாம்! இவள் - தீர்மானிக்கவில்லை போலும்!....அடிப் பாதகி! உனக்குத்தான் எத்தனை கடினமான நெஞ்சு! பேசின பேச்சுக்கள் என்ன! பசப்பின பசப்பல்கள் எத்தனை? உன் வாக்குறுதிகள் வாய்காலில் அடித்துக்கொண்டு போய்விட்டனவா?....

அவனது இதயத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. நிமிர்ந்து உட்கார்ந்து ஒரு காகிதத்தை எடுத்தான். அவனது மனக் குமுறல் பேனா முனையின் வழியாகக் கடிதத்தில் பாய்ந்தது.

''ரேவதி,

உன் விவாக ஏற்பாடு பற்றி நீ எனக்கு விடுத்த எச்சரிக்கை கிடைத்தது. நீ தாராளமாக தியாகராஜனை விவாகம் செய்துகொள். ஆனால் ஒன்று கேட்கிறேன்! கடந்த காலத்தைச் சிறிதாவது சிந்தித்துப் பார்த்தாயா?

''தாங்கள் என் உயிர், நான் உடல்! என்னை வாழ்விக்க வந்த தெய்வம் தாங்கள்! என் தெய்வத்தின் சந்நிதியில் காதல் பிச்சை வேண்டித் தவம் கிடக்

கிறேன்! அநாதையான என்னை ஏற்று ஆதரிப்பவர்கள் தங்களைத் தவிர உலகில் யாருமே இல்லை'' என்று வாய்விட்டுக் கெஞ்சின நாட்களை மறந்தே விட்டாயா?....என் நெஞ்சம் உருகியது. உன் எழிலில் என் உள்ளத்தைப் பறிகொடுத்தேன். உன் வனப்புள்ள மேனியின் ஸ்பரிசத்தில் என் மூளை கிறுகிறுத்தது. வார்த்தைகளில் தேனைக் கலந்து வழங்கினாய். நான் மனம் கலங்கினேன். உன்னை மனமாரக் காதலித்தேன்!...ஆம், இன்னும் கூட உன் நினைவை இதயத்திலிருந்து வெட்டி எறியச் சக்தியற்றவனாகத்தான் இருக்கிறேன்.

''ராயவரம் ரெயில் விபத்து நினைவிருக்கிறதா!....இரவு நடுச்சாமம். வண்டியிலிருந்தவர்கள் அயர்ந்த உறக்கத்திலிருந்தனர். திடீரென்று டமாரென்ற அண்டம் செவிடு படும்படியான ஓசை! வண்டி குலுங்கி அதிர்ந்தது. கதவுகள் படாரென்று திறந்து கொண்டன. பிரயாணிகள் தூக்கி எறியப்பட்டனர். விபத்து நேர்ந்துவிட்டது. எதிரே வந்த கூட்ஸ் வண்டியோடு மெயில் வண்டி மோதிக் கொண்டது. நான் இருந்த பெட்டிக்கு விபத் தொன்றுமில்லை. வெளியே இறங்கினேன். ஒரே அல்லோல கல்லோலம். என்ஜினும் முன்னாலிருந்த மூன்று பெட்டிகளும் தூள் தூளாகியிருந்தன. வண்டியின் கீழ் நசுங்கி மடிந்தவர்களையும் படுகாயப்பட்டுக் குற்றுயிராகத் துடித்துக் கொண்டிருந்தவர்களையும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆஹா! எத்தனை கோரக் காட்சி! நீ இரண்டாவது பெட்டியருகில் காலில் காயத்துடன் கதறிக் கொண்டிருந்தாய். அதிர்ச்சியில் என்ன நேர்ந்ததென்று புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை. உன் தாயும் தந்தையும் விபத்துக்கு இரையான விஷயம் உனக்குப் பின்னால்தான் தெரிந்தது. நீ நிராதரவாக நின்றாய். இந்த நிலையில்தான் நான் உன்னைச் சந்தித்தது.

''அழுது கொண்டிருந்த உன்னை நான் ஆச்வாசப்படுத்தினேன். உன் சோகக் கதையைக் கேட்டு என் மனம் இளகியது. வேறு உறவினரின்றி அநாதையாய்விட்ட உன்னைத் தேற்றி என் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன். தங்கள் ஒரே மகனான என் வார்த்தையைத் தட்டாமல் என் பெற்றோர்கள் உனக்கு எங்கள் வீட்டில் இடமளித்தனர். நீ எங்கள் குடும்பத்தில் ஒருத்தியானாய்.

''நான் அளவு கடந்த வாஞ்சையுடன் உன் தேவைகளைக் கவனித்தேன். நீயும் என்பால் நன்றி கலந்த நட்புப் பாராட்டினாய். நமது மனம் ஒன்றியது. நான் என்னை சுவர்க்கப் பூங்காவில் உலவும் பாக்கியசாலியாகக் கருதினேன். உன் வாக்குறுதிகளும் பேச்சும் என் எண்ணங்களை வான மண்டலத்தில் சஞ்சரிக்கச் செய்தன. மனக் கோட்டைகள் உயர்ந்து விண்ணையும் ஊடுருவிச் சென்றன.

''காலம் உருண்டது. என் விவாகப் பேச்செழுந்தது. பெற்றோர்கள் பெண் பார்த்தனர். நான் உன் பெயரைப் பிரஸ்தாபித்தேன். உன்னையன்றி வேறொருத்தியை மணக்க முடியாதென்று உறுதியாகக் கூறிவிட்டேன். தந்தை வெகுண்டார். ''ஊர் பெயர் தெரியாத அநாதைப் பெண்ணைத்தான் மணப்பேன் என்றால் உனக்கு இங்கு இடமில்லை'' என்றார். உன்னையும் உடனே வெளியேற்

றினர். நானும் வெளியேறினேன்.

''ரேவதி, அப்போது என் மன நிலை எப்படி இருந்திருக்கும் என்று சற்றேனும் சிந்தித்துப் பார்த்தாயா?.... நான் யார்பொருட்டுத் தாய் தந்தையரை உதறினேன்?.... கல்லூரிப் படிப்பே முடியாத இளைஞன் காசில்லாமல் ஒரு கன்னிப் பெண்ணை வைத்துக் காப்பாற்றுவது எங்ஙனம்? நீ என் நிலைக்கு இரங்கி 'என் தலைவிதிப்படி ஆகட்டும். நீங்கள் உங்கள் பெற்றோர்களிடம் போய்விடுங்கள்; என்னைப் பற்றி சிந்தைப்படாதீர்கள்' என்ருய். என் மனம் புழுவாகத் துடித்தது.

''கடைசியில் ரேவதி உன்னை மதுரையிலிருந்த என் நண்பன் தியாகராஜனிடம் அனுப்பினேன். எங்கள் குடும்பத்திற்கு நெடு நாளைய நண்பர்களான அவனது பெற்ருேர்கள் உனக்கு அடைக்கலம் கொடுத்தனர். அப்போது நான் எண்ணியது இது. எப்படியாவது திண்டாடி ஒரு வேலை தேடிக் கொள்வது, காலக்கிரமத்தில் பெற்ருேரின் மனம் மாறிவிடும்; என்னைக் கூப்பிடுவார்கள். அப்போது உன்னை மீண்டும் அழைத்துக் கொள்ளலாம்; என்று எண்ணினேன். அதன்படியே வேலையும் தேடிக் கொண்டேன். என் தந்தையும் என்னை வீட்டுக்கு வரும்படிக் கடிதம் எழுதியிருக்கிருர். நமக்கு நல்ல காலம் வந்துவிட்டது என்று மனம் பூரித்தேன். ஆனல் உன் கடிதம் என் மகிழ்ச்சியில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது. என் எண்ணக் கோட்டைகளை எண்ணெய் ஊற்றிப் பற்றவைத்து விட்டது. முதன் முதலில் வந்த கடிதங்களிலிருந்த 'ஆருயிர்க் காதலன்' இன்று வெறும் 'நண்பன் ராமநாத'ஞகிவிட்டேன். இவ்வுலகம் எனக்கு வெறிச்சோடிவிட்டது. இத்தனை அழகிய உடலுக்குள் இவ்வளவு கொடூரமான ஒரு ஹிருதயம் இருக்கக் கூடுமென்று என்னுல் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லையே!.... பிரமனென்னும் சிற்பி கடினமான கருங்கல்லுக்கும் அழகான பெண்ணுருக் கொடுத்துப் புவிக்கு அனுப்பிவைத்தான் போலும்! என் கதி எப்படியாவது ஆகட்டும்! என்னைப் பற்றி நீ கவலைப் படமாட்டாய்!—கவலைப் படவும் வேண்டாம். ஆனல் ஒன்று. என்னை வஞ்சித்ததுபோல் தியாகராஜனையும் வஞ்சித்து விடாதே! அவனிடமாவது நன்றி விச்வாசத்துடன் இரு!

—ராமநாதன்''

* * *

நாலு தினங்கள் நத்தை வேகத்தில் நகர்ந்தன. ராமநாதன் தபாலை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தான். ரேவதி அவனது கடிதத்தைப் படித்த பிறகு என்ன நினைத்திருப்பாள்? அவன் கிளறி விட்ட பழய சம்பவங்கள் அவளது மனத்தில் புயலை எழுப்பி விட்டிருக்கும்; அவள் தன் தவறை உணர்ந்து தீர்மானத்தை மாற்றிக் கொள்ளக் கூடும்!....

ஐந்தாவது தினம் அவன் எதிர்பார்த்த கடிதம் கிடைத்தது.

''ஆருயிர் நண்பரே,

ஆம், தங்களை வேறு விதமாக அழைக்க எனக்கு உரிமையில்லை. தங்களது கடிதத்தின் ஒவ்வொரு அக்ஷரமும் என் உள்ளத்தை ஈட்டிபோல் குத்து

கின்றன. தங்கள் எழுத்துக்கள் என்னை எள்ளி நகையாடுகின்றன. 'நீ வஞ்சகி! துரோகி!' என்று என்னைக் குற்றஞ்சாட்டி ஏசுகின்றன! பழைய சம்பவங்கள்எதையும் நான் மறந்தவளல்ல. இறக்கும் வரையில் என்னால் மறக்கவும் முடியாது. எனினும் சந்தர்ப்பங்கள் என்னைத் தங்களிடமிருந்து பிரித்துவிட கங்கணம் கட்டிகொண்டன. நான் மதியிழந்து விதியின்சுழலில் சிக்குண்டேன்! என் மனம் கூசுகிறது!.... நடுங்கும் கரம் மேலே எழுத மறுக்கிறது!....எனினும் அநாதையாகக் கிடந்த என்னை ரக்ஷித்த தங்களிடம் என் குற்றத்தை ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது! நான் சூழ் நிலையின் சூழ்ச்சிக்கு அடிமையானேன்; அறியாமை என்னை ஆட்கொண்டுவிட்டது! 'தாய்மை'யைத் தழுவி நிற்கிறேன்!

''தியாகராஜன் தங்கள் நண்பர். மிக்கநல்லவர். அவர் மீது நான் குறைகூற மாட்டேன். தவறில் எனக்கும் பங்குண்டு. என்னைக்கைவிடாமல் ஏற்றுக்கொள்ள இசைந்த அவரது பெருந்தன்மையைப் போற்றாமல் முடியாது.

''தங்களது ஹிருதய மென்னும் புனிதமான காதற் கோயிலின் தலைவாசலை மிதிக்கக்கூட எனக்கு இன்று யோக்கியதை இல்லை. என்னை

மறந்து விடுங்கள்! மன்னித்து விடுங்கள்.

தங்கள் நன்றி கெட்ட
ரேவதி.

* * *

நாட்கள் உருண்டன. காலமென்னும் சைத்ரிகன் இயற்கைப் படுதாவின்மீது தன் கைத்திறனைக் காட்டினன். மரங்கள் இலைகளைப் பொல பொலவென்று உதிர்த்தன. புத்தாடை போர்த்திக்கொண்டு தென்றலில் உல்லாச நடனம் புரிந்தன, பூத்துக் குலுங்கிப் புன்னகை செய்தன. வசந்தம் மறைந்தது. சுகத்தைத் துக்கம் தொடர்வது போல் கடுங்காற்று அவற்றைக் கவலையுறச் செய்தது. அவற்றின் லளிதமான நடனம் ஊழிக் கூத்தாக மாறியது. விண்ணுலகம் வெகுண்டது. அவற்றின் துயரத்தைத் துடைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டது போல் முகில்கள் ஒன்றுகூடிக் கர்ஜித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றின. அமிர்த வர்ஷத்தைப் பொழிந்து அவற்றை ஆச்வாசப் படுத்தின. இப்படியாகப் பருவ காலங்கள் மாறி மாறித் தங்கள் கடமையை நிறைவேற்றின. நான்கு ஆண்டுகள் விரைந்தோடின.

மனித வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்படுவதற்கு கல்ப காலம் வரை காத்திருக்கத் தேவையில்லை. நியதியின் ஆணையை நிறைவேற்ற நிமிஷ நேரமே போதுமானதென்றால் இந்நான்கு வருடங்களில எது தான் நடக்க முடியாது? சாம்ராஜ்யங்கள் சரிந்து விழுகின்றன. ஊர் பெயர் தெரியாதவர்கள் சமுதாயத்தின் உச்சாணி நிலைக்கு வந்துவிடுகின்றனர். சம்சாரி சன்னியாசியாகிறான். சிலசமயம் சந்நியாசியும் சம்சாரியாகிறான்.

ராமநாதனின் வாழ்க்கை உருத்தெரியாமல் மாறிவிட்டது. ரேவதியின் கடிதத்தைப் படித்த பிறகு அவனுக்கு உலகமே வெறுத்துவிட்டது. தாய், தந்தை, நண்பன், காதலி என்பதெல்லாம் ஏமாற்று வித்தைகள். காதலும் ஆசாபாசங்களும் மனித உள்ளத்தின் வெறும் கற்பனைகள்! மனப்பிராந்தி! என்ற முடிவுக்கு வந்தான். மனத்தில் தீவிர வைராக்கியம் பிறந்து விட்டது. வேலையைவிட்டு—ஏன் ஊரையே விட்டுக் கிளம்பினன். இன்று அவனைப் பார்ப்பவர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடியாது.

* *

கட்டாந் தரையாக

கிடந்த அந்த ஆற்றங்கரையில் ஒரு அழகான சிறு ஆச்ரமம் காக்ஷியளிக்கிறது. அதன் சூழ் நிலையில் ஒரு தெய்விகத்தன்மை தென்படுகிறது. சாதுராமானந்தர் இன்று அந்தப் பிராந்தியத்திலேயே ஜனங்களின் பக்திக்கு உரியவராக இருந்தார். பித்தன் போல் சுற்றிக்கொண்டிருந்த அவருக்கு யாரோ ஒருவர் ஆசிரமம் அமைத்துக் கொடுத்தார். அவருக்குச் சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொள்ள எவருமில்லை. சுவாமியார் பெரிதும் ஏகாந்தத்தையே விரும்பினர். யாரிடமும் அதிகம் பேசுவதில்லை. அப்படிப் பேசினலும் ஒன்றிரண்டு வார்த்தைகள். ஊரார் அவரை மௌன சாமியார் என்றனர். அவரது கம்பீரமான தோற்றம் எவரையும் எளிதில் வசீகரித்தது. அந்தப் பால சன்னியாசியின் முகத்தில் வைராக்கியத்தின் தேஜஸ் ஜொலிப்பதாகக் கூறிக்கொண்டனர்.

மாரிக்காலம். இரவு நடுச் சாமம். வானம் கருத்து இருண்டு நீருண்ட முகில்களால் மூடப்பட்டுக் கிடந்தது. இடியின் பயங்கரமான கர்ஜனைக்குக் கடுங்காற்றின் அட்டகாசம் சுருதி போட்டது. ராமானந்தர் ஆசிரமத்தில் தன்னந்தனியே உட்கார்ந்து கண்களை மூடியிருந்தார். மங்கலாக எரிந்துகொண்டிருந்த சிறு விளக்குக் கெதிரே ஆத்மவிசார சம்பந்தமான ஒரு புத்தகம் திறந்தபடி கிடந்தது.

அன்று பிற்பகலில் சுமார் முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞனெருவன் அவரைத் தரிசிக்க வந்திருந்தான். அவனோடு ஒரு இளம்பெண் கைக்குழந்தையோடு வந்தாள். நான்கு ஆண்டுகளுக்குப் பின் சுவாமியாரின் மனம் முதல் முறையாகத் துணுக்குற்றது. அவர் வந்தவனையும் அப்பெண்ணையும் மாறிமாறிப் பார்த்தார்.

"இவள் என் மனைவி" என்ருன் இளைஞன். சுவாமியார் பையிலிருந்து விபூதியை எடுத்து நீட்டினர்.

புறப்படும் போது அவ்விளைஞன் சுவாமியாரைத் தனிமையில் ஒரு கேள்வி கேட்டான்:

"சுவாமி, ஒருவன் தன் அத்தியந்த நண்பனுக்குத் தீங்கிழைத்துவிடுகிருன். பிறகு அதன் பயனக அல்லும் பகலும் மனச் சாந்தியின்றித் தவிக்கிருன் என்ருல் அதற்குப் பிராயச்சித்தம் என்ன? சாந்தி கிடைக்க ஏதேனும் மார்க்கமுண்டா?"

சுவாமியார் கூறினர் "தான் செய்த தவறை உணர்ந்து இரக்கப்படுவதே மேலான பிராயச்சித்தம். அதைத் தைரியமாக, சம்பந்தப்பட்ட நண்பனிடம் ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டுவிட்டால் மனம் சாந்தியடைந்துவிடும்!"

"அந்த நண்பனின் இருப்பிடம் தெரியாத நிலையில்?...."

"அந்நிலையில் ஆண்டவனிடம் மன்னிப்புக் கேள்!....தவறு செய்த குழந்தை அந்தரங்க சுத்தியோடு பிரார்த்திக்கையில் அந்தத் தயாபரனின் உள்ளம் உருகாமலிராது."

சுவாமியாரின் மனக் கண்ணெதிரே, இந்த பிற்பகல் நிகழ்ச்சி மீண்டும் மீண்டும் தோன்றியது. ஏதேதோ கேள்விகள் எழுந்தன. "அப்பனே! ஆத்ம விசாரணை செய்துகொண்டிருந்த எனக்கு இந்த இன்னல்கள் ஏன்? மாயையை அறுத்தெறிய முயலுகையில் அவ்வலையை என்

காலடியில் விசாதே!'' என்று வாய்விட்டு முணு முணுத்தார்.

வெளியே சோவென்று பெரு மழை கொட்டத் தொடங்கியது. காற்றில் ஆசிரமத்தின் மூங்கில் தட்டிக் கதவு திறந்து கொண்டு சடசடவென்று மழைச் சாரல் உள்ளே வரத் தொடங்கியது. கதவைத் தாளிடுவதற்காக எழுந்து சென்றார் சன்னியாசி. வெளியே கதவோரமாக யாரோ ஒண்டிக் கொண்டு நிற்பதுபோலிருந்தது. பளீரென்று வெட்டிய மின்னல் கண நேரம் பூமியை ஒரே ஜோதி வெள்ளத்தில் மூழ்கடித்துவிட்டு மறைந்தது.

அங்கே நின்றிருந்தது ஒரு இளம் பெண். அவளது செக்கச் சிவந்தமேனி ஒரே தெப்பமாக நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. கட்டியிருந்த கந்தல் புடவை நனைந்து உடலோடு பூசினாற்போல் ஒட்டிக் கொண்டிருந்தது.

''யார்?''

''..........''

''யாரம்மா? ஏன் மழையில் நிற்கிறாய்?''

''போக்கிடமற்ற அபலை சுவாமி,....மழைக்கு ஒண்டியிருக்கிறேன்''

அவளது நளினமான அந்தக் குரல் சுவாமியாரின் ஹிருதயத் தந்திகளைச் சுண்டிவிட்டது. அவர் அன்று இரண்டாம் முறையாகத் திடுக்கிட்டார். அவரது குரல் மாறியது.

''வா அம்மா, உள்ளே வந்துவிடு; மழையில் நில்லாதே!''

அவள் தயங்கிக் கொண்டே உள்ளே வந்தாள். நனைந்த ஆடையினின்றும் மழை நீர் அருவிபோல் வழிந்து உள்ளே



''என்னாப்பா ஒரே 'டு லெட்' போர்டா எழுதித் தள்ளுறே?''

''ஆந்திர ராஜ்யம் பிரிஞ்ச பிறகு இந்த போர்டுகளுக்கு ரொம்ப கிராக்கி இருக்குங்க....அதனாலே தான்...''

இருந்த மண் தரையை நனைத்தது.

''சுவாமி, நான் வெளியிலேயே நிற்கிறேன். என்னால் உங்களுக்கு அசௌகரியம் வேண்டாம்.''

அவர் மௌனமாக, நீண்ட காவி வஸ்திரம் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினார் ''இதோ அந்தத் தட்டிக்கு அப்பால் சென்று முதலில் இதை உடுத்திக் கொண்டு வா. ஈர ஆடையோடு நிற்காதே!'' என்றார்.

அவள் தயங்கினாள். ஏதோ பேச வாயெடுத்தாள்.

சுவாமியார் இலேசாகச் சிரித்துக் கொண்டே கூறுவார். ''பெண்ணே, இத்துறவியிடம் வேறு துணிதான் ஏது? ஈர வஸ்திரத்தோடு நிற்பது சரியல்ல அதோ மூலையிலுள்ள சுள்ளிகளைக் கொளுத்தி ஆடைகளை உலர்த்திக்கொள். மழை நின்ற பிறகு இந்தக் காவித்

பணம் அழகான நாயை விலைக்கு வாங்கிவிடும். ஆனால் பணத்தால் அதன் வாலாட்டு தலைப் பெற முடியாது.

—ஹோன் பில்லிங்ஸ்.

துணியை ஆற்று வெள்ளத்தில் எறிந்துவிட்டுப் போகலாம்''

சிறிது நேரத்திற்குள் உடை மாற்றிக் கொண்டு வந்த அவள் சாக்ஷாத் ஒரு சன்னியாசினியைப் போல் காக்ஷியளித்தாள் மழை இன்னும் ஓயவில்லை. ஆற்றில் புரண்டோடிய வெள்ளத்தின் பேரொலி மழையோசையுடன் இழைந்து கேட்டது.

சுவாமியார் உட்காரச் சொன்னார். அவள் பயபக்தியுடன் சற்றுத் தொலைவில் உட்கார்ந்தாள்.

''உனக்கு உற்றார் உறவினர் களில்லையா?''

''சுவாமி, நான் ஒரு அநாதை. என் பெற்றோர்கள் ரயில் விபத்தில் மாண்டனர்''

''உம்....''

அவளது குரல் கம்மியது. ''பிறகு....சுவாமி, என் கதை சோகம் நிறைந்தது....நான்...''

''பெண்ணே, சோகமென்பதெல்லாம் மனக்கண்ணின் கோளாறு. சரியான கோணத்திலிருந்து நோக்கினால் உலகில் துக்கமென்றும் சுகமென்றும் இரண்டுபட்ட நிலை தென்படாது.... தைரியமாக உன் கதையைச் சுருக்கமாகக் கூறு!.... உன் மனத்திற்குச் சாந்தி கிடைக்கும்'' என்றார் சுவாமியார். அவள் தன் சரிதையைச் சொல்லலுற்றாள் :

''சுவாமி நான் ஒரு பாபி. எனக்கு அடைக்கலமளித்து ரக்ஷித்தவரை, என்மீது உயிரையே வைத்திருந்தவரை உதாசீனம் செய்தேன்.... ராமநாதன் என் பொருட்டுத் தன் பெற்றோர்களையும் தியாகம் செய்தார். வீடு துறந்து வெளிவந்தார். தமது நண்பன் தியாகராஜனிடம் என்னைச் சிறிது காலத்திற்கு அனுப்பி வைத்தார்.

''என் மனம் தியாகராஜனின் ஐச்வரியத்தைக் கண்டு பேதலித்தது. 'ராமநாதனிடம் சல்லிக் காசு கிடையாது. பெற்றோர்கள் அவனை இனி சேர்த்துக்கொள்ளப் போவதில்லை. அவனிடம் ஒரு நன்மையையும் இனி உன்னால் எதிர்பார்க்க முடியாது' என்றார் தியாகராஜன். அவர் என்னை விவாகம் செய்து கொள்வதாக வாக்களித்தார். நான் அவரது பேச்சில் மயங்கி அவரது சொற்படியே ராமநாதனுக்குப் பொய்க் கடிதம் எழுதினேன்.... நான்.... நான் கர்ப்பிணி!.... பதிதை!.... என்று பொய் கூறி அவரை ஏமாற்றினேன்!—அவர் என் நினைவை மறந்து விடட்டும் என்று!....''

''பிறகு?''

''பிறகு என்ன. நான் வாழ்க்கையையே பணயமாக வைத்து விதியோடு சதுரங்கமாடினேன். படுதோல்வியடைந்தேன்; வஞ்சிக்கப்பட்டேன்!.... கடைசியில் தியாகராஜன் என்னைத் தன் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ள விரும்பவில்லை!.... அவரது மனத்திலே தீய எண்ணங்கள் உதயமாயின!''

சுவாமியார் பெருமூச்சு விட்டார்.

"நான் அங்கிருந்து வெளியேறினேன். ரயிலேறி ராமநாதனைத் தேடிச் சென்றேன்—உண்மையைக் கூறி மன்னிப்புக் கோர. ஆனால் அவர் அதற்கு முன் அங்கிருந்து எங்கோ கிளம்பிவிட்டார்! போன இடம் தெரியவில்லை சுவாமி.... அவரது வாழ்க்கையை நாசப்படுத்த நான் காரணமாக இருந்தேன். எனக்கு எவ்வுலகிலும் மன்னிப்பு கிடையாது".

"பிறகு?...."

"பிறகு என்ன சுவாமி, நான்கு ஆண்டுகளாகச் சுற்றியலைகிறேன். சிறிது படித்திருக்கிறேன். வேலை செய்து வயிற்றைக் கழுவலாமென்றால் என் வாலிபமும் திக்கற்ற நிலையும் எனக்குச் சத்துருக்களாகக் குறுக்கிடுகின்றன. எங்கும் நிலைத்திருக்க முடியவில்லை. உண்மையை உதாசீனம் செய்தேன். பொய்யை சாஸ்வதமான சத்தியம் என்று நம்பினேன். அதன் பலனை அனுபவித்துவிட்டேன். ஒரு கவளம் சோற்றிற்கும் உடுக்கப் பழம் கந்தலுக்கும் ஏங்கி ஊர் ஊராகச் சுற்றினேன். என் சுவாமியை எப்படியாவது கண்டுபிடித்து அவரது மன்னிப்பைப் பெறாமல் தற்கொலை செய்து கொண்டு உயிர்விட மனம் வரவில்லை! இப்போதும் அதே சலித்துப்போன மன நிலையில் தான் ஆற்றை நோக்கி ஓடிவந்தேன். மீண்டும் ஏதோ ஒரு சபலத்துடன் துணிவின்றி ஒதுங்கி நின்றேன்...."

சுவாமியார் தொண்டையைக் கனைத்தார். ஏதோ சொல்ல வாயெடுத்தார். சரியாகப் பேச முடியவில்லை....

"ரேவதி!...."

அவள் திடுக்கிட்டாள். ஒரு க்கணம் வாயடைத்துப்போனது. கண்களை மலர மலர விழித்துப் பார்த்தாள். அந்தப் பழக்கமான குரல்!....தன் பெயரைச் சொல்லி அன்புடன் அழைக்கும் அந்தத் தோரணை!....

மறுக்கணம் "சுவாமி!" என்று கதறிக் கொண்டே ராமானந்தரின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அவள்.

"சுவாமி, கடைசியில்....இந்தக் கோலத்திலா?"

அதற்கு மேல் அவள் பேச்சற்றுப் போனாள்.

ராமானந்தர் நிதானமாகப் பேசினார். அவரது பேச்சில் சாந்தமும் உறுதியும் தொனித்தன.

"பெண்ணே, எழுந்திரு.... ராமநாதன் உன்னை என்றோ மன்னித்துவிட்டான்!....வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே! தற்கொலை செய்து கொள்ள நினைப்பதே பாபம்!.... ஆத்மா ஆண்டவனுடையது. மனிதனால் அழிக்க முடியாது. தற்கொலை செய்து கொள்வதால் உயிர் உடலினின்றும் நீங்குகிறது. ஆனால் அப்படி உயிரைப் பிரிக்க மனிதனுக்கு

> குழந்தைகளின் புன் சிரிப்பால் பயனென்ன? அதன் தாயைக் கேட்டால் தெரியும். மற்றவர்களுக்கு அதன் மகிமை தெரியாது. கலைகளால் பயன் என்ன என்றால் ரசிகனைக் கேட்டால் தெரியும். மற்றவர்கள் கலையை அனுபவிக்க முடியாத கசட்டு நெஞ்சினர்.
>
> —ச. து. சு. யோகி

என்ன அதிகாரம்? அத்தகைய நினைவு வெறும் கோழைத்தனமாகும்!....''

ரேவதி விசித்தழுதாள். விம்மினாள். கதறினாள். நான்கு ஆண்டுகளாக ராமநாதனிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தவைகளெல்லாம் அறவே மறந்து போயின. அவளது மூளை சூன்யமாகிவிட்டது.

'' சுவாமி !....''

''ரேவதி!....கடந்த காலத்தை மறந்துவிடு! இன்று இவன் சன்னியாசி!....இதோ பார் வெளியே மழை நிற்கப் போகிறது!....''

அவள் அவரை நிமிர்ந்து நோக்கினாள். சுவாமியார் தொடர்ந்து கூறினார்.

'' ஆம்! பேசாமல் புறப்பட்டுச் செல்!....ஏதேனும் ஒரு அநாதை ஆசிரமத்தில் அடைக்கலம் புகுந்து உன் வாழ்நாளை சேவைக்கு அர்ப்பணம் செய்!''

'' அப்படியானால்!....எனக்கு''

'' சகோதரி, நீ கேட்கப் போவது எனக்குத் தெரியும்!.... உன் ராமநாதனுக்கு ஏதாவது பிரதியுபகாரம் செய்ய நீ விரும்பினால் இதோ உனக்கு ஒரு சந்தர்ப்பம். இந்த ஆண்டியின் வைராக்கியம் நிலை பெற்றிருக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தனை செய்! மனத்தைத் தளரவிடாதே!''

மழை நன்றாக ஓய்ந்துவிட்டது. நதியின் பிரவாகம் ஹோ என்ற இரைந்து கொண்டிருந்தது. ராமானந்தர் எழுந்தார். கதவைத் திறந்தார்.

அவள் பதில் பேசாது எழுந்தாள். அவரது பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அவளது உஷ்ணமான கண்ணீர் அவரது பாதங்களை நனைத்தது.

'' திட மனத்துடன் செல்!'' என்றார் துறவி.

அவள் ஆசிரமத்தை விட்டு வெளியேறி அந்தகாரத்தில் மறைந்தாள்.

* * *

மறுநாட் காலையில் ராமானந்தரைத் தரிசிக்க வேண்டி வந்தவர்கள் ஆசிரமம் காலியாகக் கிடந்ததைக் கண்டனர்.

தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புஸ்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசையில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும், பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஒரு பெரிய பைண்டு புஸ்தகம்.

விலை ரூபாய் 5—0—0

தையல் கட்டிங் & மானுவல்!

இப்புத்தகத்தின் மூலம் யார் வேண்டுமானாலும், எவர் உதவியைக்கொண்டும் தையல் வேலையை சுலபமாகக் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபாய் 2—8—0

பீதாம்பர ஜாலத்திரட்டு
(MAGIC BOOK)

பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் அழகிய ஸ்திரீகளைக் காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம், முதலிய 1500 ஜாலங்கள் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபாய் 2—4—0

VANI BOOK DEPOT (U)
Post Box No 239, MADRAS-1.

மதிப்புரை

வாழ்வு மலர்ந்தது (சிறு கதைகள்) இந்நூலின் ஆசிரியர் **க. கணபதி** இப்பொழுது நம்மிடையே இல்லை. ஆனால் அவர் விட்டுச் சென்ற இலக்கியச் செல்வம் இருக்கிறது. திரு. **தோ. ந. வீரராகவன்** கலைஞர் க. கணபதியின் இலக்கியச் செல்வத்துள் சிலவற்றை பாரறிய புத்தக உருவில் அளிப்பதன் மூலம் தமிழ்த்துறைக்கு அரிய ஒரு சேவை செய்கிறார். உணர்ச்சித்துடிப்பு நிறைந்த கணபதியின் கதைகள் தமிழர்களிடையே பிரசித்தம் பெற்றவை. எனவே தனியாக அவற்றிற்கு மதிப்புரை தேவையில்லை. இக்கதைத் தொகுதியில் பதினொரு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. பதினொரு வகையில் இவை சிறப்புற்று விளங்குகின்றன என்றே கூறலாம்.

ஆசிரியர்: க. கணபதி; இமயப் பதிப்பகம்; நாகப்பட்டினம். விலை ரூபாய் இரண்டு.

* * *

அவளுக்கு.... (நாவல்) இந்நூல் ஒரு புது முயற்சி. **அகிலன், செல்வம், சோணு, ஆர்வி** ஆகிய நான்கு ஆசிரியர்கள் ஒருவர்க்கொருவர் எழுதிக் கொள்ளும் கடிதங்களின் மூலம் ஒரு நாவலை உருவாக்கியிருக்கின்றனர். இந்நாவலின் கதாபாத்திரங்கள் எல்லோரும் சிதைந்த காதலின் சிதறுண்ட உருவங்களாகக் காட்சியளிக்கின்றனர். காதலின் தோல்விக்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான மனோபாவம் கொண்டு திண்டாடுகின்றனர். கடிதங்கள் சிக்கலைத் தீர்க்கின்றன. கதையமைப்பு சுவையுடன் செல்லுகிறது. நல்ல முயற்சி.

ஆசிரியர்கள்: அகிலன், செல்வம், சோணு, ஆர்வி; பழனி பிரசுரம், மணிக் கூண்டு, புதுக்கோட்டை; விலை ரூபாய் ஒன்று.

* * *

(1) உள்ளங்கவர் கள்வன் (2) பின்னு செஞ்சடை (திருமுறை மலர்கள்) தமிழரின் பழம் பெரும் இலக்கியங்கள் தமிழ் மக்களின் கைக்கெட்டா உயரத்தில் உயர்ந்து சென்று கொண்டிருக்கும் காரணத்தால் தமிழின் பெருமையை தமிழரே உணர முடியாத வருந்தத்தக்க சூழ்நிலை இன்று தமிழகத்தில் நிலவியுள்ளது. இந்த நிலையை மாற்றும் எண்ணத்துடன் **திரு. கி. வா. ஜெகன்னாதன்** அவர்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களை அழகிய எளிய உருவத்தில் சாதாரணத் தமிழ் மக்களிடை உலவவிடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அந்த முயற்சியின் தொடர்ச்சிதான் மேற்கண்ட இரண்டு நூற்களும். ''பன்னிரண்டு திருமுறைகள்'' என்று போற்றப்படும் பண்டைய தமிழ் இலக்கிய வரிசைக்கு தொடர்ந்து விளக்கம் கூறும் முயற்சியின் முதலிரண்டு படிகளே இந்நூற்களாகும். முகவுரையில் ஆசிரியர் கூறும் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை.

ஆசிரியர்: கி. வா. ஜெகன்னாதன்; அமுத நிலையம், தேனாம்பேட்டை, சென்னை—18. ஒவ்வொன்றும் விலை ரூபாய் ஒன்று.

* * *

பிரார்த்தனை (கவிதைகள்) ''மனத்திற்கும் ஆத்மாவிற்கு

மிடையே நடக்கும் போராட்டம் மனிதனுக்கும் கடவுளுக்கும் நடக்கும் போராட்டம் போன்றது'' என விளக்கம் கூறும் ஆசிரியர் இறைவனை நோக்கி மன முருக, இலக்கிய ரசம் ததும்ப பிரார்த்தனை செய்கிறார். திரு. பாலயோகியின் பிரார்த்தனைகள் கவி தாகூரின் கீதாஞ்சலியை நமக்கு நினைவுறுத்துகின்றன.

ஆசிரியர்: பாலயோகி; தென்றல் மன்றம், கூத்தாநல்லூர் (தஞ்சை ஜில்லா). விலை அணா எட்டு.

* * *

இதயக் குமுறல் (கவிதைகள்) ''....எத்தனையோ பெருங் கவிஞர் உங்களின்முன் இருக்கின்றார்என்பதையும் மறுக்கவில்லை, எத்தனையோ அருங்கவிகள் உங்கள் நெஞ்சில் இருக்கின்றதென்பதையும் மறக்கவில்லை; என்றாலும், எந்தனுக்கும் இடமளிப்பீர்....'' என்று பணிவன்புடன் தொடங்கும் ஆசிரியர், அடுத்தாற்போல ''எட்டைப் பிரித்து எழுத்தால் நிரப்பும் எழுதுகோல் வீரர்களே!—சொந்த வீட்டைத் திருத்தாது நாட்டைத் திருத்த விரைந்திடும் சூரர்களே....'' என்று சூறாவளி வேகத்தில் சீறிப் பாய்கிறார்; உணர்ச்சி வேகமும், புரட்சி மனப்பான்மையும் கவிதைகளில் குமுறிக் கொப்பளிக்கின்றன.

ஆசிரியர்: சாரணபாஸ்கரன்; தென்றல் மன்றம், கூத்தாநல்லூர். விலை ரூபாய் ஒன்றேகால்.

* * *

குறள் வழி (ஆராய்ச்சி நூல்) திருவாளர்கள்: மு. வரதராசனார், டி. பி. மீனாட்சிசுந்தரம், பி. ஸ்ரீ. ஆகியோர் குறள் வழியைப் பின்பற்றும் மூன்று பழம் பெரும் ஆசிரியர்களைப் பற்றியும், அவர்கள் அவ்வழியை பின்பற்றும் முறையைப் பற்றியும் விளக்கிக் கூறுகின்றனர்.

ஆசிரியர்கள்: மு. வரதராசனார், டி. பி. மீனாட்சிசுந்தரனார், பி. ஸ்ரீ.; இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம். விலை அணா எட்டு.

* * *

காங்கிரஸ் எங்கே செல்லுகிறது? காங்கிரஸ் தடம்புரண்டு செல்லுகிறது என்பது பொதுமக்களுக்கு இன்று பொதுவாகப் புரிகிறது. அது எப்படிப் புரண்டு விட்டது என்பதை புள்ளி விவரங்கள், ஆராய்ச்சிகள் மூலம் அன்பர் ரசிதாசலம் தெளிவுற விளக்குகிறார். சிறிய நூலானாலும் அருமையான தொரு ஆராய்ச்சி நூல். காலத்தின் கவனத்தைக் கவரக் கூடியது.

ஆசிரியர்: பி. எஸ். ரசிதாசலம் பி. ஏ. காந்தி நாடு வெளியீடு, கோயமுத்தூர்: விலை அணா இரண்டு.

வரப்பெற்றோம்

கனவும் காதலும் (சிறுகதை) ஆசிரியர்: தி. ச. வாசுதேவன்; கேள்வி பதிப்பகம், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சிராப்பள்ளி. விலை அணா மூன்று.

வெற்றி முரசு (சிறு நாவல்) ஆசிரியர்: என். பத்மநாபன்; பத்மா பப்ளிகேஷன்ஸ், 32/934 பாட்டு விளாகம் தெரு, செந்திட்டை, திருவனந்தபுரம். விலை அணா இரண்டு.

குழந்தைகள் இலக்கியம் (கவிதைகள்) ஆசிரியர்: கவிஞர் தமிழண்ணல்; உண்மைப் பிரசுரம், தேவகோட்டை. விலை அணா ஆறு.

அழகு

கலைப்பித்தன்

அழகிற்கு ஆசைப்படாதவரே அவனியில் இல்லை. அழகு என்ற வார்த்தையே நமக்கு அலாதி மகிழ்ச்சியை ஊட்டுகிறது; மயங்க வைக்கிறது. மனத்தைக் கொள்ளை கொள்கிறது. கண்ணையும், கருத்தையும் தன்பால் கவர்ந்து கொள்வதே அழகு.

பாரதியார் சொன்னார், 'மாதர் முகத்திலே—மலரிலே—நீல வானிலே—அழகு முழுவதுங் குடிகொண்டிருக்கிறது' என்று. அழகை எப்பொழுதும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது. 'அழகுள்ள மனைவியும், அழகான குதிரையும் உடையவனுக்குப் பகைவர் பலர் உண்டு' என்று பகர்கிறது ஆங்கிலப் பழமொழி ஒன்று.

பெண்களிலே சிலர் கையிலே சீப்பையும், எண்ணெயையும், பவுடரையும் எடுத்துக்கொண்டு கண்ணாடிக்குமுன் நின்றுவிட்டால் அவர்கள் எப்பொழுது வெளியே வருவார்களென்று கடிகாரத்தையல்ல-காலண்டரைத்தான் பார்க்க வேண்டும்.

அமெரிக்காவில் பெண்கள் தம்மை அழகு செய்து கொள்ள மாத்திரம் 1938ம் வருஷத்தில் 350 பவுன் ஒவ்வொரு பெண்ணும் செலவழித்துள்ளாள் என்று புள்ளி விவரம் பேசுகிறது! நாகரிகம் உச்ச நிலை அடைந்துள்ள இந்த ஐம்பத்து மூன்றாம் ஆண்டிலே அவர்கள் எத்தனை பவுன் செலவழிக்கின்றனர் என்பதைக் கணக்கெடுக்க முடியுமோ, என்னவோ?

பெண்கள்தாம் அழகுக்காகப் பணம் செலவு செய்கின்றனர் என்பது அல்ல; ஆண்களும் கூடத்தான். ஆண், அழகற்றவனாக இருந்தாலும் கூட தனக்கு வரும் மனைவி அழகுள்ளவளாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறான்.

'ஒரு பொருளை அடைந்தவுடன் இருக்கும் அழகைவிட அதை அடைய வேண்டும் என்று முயன்று கொண்டிருப்பதில்தான் அது மிகவும் அழகுள்ளதாக இருக்கும்' என்கிறார் செகப்பிரியர்.

'சகுந்தலா உன் பெயரே அழகு' என்கிறார் காளிதாசனின் சாகுந்தலம் நாடகத்தைப் படித்த ஜெர்மன் கவி கெதே.

அமெரிக்காவிலே அதிக அழகிகளாகச் சிலரைப் பொறுக்கியெடுத்து அவர்களைத் தட்டுகளில் முத்தமிட செய்து, பின்னர் அத்தட்டுகளைச் சோதித்துப் பார்த்ததில் அந்த அழகிகளில் பலருக்குப் பயங்கரத் தொற்று நோய்க் கிருமிகள் இருந்ததாக வைத்தியர்கள் கண்டு பிடித்தனராம். ஆதலின் வெளி அழகைக் கண்டு மயங்குவதில் பயன் இல்லை.

அழகு கண்களுக்கு விருந்தளிக்கிறது என்று சொல்வதைக் காட்டிலும் அது போதையை ஊட்டுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆம்; அழகு, மதுவைக் காட்டிலும் மயக்கத்தைத் தரக் கூடியது. மது அருந்தியவர்களுக்குத்தான் மயக்கமளிக்கும். அழகோ பார்க்கும் பார்வையிலேயே போதையை யளிக்கிறது. அப்படியில்லாமலா, பத்மினியைத்

தான் திருமணஞ் செய்து கொள்ள முடியாதென்று தெரிந்தும் அவளை—அவள் அழகை ஓர் முறை கண்ணாடியிலேனும்கண்டு களிக்க விரும்பினான் அலாவுதீன்.

அடேயப்பா! வாள் முனைக்கு அஞ்சாத வீரர்களெல்லாம் அழகிகளுக்கு முன் தாள் பணிந்து நின்றனர். அழகுக்கு அடிமையான மன்னர்கள் எத்தனைபேர். அழகிகளால் அழிந்த சாம்ராஜ்யங்கள்தாம் எத்தனை, எத்தனை! எவ்வளவோ மன்னர்களது முடியைச் சாய்த்த ரோமாபுரி வீரன் அந்தோணி எகிப்தியப் பேரழகி கிளியோபாத்ராவின் காலடிகளிலே அடங்கி, ஒடுங்கிக் கிடந்தான். அழகு அவ்வளவு மயக்கத்தை யூட்டி விட்டது!

எரியும் நெருப்பிலே - ஆடும் சுடரிலே - அந்தச் செந்தணலிலே அழகு களிநடம் புரிகிறதாம்! 'நெருப்பின் சுடர் கொழுந்து விட்டு ஆடுவதன் அழகை மக்கள் இன்னும் முழுதுறக் காணவில்லை' என்கிறான் கவி ஷெல்லி. 'அழகு நித்யத்தில் அரும்பி மலர்கிறது' (Beauty buds and blossoms in the sternal) என்கிறார் ஜெர்மன் கவி கெதே.

அதிவீராம பாண்டியன், கற்றோர்க்கு, செல்வார்க்கு, மன்னருக்கு, மந்திரிக்கு, தந்திரிக்கு, உண்டிக்கு, அறிவோர்க்கு, வறியோர்க்கு அழகு எது என்பது முறையே 'கல்விற் கழகு கசடற மொழிதல்' 'செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்; 'மன்னர்க் கழகு செங்கோன் முறமை' 'மந்தரிக் கழகு வரும் பொருளுறைத்தல்' 'தந்திரிக் கழகு தறுகணாண்மை' 'உண்டிக் கழகு விருந்தோடுண்டல்' 'அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்குதல்' 'வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை, என வெற்றி வேர்க்கையில் சொல்கிறார். அழகைக் குறித்து அழகழகாக இதை விட வேறு என்ன சொல்ல இருக்கிறது?

அல்லின் பிரபு என்பவரின் மகள், காதலனோடு ஓடி வந்து விடுகின்றாள். பின்னால் வீரர்கள் துரத்திக் கொண்டு வருகின்றனர். வழியில் ஆறு குறுக்கிடுகின்றது. விரைவில் ஆற்றைக் கடந்து அப்பால் போனால்தான் தப்ப முடியும். இல்லையேல் காதலர் இருவரையும் அல்லின் பிரபுவின் ஆட்கள் பிடித்துக் கொள்வர்.

காற்று அதிகமாக வீசுகிறது. படகோட்டி படகைச் செலுத்த மறுக்கிறான். 'எவ்வளவு 'சில்வர் பென்னி' வேண்டுமாயினும் தருகிறேன். ஆபத்து நெருங்கி விட்டது. படகையோட்டு' என்று மன்றாடுகிறான். காதலன். படகோட்டி உடனே அல்லின் பிரபுவின் மகளை உற்று நோக்குகிறான் 'உன் 'சில்வர் பென்னி'க்காக அல்ல—அழகு நிறைந்த உன் மனைவிக்காகத்தான் (Not for your silver penny but for your beautiful wife) உன் வேண்டுகோளை ஏற்கிறேன்' என்று கூறி, படகைச் செலுத்துகிறான் படகோட்டி. அழகு ஆபத்தைக் கூட சட்டை செய்ய வில்லை.

அழகு, அழகு என்று நாம் அடித்துக்கொள்கிறோமே, இந்த அழகு நம் வாழ்வில் அவ்வளவு தூரம் பயன் படுவதில்லை. 'அழகு, அழகு என்று அங்கலாய்க்கிறோம், ரசித்துப் பேசுகிறோம். ஆனால் அழகுள்ளவை நாம் எண்ணுவது போல் அவ்வளவு பிரயோஜனப் படுவதில்லை. உதாரணம் வேண்டுமா? மயிலையும், தாமரையையும் பாருங்கள்' என்கிறார் கவி ரவீந்திரர். உங்கள் அபிப்பிராயம் என்ன?

இருளும் ஒளியும்

மூலக் கதை :

பிரேம்சந்த்

தமிழாக்கம் :

"சௌரி"

ஓர்ச்சா, புந்தேல் கண்ட் பிரதேசத்தின் ஓர் பழைய ராஜ்யம். சுஜார் சிம்மனின் ஆட்சியில்ஓர்ச்சா மிகவும்புகழ்பெற்றிருந்தது. வீரமும், திறமையும் அவனுக்கு உடன் பிறந்தவை.

ஷாஜஹான் தில்லி சக்கரவர்த்தியாக ஆட்சி புரிந்து வந்த சமயம் அது. அவனுக்கெதிராகக் கிளம்பிய ஷான்ஸஹான் லோதி பல இடங்களில் மொகலாயப் படைகளை முறியடித்துக் கொண்டு தன் ஆக்கிரமிப்பைப் பரப்பி வந்தான். புந்தேல் கண்டிற்கு அவன் படையெடுத்து வந்தபோது சுஜார் சிம் அவனை முறியடித்து விரட்டினான். இதைக் கேட்டதும் ஷாஜஹானுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைச் சொல்ல முடியாது. சக்கரவர்த்தியின் அன்பிற்கு அறிகுறியாகப் பல காணிக்கைகளோடு, தென் பிராந்தியத்தின் அரசுரிமையும் சுஜார்சிம்மனுக்குக் கிடைத்தது.

தன் தம்பி ஹர்தௌலிடம் ஓர்ச்சாவின் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு சுஜார்சிம் தெற்கே கிளம்பினான். ஹர்தௌல் தமையனின் பாதங்களைத் தொட்டு வணங்கினான். சுஜார்சிம் தன் மகுடத்தைத் தம்பிக்கு அணிவித்து, "மக்கள் மனம் கோணாமல், புந்தேலரின் குலப் பெருமை ஓங்க ஆட்சி புரிவாயாக!" என்று ஆசி கூறினான். கடைசியாகத் தன் ராணி குலீனா தேவியிடம் விடை பெற்றுக் கொள்ளும்போது அவன் சொன்னான், "தேவி! ராஜ்ய பாரத்தைத் தம்பியிடம் ஒப்படைத்திருக்கிறேன். அவன் உலகத்தை அறியாதவன். நீதான் அவ்வப்போது யோசனைகள் கூறி வர வேண்டும்."

குலீனா தேவி கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, பலவந்தப் புன்சிரிப்புடன் தன் பதியை வணங்கி வழியனுப்பினாள்.

ஹர்தௌல் வெகு சீக்கிரத்திலேயே மக்களின் அபிமானத்தைப் பெற்றுவிட்டான். அவனது அன்பான நடத்தையையும், நேர்மையான ஆட்சி முறையையும் கண்டு பிரஜைகள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடினார்கள்.

2

பங்குனி பிறந்தது. வயல் வெளிகளில் பயிர்கள் வளர்ந்து தங்க மாளிகை மாதிரி ஒளிர்ந்தன. மக்கள் மனதில் உற்சாகமும், பூரிப்பும் அலை மோதிக் கொண்டிருந்தன.

இந்த சமயத்தில் தான் தில்லியிலிருந்து பிரசித்தி பெற்ற பயில்வான் காதிர்கான் திக்

விஜயம் செய்து கொண்டு ஓர்ச்சாவுக்கு வந்து சேர்ந்தான். மல் யுத்தம், வாட்போர் எதிலும் அவனை எதிர்த்தவர்கள் யமனுக்குத்தான் இரையானார்கள். "புந்தேல் கண்ட் வீரர்களுக்கு ஓர் சவால். காதிர் கானோடு வாட்போருக்கு வர விரும்புவர்கள் இன்று மாலை கோதாவில் இறங்கலாம்!" என்ற பறையறிவிப்பைக் கேட்டதும் ஓர்ச்சா வீரர்கள் உற்சாகத்தால் பொங்கியெழுந்தார்கள். போர், போட்டிகளில்லாமல் அந்த வீரர்களின் உள்ளமும், தோள்களும் ஏங்கிக் கிடந்தன. காலதேவ், பாலதேவ் என்ற இரு பெரும் வாள் வீரரும் காதிர்கானின் கர்வத்தைச் சிதற அடிக்கக் கிளம்பினார்கள்.

மறுநாள் கோட்டை வாசலுக்கெதிரே பரந்த மைதானத்தில் ஓர்ச்சா நகரமே திரண்டிருந்தது. வீர இளைஞர்களின் உற்சாக ஆரவாரங்கள் எங்கும் எதிரொலித்தன. "ஓர்ச்சாவின் மங்காத பெருமைக்கு இது ஓர் சோதனை". "ஓர்ச்சாவின் பெருமை இதுவரை மங்கியதில்லை, இனியும் மங்காது". இப்படியெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

போட்டி தொடங்குமுன் ராஜா ஹர்தௌல் எழுந்து நின்று உரக்க அறிவித்தான்: "புந்தேலரின் புகழ் ஓங்கினாலும் சரி, மங்கினாலும் சரி. நம் குலப் பொக்கிஷமான நேர்மையை ஒருவனும் இழக்கக் கூடாது. வீரர்களே! நினைவிருக்கட்டும்; ஓர்ச்சாவீரன் வாளால் வெல்லவகையில்லாமற்போனதும், நேர்மையைக் கைவிட்டுக் குழப்பம் செய்தான் என்ற அவ சொல்லுக்கு இடம் வைப்பவன் தான் நம் குலத்துரோகி".

இரு போட்டி வீரர்களின் வாட்களும் மோதி ஒலித்துக் கொண்டன. காதிர்கானின் மூர்த்தண்யத் தாக்குதல்களையெல்லாம் காலதேவ் மிகச் சாதுர்யமாகச் சமாளித்து வந்தான். காலதேவின் வாள் எதிரியைப் பல இடங்களில் காயப்படுத்தியது. ஒவ்வொரு க்ஷணமும் வெற்றியின் போக்கு மாறி மாறித் தென்பட்டது. மூன்று மணி நேரம் போர் நடந்தது. காதிர்கான் 'அல்லாஹோ அக்பர்!' என்று உரக்க முழங்கிக் கொண்டே தன் வாளை வீசினான். தலையிலிருந்து குருதி பொங்கி வழிய காலதேவ் சாய்ந்தான். அவனது வாள் இரு துண்டுகளாகக்கீழே கிடந்தன.

இதைக் கண்டதும் புந்தேலர்களின் ரத்தம் கொதித்தது. ஆயிரக்கணக்கில் வீறுகொண்டு காதிர்கானை நோக்கிப் பாய்ந்தார்கள். "நில்! ஒரு அடிகூட

மேலே ஒருவனும் நகரக் கூடாது''. ஹர்தௌலின் இடிமுழக்கம் எல்லோரையும் சிலைகளாக்கிவிட்டது. அன்றிரவு ஒரு புந்தேலன் கூடத் தூங்கவில்லை. தன் குல கௌரவத்திற்கேற்பட்ட இழுக்கை அவர்களால் பொறுக்க முடியவில்லை.

சூரியன் உதித்ததும் மைதானத்தில் மக்கள் குழுமி விட்டார்கள். பாலதேவ் சிங்கம்போல் கம்பீரமாகக் கோதாவுக்கு வந்தான். புந்தேலர்களின் உள்ளத்தில் நேற்றைய உற்சாகம் இல்லை. ஏதோர் பயம் பற்றிக்கொண்டிருந்தது. காலதேவைவிட பாலதேவ் இளைஞன், துடிதுடிப்பும் திறமையும் கூடச் சற்றுஅதிகம் தான். பலதடவை காதிர்கானை அவன் திணற அடித்தான். கடைசியில் காதிர்கானின் முரட்டு வீச்சில் பாலதேவின் வாள் ஒடிந்து விழுந்தது. அருகிலிருந்த ஹர்தௌல் சட்டெனத் தன் வாளை பாலதேவின் பக்கம் எறிந்தான். அதைக் குனிந்தெடுக்கும் போது காதிர்கான் வீசிய வாள் பாலதேவின் கழுத்தைத் தாக்கியது. நல்ல வேளை, லேசான காயத்தோடு தப்பினான், ஆனாலும் தோல்வி அவனைக் குற்றுயிராக்கிவிட்டது.

வெற்றிக்களிப்புடன் காதிர்கான் வெளியே வந்தான். பெரும் ஏமாற்றத்தால் குன்றிப்போய் புந்தேல் மக்கள் வீடு திரும்பினார்கள். பாலதேவ் மறு முறையும் போர் செய்யச் சித்தமாயிருந்தான். புந்தேல் வீரர்களும் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

''வாள் உடைந்த போதே நம்மைத் தோல்வி அணுகிவிட்டது. ஆனால் ஒன்று, காதிர்கானின் நிலையில் நாம் இருந்தால், நிராயுதபாணியான எதிரியை ஒருக்காலும் தாக்கமாட்டோம். இன்றையப் போட்டியில் காதிர்கானுக்கு நாம் சளைத்தவரில்லை யென்பதைக் காட்டிவிட்டோம். அவனையும் வெல்லும் சக்தி நம் கத்திக்கு உண்டென்பதை நாளை காட்ட வேண்டும்.'' என்று ஹர்தௌல் புந்தேலர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு நேரே குலீனா தேவியின் அரண்மனைக்குச் சென்றான்.

இந்தத் தோல்விகளைக் கேட்டு மனமுடைந்து போயிருந்தாள் ராணி. தெற்கே ஆட்சிபுரியும் தன் நாதர் இந்த அவமானத்தைக் கேள்வியுற்றால் எப்படித்

> பணிவில்லாத மகள் நாளை பணி வில்லாத மனைவியாக மாறி விடுவாள்.
>
> —பெஞ்சமின்

துடிப்பாரோ? ஓர்ச்சாவின் புகழ் மங்கும் காலமா இது?

ஹர்தௌல் குலீனு தேவியை வணங்கிவிட்டு, "மகாராணி ஒரு வேண்டுகோள்." என்றான்.

அதைக் காதிலேயே வாங்காதவள் போல், "காதிர்கானை இன்னும் வெல்ல முடியவில்லை யாமே?" என்றாள்,

"அவனது வாளுக்கு ஈடாக இந்த ஓர்ச்சாவில் ஒரே ஒரு வாள்தான் இருக்கிறது. அது கிடைத்தால் நமக்குத்தான் வெற்றி."

"எங்கே, யாரிடம் இருக்கிறது?"

"தங்களிடம் என் தமையனார் ஒப்படைத்திருக்கும் அவரது வாள்தான் அது."

குலீனு தேவியிடமிருந்து வாளையும், ஆசியையும் பெற்றுக் கொண்டு திரும்பினான் ஹர்தௌல்.

மறு நாள் ஓர்ச்சா முழுவதும் ஒரே பரபரப்பு. "ராஜா ஹர்தௌல் காதிர்கானோடு போட்டியிடப் போகிறார்" என்ற செய்தியைக் கேட்டதும் புந்தேல் வீரர்களின் மனதை சந்தேகம், பயம், நம்பிக்கை முதலிய உணர்ச்சிகள் கலக்கிக் கொண்டிருந்தன.

மறு நாள் காலை வாள் போர் தொடங்கிவிட்டது. ஒவ்வொரு புந்தேலனும் ஹர்தௌலின் வெற்றிக்காகக் குல தெய்வத்தை வேண்டிக் கொண்டிருந்தான். மூன்று மணி நேரம் உக்கிரமான போர் நடந்தது. ஹர்தௌலின் வாளை உடைக்க காதிர்கான் செய்த முரட்டு முயற்சிகளில் எதுவும் பலிக்கவில்லை. ஹர்தௌலின் வாள் மின்னல் வேகத்தில் பாய்ந்து காதிர்கானின் தலையைத் தாக்கியது. அவனது உடல் செயலற்றுச் சாய்வதைக் கண்டதும் மக்களின் பூரிப்பு எல்லை கடந்தது. ஒவ்வொரு புந்தேல் வீரனும் வெற்றி வெறியோடு தன் வாளையுருவிச் சுழற்றிக்கொண்டிருந்தான். பல தலைகள் உருண்டன. இந்தப் பேய் வெறியைக் கண்ட ஹர்தௌல் எரிக்கும் பார்வையோடு தம் வீரர்களைப் பார்த்தான். எல்லோரும் சுயநிலைக்கு வந்தார்கள்.

புந்தேலரின் குலப் பெருமைக்கு மணி மகுடமாகிவிட்டான் ஹர்தௌல். அன்பாலும், ஆட்சிச் சிறப்பாலும் பெற முடியாத அரிய புகழை தன் வீரத்தால் பெற்றுவிட்டான்.

3

ஓராண்டு கழிந்தது. தெற்கே சுஜார்சிம் சிதறிக் கிடந்த சிறு ராஜ்யங்களைச் சேர்த்து மிக வலுவான ஓர் கேந்திரமாக்கிப் பெரும் புகழ் பெற்றுவிட்டான். ஆனால் தாய் நாட்டுப் பாசம் அவனை இழுத்துக் கொண்டே இருந்தது. சக்கிரவர்த்தியிடமிருந்து அனுமதி பெற்றதும் சில வீரர்களுடன் ஓர்ச்சாவுக்குக் கிளம்பினான். பசி, தாகம், வெயில், மழை எதையும் பாராட்டவில்லை. அவனுள்ளத்தில் ஆர்வம் அலை மோதிக் கொண்டிருந்தது. ஓர்ச்சாவின் எல்லையை அடைந்ததும் [அவ

னுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. இளைப்பாறிக் கொண்டிருந்த தன் துணை வீரர்களையும் விட்டுத் தனியாகவே விரைந்து வந்து கொண்டிருந்தான்.

நடுப் பகல். வெயில் தகித்துக் கொண்டிருந்தது. சுஜார்சிம் ஓர் மரத்தடியில் சற்று இளைப்பாற உட்கார்ந்தான். பல புந்தேல் வீரர்கள் வேட்டையாடச் சென்று கொண்டிருந்தார்கள். ஒருவன் கூட அரசனைக் கவனிக்கவில்லை. வெற்றிக்களிப்பில் இறுமாந்து செல்லும் அவர்கள் சுஜார்சிம்மனை யாரோ வழிப்போக்கனென்று எண்ணிக் கொண்டார்கள். ஹர்தௌலும் படைத் தலைவர்களுடன் வேட்டைக்கு வந்து கொண்டிருந்தான். அவனும் அதே எண்ணத்தில் குதிரையிலிருந்த படியே, ''யாரது?'' என்று அதிகாரத்தோடு கேட்டான். இருவரது கண்களும் சந்தித்துக் கொண்டன. ஹர்தௌல் பதறிக் கொண்டு குதிரையிலிருந்து குதித்து அண்ணனின் காலடியில் விழுந்து வணங்கினான். இருவரும் கட்டித் தழுவிக் கொண்டார்கள். ஆனால் சுஜார்சிம்மனின் உள்ளத்தில் விஷவித்துப் பதிந்து வேரூன்றிவிட்டது. எல்லோரும் தம்மை அலட்சியம் செய்ததாகவே அவன் எண்ணிக் கொண்டான்.

சுஜார்சிம் திரும்பிவந்ததையறிந்ததும் ஓர்ச்சா நகரமே ஆனந்தத்தில் மிதந்தது. ஜனங்கள் ஹர்தௌலிடம் வைத்திருக்கும் பெரும் மதிப்பையறிந்ததும் சுஜார்சிம்மின் மனம் மேலும் பொருமியது.

அன்று குலீனா தேவி தன் கையாலேயே விருந்து சமைத்தாள். தானே பரிமாறவும் வந்தாள். வழக்கமாகத் தனக்கு வைக்கும் தங்கத் தட்டு ஹர்தௌலுக்கும், வெளித் தட்டு தனக்கும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் சுஜார்சிம்மனின் ரத்தம் கொதித்தது. 'குலீனா கூடவா மனம் மாறிவிட்டாள்? இவளை பதிவிரதையென்று நம்பியிருந்தேனே. மகாபாதகி....'' அவன் மனம் குமுறியது. உணவு விஷமாகப் பட்டது. ஹர்தௌல் தான் வழக்கமாகச் சாப்பிடும் பொன் தட்டு தானிது என்று எண்ணியிருந்தான். தமையனுக்கு வைக்கப்பட்டிருந்த தட்டை அவன் கவனிக்கவேயில்லை.

சாப்பிடப் பிடிக்காமல் சுஜார்சிம் பாதியிலேயே எழுந்துவிட்டதைக் கண்டதும் குலீனாவுக்கு ஒரே திகைப்பாயிருந்தது. தற்செயலாகத் தட்டைப் பார்த்தாள். ஹிருதயமே வெடித்துவிடும் போலிருந்தது. தலையில் அடித்துக் கொண்டு தன்னை நொந்தாள். 'இதென்ன அபசகுனம்? ஈசா! நீதான் துணை!' குலீனா புலம்பினாள்.

அன்றிரவு தன் கணவரிடம் மன்னிப்புக் கேட்கும் போது தான் அவனுள்ளத்தில் எவ்வளவு கொடிய சந்தேகம் வேரூன்றியிருக்கிறதென்பதை குலீனா தெரிந்து கொண்டாள். அவள் பதறிவிட்டாள். ''ஹர்தௌலை என் பிள்ளையாக எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவன் உத்தமன்'' என்று கதறினாள்.

''என் சந்தேகத்தைப் போக்க ஒரே வழிதான். என் கையாலேயே அவனுக்கு இந்த விஷம் கலந்த பீடாவைக் கொடுக்க வேண்டும்.'' சுஜார்சிம் மிகக் கடுமையாகச் சொன்னான்.

குலீனா எவ்வளவோ கெஞ்சிக் கதறியும் மன்னன் மனம் மாற

வில்லை. குலீனு என்ன செய்வதென்று அறியாமல் எண்ணப் புயல்களால் நிலை குலைந்து தவித்தாள்.

4

ஹர்தௌலுக்கு தன் தமையனின் உள்ளத்தில் இப்படியொரு துவேஷத் தீ கிளம்பியிருக்கிறதென்றே தெரியாது. நடு நிசியில் ஓர் தாதி வந்து எல்லா விபரங்களையும் அவனிடம் சொன்னுள். குலீனுவுக்கும்,

அவன் கண்ணையசைத்தால் போதும், மூன்று லட்சம் புந்தேல் வீரர்களும் உயிரை அர்ப்பணிக்க முன் வருவார்கள். ஆனல் தான் தாயாக மதித்துப் போற்றும் குலீனு தேவிக்கு வீணைக் களங்க மேற்படுவதை அவனுல் பொறுக்க முடியவில்லை. 'அண்ணனுக்கு என் மேல் சந்தேக மேற்படக் காரணம்? ராஜ்யத்தைப் பிடிக்க சகோதரர்களுக்குள்ளேயே கலகமும், சூழ்ச்சியும், கொலை

சுஜார்சிம்மிற்கும் நடந்த வாக்குவாதத்தை அவள் ஒளிந்து கேட்டிருந்தாள். தன் தமையன் வந்ததிலிருந்து உற்சாகமின்றி ஏதோ வேதனைப் பட்டுக் கொண்டிருந்ததின் மர்மம் அப்போதுதான் ஹர்தௌலுக்கு விளங்கியது.

"இதை யாரிடமாவது வெளியிட்டால் உன் தலை போய் விடும், ஜாக்கிரதை!" என்று தாதியை எச்சரித்தனுப்பினுன்.

யும் தான் வழிவந்த நீதியாகி விட்டது. ஆனல் இப்போது எப்படியாவது இந்த வீண் களங்கத்தைப் போக்குவது தான் என் தர்மம்.' ஹர்தௌல் முடிவிற்கு வந்துவிட்டான்.

மறு நாள் காலையில் சுஜார்சிம் தன்னெதிரில் ஹர்தௌலைக் கண்டதும் சற்றுப் பிரமித்தான். ஹர்தௌல் அண்ணனின் பாதங்களைத் தொட்டு வணங்கி, "தாங்கள்

வந்து சேர்ந்ததின் மகிழ்ச்சிக்கு அறிகுறியாக வேட்டையாடப் புறப்பட்டேன். தோல்வியே கண்டறியாத தங்கள் திருக்கரத்தால் எனக்கு வெற்றித் தாம்பூலம் கொடுக்க வேண்டும்'' என்று வேண்டினான். எதிரே வைக்கப்பட்டிருந்த ஓர் வெற்றிலைப் பீடாவை தட்டோடு தமையனின் கையில் கொடுத்தான். கை நடுங்க அதை வாங்கிக் கொண்டான் சுஜார்சிம். முதல் நாள் தனக்கும் குலீனாவுக்கும் நடந்த வாக்குவாதமெல்லாம் நினைவுக்கு வந்தது. ஹர்தௌலின் மலர்ந்த முகத்தையும், மிடுக்கான கம்பீரத் தோற்றத்தையும் கண்டதும் அவனுள்ளத்தில் பொறாமையும் ஆத்திரமும் கொழுந்துவிட்டெரிந்தன. ''எரிகிற தீயில் எண்ணெய் வார்க்க வந்திருக்கிறான். என் மானம், நம்பிக்கைகளையெல்லாம் பாழ்படுத்திவிட்டு, என்னிடமே 'வெற்றித் தாம்பூலம்' கேட்கிறான்! அதமன், வெற்றி உனக்கா, எனக்கா...?'' பலவந்தப் புன் சிரிப்புடன் பீடாவை ஹர்தௌலிடம் கொடுத்தான்.

வீர ரஜபுத்திரன் தன் தீரத்தைக் காட்டத் தயங்கவில்லை, ஹர்தௌல் பீடாவை வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டு, முடியில் வைத்து வணங்கிவிட்டு வாயில் போட்டுக்கொண்டான். கொடிய விஷம் தன் சக்தியைக் காட்டிவிட்டது. உடல் முழுவதும் நீலம் பரித்து சில கணங்களுக்குள் ஹர்தௌல் தரையில் சாய்ந்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சி பொலிவுற்றிருந்தது.

சுஜார்சிம் நின்ற இடத்திலேயே சமைந்துவிட்டான். பலவந்தப் புன் சிரிப்பு மட்டும் பொறாமையைக் கக்கிக் கொண்டிருந்தது. கண்களில் அவனறியாமலேயே நீர் முட்டித் தளும்பி வழிந்தன. அவனுள்ளத்தில் இருளும், ஒளியும் ஒருமித்துக் காட்சியளித்தன!

சாரதாவின் கண்ணீர்!

எஸ். சகுந்தலா

பள்ளிக்கூடத்தின் இடைவேளை மணி 'டங்' 'டங்' என்று அடித்தது. தலைமை உபாத்தியாயினி சாரதா திடுக்கிட்டு விழித்தாள். அவளுக்கு இரண்டொரு தினங்களாகவே உடம்பு ஒரு மாதிரியாக இருந்தது. மனம் ஒரு நிலையிலில்லை. ஏதேதோ எண்ணங்கள் அவள் உள்ளத்தைப் போட்டுக் குழப்பின. தலையை லேசாக வலிப்பது போல் இருந்தது. கணக்கு டீச்சரைக் கூப்பிட்டனுப்பி, அவள் வந்ததும் பள்ளியைக் கவனித்துக் கொள்ளும்படிச் சொல்லிவிட்டு ஹாஸ்டலில் தன் பிரத்தியேக அறைக்குச் சென்று ஈஸிச்சேரில் சாய்ந்து கொண்டாள். அவள் இமைகள் மூடிக்கொண்டன. அயர்வாக இருந்தது. ஆனால் தூக்கமும் வரவில்லை.

"டீச்சர்!... டீச்சர்....!"

சாரதா யோசனையில் ஆழ்ந்திருந்தவள் மீண்டும் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்தாள். எதிரே இரண்டாம் பாரத்தில் படிக்கும் மாணவி கல்யாணி நின்று கொண்டிருந்தாள். சாரதாவுக்குக் கோபம் வந்தது.

"இப்போ எதுக்கு வந்தே? சனியன், கொஞ்ச நேரம் அமைதியாயிருக்க முடிவதில்லை. என்ன வேண்டும் உனக்கு?"

என்றுமில்லாது சாரதா இப்படி எரிந்ததைக் கண்டு கல்யாணி பயந்துவிட்டாள். தவறிக்கூட "சீ" என்று சொல்லாத தலைமை உபாத்தியாயினி இப்படிப் பேசினால்?

"கணக்கு டீச்சர் அனுப்பினாங்க! யாரோ ஒருவர் வந்திருக்கிறார். சாரநாதன் என்று பெயராம். அவர் ஒரு பெண்ணை அழைத்து வந்திருக்கிறார். அவளைப் பள்ளியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாம். ஹாஸ்டலிலும் இடம் வேண்டுமாம். அது விஷயமாக உங்களிடம் கேட்டுவரச் சொன்னார்கள். அவர் இன்று இரவு அல்லது நாளைக் காலைக் கட்டாயம் ஊருக்குப் போக வேண்டுமாம்."

எப்படியோ மடமட வென்று சொல்லிவிட்டு சாரதாவின் முகத்தைப் பார்த்தாள் கல்யாணி.

"யார்? சாரநாதனா? எந்த ஊராம்!" சாரதாவின் உள்ளம் படபடத்தது. கல்யாணியின் தோளைப் பிடித்து உலுக்கினாள் அவள். சாரதாவைப் பார்க்கவே பயமாயிருந்தது அவளுக்கு. திடீரென்று திமிறிக் கொண்டு ஓடிப்போய்விட்டாள். சாரதா தடாலென்று ஈஸிச் சேரில் விழுந்தாள். இரண்டே நிமிஷங்களில் கல்யாணி கணக்கு டீச்சருடன் அங்கு வந்து நின்றாள்.

"டீச்சர்!........டீச்சர்!! என்னாங்க உடம்புக்கு? டாக்டரைக் கூப்பிடட்டுமா?" கணக்கு டீச்சரின் குரலில் படபடப்பு காணப்பட்டது.

சாரதாவுக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது. கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"டீச்சர்! எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை........அந்தச்

சாரநாதன் எந்த ஊரைச் சேர்ந்தவரென்று சொன்னார்?''

''சிவசமுத்திரமாம்''....

சாரதா கணக்கு டீச்சரை மேலே பேச விடவில்லை. ''டீச்சர்! யாராயிருந்தாலும் நாளைக் காலையில் வரச் சொல்லுங்கள். என் மனம் ஒரு நிலையிலில்லை. அமைதி வேண்டும். யாராயிருந்தாலும் இன்று பார்க்க முடியாது என்று சொல்லி அனுப்பி விடுங்கள். நான் ஓய்வெடுத்துக் கொள்கிறேன்.''

இப்படிச் சொல்லிவிட்டு 'விர்'ரென்று உள்ளே சென்று உட்புறம் தாளிட்டுக் கொண்டு ஈஸிச்சேரில் சாய்ந்துவிட்டாள். கணக்கு டீச்சரும் கல்யாணியும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துவிட்டு வகுப்பிற்குச் சென்றனர். சாரநாதனை மறு தினம் வரும்படிச் சொல்லி யாகிவிட்டது.

'சாரநாதன்....சாரநாதன்' என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தாள் சாரதா. அவள் மனம் பழைய சம்பவங்களை ஒரு தரம் புரட்டிப் பார்த்தது.

* * *

சிவசமுத்திரத்திலே மிகப் பிரபலமானவர் பஞ்சாபகேசன். அவர் ஏராளமான வருமானமுள்ள ஒரு வழக்கறிஞர். சாரதா அவரது ஒரே புத்திரி. அவளிஷ்டப்படியெல்லாம் விட்டு ரொம்பவும் செல்லம் கொடுத்து வளர்த்தார் அவர். சாரதாவின் தாயார் அவள் பிறந்த இரண்டொரு வருஷங்களிலேயே காலமாகிவிட்டாள். ஆனால் மகளின் நன்மையிலே நாட்டங்கொண்ட அவர் மறு மணம் செய்துகொள்ளவில்லை. வீட்டிலே சமையலுக்கென்று ஒரு கிழவியை அமர்த்திவிட்டார்.

சாரதா அப்போது ஐந்தாம் பாரத்தில் படித்து வந்தாள். இயற்கையிலேயே அவள் நல்ல அழகி. நீண்டு வளர்ந்த கருங் கூந்தலை இரட்டைப் பின்னல் போட்டுக்கொண்டு அவள் வெளியே கிளம்பிவிட்டால் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். பள்ளிக்கூட நேரம் போக மீதி நேரம் முழுவதும் ஏதாவது ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்பாள். பத்திரிகைகளும் நாவல்களும் இல்லாமல் அவளைப் பார்ப்பதே சிரமம்.

ஒருநாள் சாரதா ஒரு நாவலைப் படித்துக்கொண்டிருந்தாள். இரவு மணி எட்டடித்தும் அவள் சாப்பிட எழுந்து வரவில்லை. சமையல்கார கிழவிக்கு இது சகஜம். முணுமுணுத்துக் கொண்டே ஒரு மூலையில் சுருண்டு படுத்துக்கொண்டாள். பஞ்சாபகேசன் அன்று ஊரிலில்லை. கேஸ் விஷயமாக வெளியூருக்குச் சென்றிருந்தார். இரவு ஒரு மணிக்கு நாவலை படித்து முடித்தபின் கீழே வந்து கிழவியை எழுப்பினாள். நாவலில் கதாநாயகியைக் கதாநாயகன் பல வருஷங்கள் நம்ப வைத்துக் கடைசியில் வெளியூர் சென்று விடுகிறான். வாழ்வே சூனியமாகி விடுகிறது. இந்த முடிவு அவளுக்குப் பிடிக்கவில்லை. கிழவியை எழுப்பி சாப்பிட்டுவிட்டுப் படுக்கையில் படுத்தாள். ஆனால் தூக்கம் வரவேயில்லை. பின்னிரவில் அவள் கண்ணயர்ந்தாள்.

மறுநாள் காலை அவள் எழுந்திருக்கும் போது மணி எட்டடித்துவிட்டது. பள்ளிக்குச் செல்லுமுன் அந்த நாவலை எழுதிய ஆசிரியரைச் சந்தித்து முடிவு பற்றிய தன் அதிருப்தியைத் தெரிவிக்கத் தீர்மானித்து, மற்ற காரியங்களை

தகப்பனார் :- ஏண்டா, அடுத்த வீட்டு பையன் அடிச்சானாமே, நீ சும்மாவா வந்தே ?

பையன் :- இல்லேப்பா, அடியை வாங்கிட்டுதான் வந்தேன்.

அவசர அவசரமாக முடித்துக் கொண்டு கிளம்பினாள். அந்தத் தெருவில் நிதானமாக ஒவ்வொரு வீடாகப் பார்த்துக் கொண்டே சென்றாள். பத்தாம் நம்பர் வீட்டண்டை வந்ததும் அவள் நின்றாள். அந்த வீட்டு வாசலில் ''சாரநாதன்'' (ஆசிரியர், சித்ரகலா) என்ற போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்ததால் மெதுவாகத் தட்டினாள் சாரதா. கதவைத் திறந்த ஒரு யுவதி 'யார், என்ன வேண்டும் ?' என்றாள்.

''சாரநாதன் இருக்காரா ?'' விருப்பமின்றி அலட்சியமாகக் கேட்டாள் சாரதா,

''அண்ணா ஆபிஸுக்குப் போயிட்டாரே !'' என்று அந்த யுவதி சொன்னதும் சாரதாவுக்கு ஏனோ சந்தோஷம் ஏற்பட்டது ! காரியாலய விலாசத்தைத் தெரிந்து கொண்டு அங்கே சென்றாள்.

சித்ரகலாவின் பிரதம ஆசிரியர் சாரநாதன். காரியாலயத்தின் பிரம்மாண்டமான கட்டிடத்தையும் அங்கு ஏராளமானவர்கள் வேலை செய்வதையும் பார்த்த சாரதா பிரமித்துவிட்டாள். ஒரு வேலைக்காரன் அவளை மாடிக்கு அழைத்துச் சென்றான் வெளியே விஸிட்டர்களுக்கென்று போடப்பட்டிருந்த சோபாவில் சாரதாவை உட்காரச் சொல்லிவிட்டு சாரநாதனின் அறைக்குள் சென்றான். இரண்டொரு நிமிஷங்களில் திரும்பி வந்து ''உள்ளே போங்கம்மா'' என்றான்.

சாரதாவுக்குக் கிளம்பும் போது இருந்த தைரியம் இப்போது இல்லை. இருந்தாலும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு உள்ளே சென்றாள். அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சுமார் அறுபது வயது நிறைந்தவராய், முகத்தில் மூக்குக் கண்ணாடியும், நெற்றியில் சுருக்கமும் உடையவராய் உள்ள ஒரு நரைத்த தலை ஆசாமியை அவள் கற்பனை செய்திருக்கும் போது இருபத்தைந்து இருபத்தி ஆறு வயதுள்ள ஒரு அழகன் எதிரில் இருந்தால் அவளுக்கு எப்படி இருக்கும்.

''நமஸ்காரம். வாருங்கள். வாருங்கள். என்ன வேண்டும் ? என்னால் ஆகக் கூடியது ஏதாவது இருந்தால்....'' என்று கை குவித்து நின்ற சாரநாதனுக்குப் பதில் வணக்கம் தெரிவித்து விட்டு நின்றாள் சாரதா.

முதலில் சாரநாதனின் வீட்டில் யுவதியைக் கண்டதும் அவள் சாரநாதனின் மனைவியாக இருக்கலாமோஎன்று ஏங்

கிருள். அவள் 'அண்ணு' என்றும் 'அவர்' என்றும் குறிப்பிட்டதால் ஏனே அதே சாரநாதனை ஒரு கிழவனைக் கற்பனை செய்தாள். அவன் எழுத்துக்கள் அவளை அப்படி நினைக்கச் செய்தன.

"உட்காருங்கள். ஏன் பிரமை பிடித்தது போல் நிற்கிறீர்கள்? பஞ்சாபகேசன் மகள் எங்கள் பத்திரிகாலயத்திற்கு விஜயம் செய்ததே எங்கள் பாக்கியம். நீங்கள் நிற்கலாமா! கூடாது. உட்காருங்கள்" என்ருன் சாரநாதன்.

சாரதாவுக்கு மார்பு விம்மித் தணிந்தது. "என்னை...."

"தெரியாதவர்கள் இருக்க முடியுமா. லக்ஷாதிபதியின் மகள். பல்லாயிரவர் உள்ளங்களை ஏங்கச் செய்யும் அழகி. உங்களுக்குத்தான் எங்களையெல்லாம் தெரியாது. நாங்கள் அப்படியா?" என்று கூறிச் சிரித்தான் சாரநாதன்.

சாரதாவுக்கு வியர்த்துக் கொட்டியது. தன்னை எல்லோரும் தெரிந்து வைத்திருக்கிருர்கள். இவர் கூட 'நாங்கள்' என்கிருரே. அப்படியானல்?" சாரதா மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

"எனக்குப் பள்ளிக்கு நேரமாகிறது. முக்கியமாக இரண்டொரு கேள்வி கேட்க வந்தேன்." என்ருள் வெடுக்கென்று. அவள் பேச்சிலிருந்தக் கடுமையை சாரநாதன் லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை.

"ஒரு கேள்வியென்ன? ஓராயிரம் கேள்விகள் கேளுங்கள். அழகி ஆணையிடலாம், கட்டழகி கட்டளையிடலாம். பதில் சொல்ல பக்தன் காத்திருக்கிறேன்."

> சம்மட்டி அடிப்பவர்கள் சட்ட மந்திரியாகலாம். கார் ஓட்டுபவன் கவர்னராகலாம். ஜல்லி உடைப்பவன் சமுதாய வாதியாகலாம்; ஆனல் எழுத்தாளன் மட்டும் ஒரு பியூனைக் கூட ஆக முடியாது. அப்பேர்பட்ட அபூர்வத் தொழில் அது. அவர்களை வாழவும் வைக்காது; சாகவும் விடாது........
>
> —ஜெகசிற்பியன்

சாரதாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. சடக்கென்று எழுந்து போய்விடலாமா வென்று தோன்றியது. ஆனல் தான் வந்த காரியத்தை முடித்துக் கொண்டுதான் போவது என்று தீர்மானித்துக் கொண்டாள்.

"கமலாவின் கண்ணீர் நாவலை எழுதியது நீங்கள் தானே."

"ஆமாம்."

"கமலாவின் மீது ஏன் உங்களுக்கு இவ்வளவு ஆத்திரம்? அவள் வாழ்வைப் பாழ்படுத்தி விட்டீர்களே? இதனல் நீங்கள் கண்ட பலன்?"

"சுமார் ஐயாயிரம் ரூபாய். ஏராளமான புத்தகங்கள் விற்றன. நீங்கள் கூட வாங்கியிருக்கிறீர்கள் போலிருக்கிறதே!"

"கமலாவை அவள் காதலனுடன் சேர்த்துவிட்டிருக்க வேண்டும். அன்புருவான அவளைப் பட்டமரமாக்கி விட்டீர்கள். கணவனுக்காக ஏங்கி கன்னியாகவே காலம் கழித்துக் கதறும்படி செய்துவிட்டீர்கள். உண்மையிலேயே நீங்கள் அடைந்த பலன்தான் என்ன?"

"முதலில் பணம். இப்போது உங்கள் தரிசனம், இதற்காக

எத்தனை கமலாக்களை வேண்டு மானாலும் சிருஷ்டித்துக் கதற வைக்க நான் தயார்.''

''எழுத்தாளர்களே இப்படித் தான். ஆண்கள் ஆத்திரக்காரர் கள். படித்த முட்டாள்கள். சுய நலக்காரர்கள்.''

''ஒரு கதாசிரியன் கற் பனைக்கே இத்தனை பட்டங் களென்றால்....''

சாரநாதன் முடிப்பதற்குள் சாரதா 'பட்டென்று' கதவை சாத்திவிட்டுப் போய்விட்டாள். அவளுக்கிருந்த ஆத்திரத்தில் பள்ளிக்குக் கூட செல்லாமல் நேரே வீட்டிற்கே சென்றுவிட் டாள்.

யோசித்து யோசித்து அவ ளுக்கு மூளையே குழம்பிவிடும் போலிருந்தது. அவன் என் னவோ முறைப்பையன் போல் நடந்து கொண்டான். கதை யைப் பற்றி வாதித்தது எதற் காக?....யாரிடம் வெறுப்பு அதி கரிக்கிறதோ அவர்களைப் பற் றித் தெரிந்து கொள்வதும் அவர்களிடம் கடைசியில் அன்பு கொள்வதும் கூட மனித இயற்கை. சில தினங்கள் வரை அவனைப் பார்க்கக் கூடாது; அவன் கதைகளைப் படிக்கவும் கூடாது, என்றெல்லாம் தீர் மானித்தாள் சாரதா. ஆனால் அது அவளால் முடியவில்லை. அந்த வார 'சித்ரகலா'வில் சார நாதன் எழுதியிருந்த கதை அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சி யைக் கொடுத்தது.

தான் காதலித்தவனை பெற் றோருக்கு எதிராக நின்று மணந்து, சமூகத்திலே புரட் சியை உண்டுபண்ணிய சுஜாதையின் கதை அது. சார நாதன் தன் திறமையையெல் லாம் பிரயோகித்து அதை எழுதியிருந்தான். சாரதாவுக்கு ஏனோ சாரநாதனிடம் அபார வாஞ்சையும் மதிப்பும் ஏற் பட்டுவிட்டன! அந்தப் புத்த கத்துடன் சாரநாதனிடம் ஓடி னாள்.

சாரநாதன் ஆச்சரியப்பட் பட்டான். இருவரும் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தனர்! இயற்கை தன் ஆட்சியை ஸ்தாபித்துவிட் டது. ஒருவரை யொருவர் பிரிந் திருக்கும் ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகமாக உருவெடுத் தன. காதலர்களின் பாஷை யிலே பல யுகங்கள் சென்றன!

விவரமெதையும் அறியாத பஞ்சாபகேசன் மகளுக்கு மண முடிக்க நினைத்தார். சாரதாவி டம் இதைப் பற்றிப் பிரஸ்தா பித்தபோது அவள் தட்டிக்

> உள்ளத்தில் அன்பு, நடத்தையில் உண்மை, மாறுபாடில்லாத மனம், இம் மூன்றும் நட்புக்குரிய நற்பண்புகள். சகோதர உணர்ச்சி, தன்னலமின்மை, மிகு பொருள் விரும்பாமை இம்மூன்றும் உலக சமாதானத்திற்குரிய இன்றியமையாத பண்புகள்.

கழிக்க முயன்றாள். ஆனால் அவர் பல விதத்திலும் முயற்சி செய்து வரன் தேட ஆரம்பிக்கவே சாரதா தன் அபிப்பிராயத்தைக் கூறினாள்.

"சாரதா! நீ ஒரு பைத்யம். நீ நன்றாக வாழ வேண்டும் என்பது தானே என் ஆசை! சாரநாதனை எனக்குத் தெரியும். அவன் தரித்திரன். நீ அவனை மறந்துவிடு" என்று உபதேசம் செய்தார். ஆனால் சாரதா இவ் விஷயத்தில் ரொம்பவும் பிடிவாதமாக இருந்தாள்.

அன்று சாரதா சித்ரகலா காரியாலத்திற்குச் சென்ற போது அவளுக்குத் திடுக்கிடும் செய்தி யொன்று கிடைத்தது. "நேற்று மாலை திடீரென்று வேலையை ராஜிநாமா செய்து விட்டுப் போய்விட்டார். எங்கே போனார் என்று தெரியாது. இந்தக் கடிதத்தை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்!" என்று அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான் சாரநாதனின் வேலைக்காரன்.

சாரதா அதை அவசர அவசரமாகப் பிரித்துப் படித்தாள்:

"மன்னித்துவிடு சாரதா. என் வாய்க்குப் பூட்டுப் போடப் பட்டுவிட்டது. நான் போகிறேன் என்னைத் தேடாதே. உன் வாழ்வையாவது வளமாக்கிக் கொள்."

படித்ததும் வீட்டுக்கு ஓடி வந்து தலையணையில் முகம் புதைத்து அன்று முழுவதும் அழுது கொண்டே இருந்தாள். சாரநாதனைப் பற்றி அவள் எதுவுமே அறிய முடியவில்லை. இதே ஏக்கத்தால் அவள் இளைத்துத் துரும்பு போலாகிவிட்டாள். அவளைவிட பஞ்சாபகேசன் நிலைமை தான் பரிதாபகரமாக இருந்தது. தன் தகப்பனார் இப்படி உருகிப்போகக் காரணம் என்னவென்று புரியாமல் சாரதா கூட ஒரொரு சமயங்களில் சிந்திப்பாள்.

யாருக்காகவும் காத்திராமல் பல வருஷங்களை விழுங்கிவிட்டது காலம் என்ற மலைப்பாம்பு. இப்போது சாரதா ஒரு பி. ஏ. பட்டதாரி. முன்னைப் போல் அழகியல்ல. இளமைக் கட்டு விட்டுப்போய் முதுமையின் சுவடு அவள் உடலிலே அடியெடுத்து வைக்க ஆரம்பித்துவிட்டது. கன்னியாகவே காலம் கழிக்கத் துணிந்துவிட்ட அவளைக் கண்டு மனம் புழுங்கிய பஞ்சாபகேசன் உண்மையை அவளிடம் சொல்லிவிடப் பல தரம் முயன்றும் ஏனோ அப்படிச் செய்யத் துணியவில்லை. இந்த ஏக்கம் அவரைத் திடீரென்று ஒரேயடியாகத் துக்கத்திலாழ்த்தி விட்டது. சாரதா கலங்கவில்லை. அவள் நெஞ்சம் கல்லாகிவிட்டது. பணமிருந்தது; படிக்க முடிந்தது. மேலும் படித்து உபாத்தியாயினியாக வேலையேற்றாள். அவள் இப்போது சாரதா உயர் நிலைப் பள்ளியின் தலைமை உபாத்தியாயினி. அவள் வழங்கிய நன்கொடையைக் கொண்டு கட்டப்பட்டு ஏழைகளுக்குச் சகல வசதிகளை

யும் கொடுப்பதுதான் சாரதா ஹாஸ்டல்.

* * *

மாலை கடைசி மணியடித்த ஓசை கேட்டுச் சுய உணர்வடைந்தாள் சாரதா. எதிரே இருந்த நிலைக் கண்ணாடியைப் பார்த்தாள். சுமார் நாற்பத்தி இரண்டு வயதாகிவிட்ட அவளது முகத்தில் ஒரே சுருக்கங்கள்; கவலையின் ரேகைகள். அவள் கண்களில் நீர் நிறைந்தது. மறு நாட் காலை தன் எதிரே சுமார் பத்து வயது நிரம்பிய பெண்ணுடன் நின்ற சாரநாதனைக் கண்டதும் சாரதாவுக்கு 'கோ'வென்று கதறி அழவேண்டும் போலிருந்தது. அதை வெளிக்குக் காட்டாமல் மறைத்துக் கொள்ள அவள் பட்டபாடு சொல்லத்தரமன்று.

"சாரதா...' நீயா....? என்னை மன்னித்துவிடு சாரதா?" சாரநாதனின் கண்களில் நீர் வழிந்து கொண்டேயிருந்தது.

"எதற்காக நான் உங்களை மன்னிக்க வேண்டும்? கிழடு தட்டிப் போய்விட்ட இந்தக் கன்னிப் பெண் உங்களை ஏன் மன்னிக்க வேண்டும்? நீங்கள் உங்கள் பாதையில் சென்றுவிட்டீர்கள். வெள்ளம் வரும் போது நிறைய வைக்கோற் போர்கள் அடித்துப் போகின்றன. ஒன்றிரண்டு நேரே சென்றுவிடும். சில எங்காவது தடுக்கப்பட்டு நின்றுவிடும். மனிதர்களும் அப்படித்தானே! எனக்கு அணை போட்டுவிட்டு நீங்கள் போய்விட்டீர்கள். இது ஆண்களுக்கு இயற்கை தானே!"

"சாரதா நீ மணம் செய்து கொள்ளவேயில்லையா? அப்படியானல்...."

"அப்படியானல்....என்....ன?"

"நாம் இப்போது கூடச் சேர்ந்து வாழலாம்........ சாரதா....?"

"ஹூம். இது உங்களுக்குச் சகஜமாகத் தோன்றலாம். என் மனம் இப்போது வெறும் கருங்கல். கட்டழகியாக இருக்கும் போது உங்கள் காதலை வேண்டினேன்; கழுத்தறுத்துவிட்டீர்கள்; சொந்தமாக்கிக் கொள்ளத் தீர்மானித்தேன்; சொல்லாமல் ஓடிவிட்டீர்கள்; உங்களுக்கென்று வளர்த்த இந்தச் சரீரம் ஒருவருக்கும் உபயோகமற்றதாகிவிட்டது. இளமை போயிற்று; அழகு அழிந்தது. அஜந்தா சித்திரம் இன்று அலங்கோலமாகிவிட்டது. இளமையும் எழிலும் போய் முதுமைப் பற்றி உடல் தளர்ந்தாலும் என் உறுதி தளரவில்லை. ஆண்களைக் கண்டாலே எனக்கு ஆகாது. சாரநாதன்

எனக்குச் சாரைப் பாம்பு. நம் பினவளை நட்டாற்றில் விட்ட பின் கண்டவளோடு கொஞ்சிக் குலாவி விட்டு உங்கள் வாரீசுடன் வந்துவிட்டீர்கள், வெட்கமில்லாமல். போங்கள் போய் விடுங்கள். இங்கே என்முன் நில்லாமல் ஒழிந்து போய் விடுங்கள்.''

கும்பி கொதிக்க எரிமலையெனக் குமுறி வார்த்தைகளில் அனலைக் கக்கிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள் சாரதா,

சாரநாதன் ஒன்றும் பேசாமல் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டுப் போய்விட்டான்.

இரண்டு தினங்களுக்குப்பின் தனக்கு வந்த கடிதங்களைப் பிரித்துக்கொண்டிருந்த சாரதா அந்தக் கவரைக் கண்டதும் திடுக்கிட்டாள். அதன் மேலிருந்த விலாசத்தை எழுதியது சாரநாதன். அவள் கைகள் நடுங்கக் கவரைக் கிழித்துக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள்.

'' அன்புள்ள சகோதரி !

அவசரப் பட்டுவிட்டாய். ஆத்திரத்தில் அறிவிழந்துவிட்டாய். பெண்புத்தி பின்புத்தி என்பதைக் காட்டிவிட்டாய். நான் உனக்கு உறவினன். நீ என் முறைப்பெண். உன் அப்பா— என் மாமாதான் நம்மைப் பிரித்து வைத்தவர். எங்கள் குடும்பத்துடன் — முக்கியமாக என் அப்பாவுடன் —அவர் கொண்ட விரோதத்தினால் நீ நம் உறவை முதலிலேயே அறிய முடியாமல் போய்விட்டது. நம் முதல் சந்திப்பின்போதே நான் உன்னுடன் அளவுக்கு மீறி விளையாடியது. முறைப்பெண் என்ற தைரியத்தில்தான். ஆனால் உன் அப்பா என்னிடம் வந்து நான்

ஒருவர் : ஏன் சார் உங்கள் கம்பெனியில் நேற்று இரவு திருட்டு போய்விட்டதாமே ?

மற்றவர் : ஆமாம். ஒரு சின்ன விளம்பரம்தான் காரணம். !

ஒருவர் : திருட்டுக்குச் சின்ன விளம்பரம் காரணமா? எப்படி ஸார்?

மற்றவர் : ஆமாம் நேற்று பத்திரிகைகளில் எங்கள் கம்பெனிக்கு இரவு காவல்காரன் தேவை என்று நாங்கள் விளம்பரப் படுத்தியிருந்தோம்!

ஊரை விட்டுப் போகாவிடில் உயிரை மாய்த்துக்கொள்வதாகக் கூறவே நான் உன்னைப் பிரிந்து கண் காணாமல் ஓடினேன்.

ஆனால் உன்னை என்னால் மறக்க முடியவில்லை. அதற்காக என்றாவது ஒரு நாள் உன்னை அடையலாம் என்ற நம்பிக்கையில் கடும் பிரம்மச்சரிய விரதம் அனுஷ்டித்தேன். பிரேமா - என் தங்கையின் குமாரி இந்தக் குழந்தை. அவளை—பிரேமாவை என் குழந்தை என்று தீர்மானித்து உள்ளம் உடையப் பேசிவிட்டாய். உன்னை மணக்க மறுத்து ஓடியதற்காக உன் அப்பா அனுப்பிய பரிசு ஆயிர

ரூபாயை உன் பேருக்கே எழுதி வைத்துவிட்டேன். நீ கன்னிப் பெண் என்றதும் என் மனம் தாங்கொணு சந்தோஷம் அடைந்தது. ஆனல் அதைச் சுடு சொற்களால் சுக்கு நூருக்கிவிட்டாய். உடலால் ஒன்றுபட முடியாத என்னை உள் ளத்தாலும் பிரித்துவிட்டாய். நான் கதையில் கமலாவைக் கஷ்டப்படுத்தியதற்கு நீ பழி வாங்கிவிட்டாய்.

பிரேமா நம் குல விளக்கு. அவளை அலட்சியம் செய் யாதே. அவள் அனுதை; அவள் வாழ்வாவது மலரட்டும். அவளை எனக்காக — உன் அன்பு மிக்க அண்ணனுக்காகக் கைவிடாமல் காப்பாற்று. இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும் போது அவளும் உன்னிடம் வரு வாள். நான் போகிறேன். என் னைத் தேடாதே.

உன் அன்புள்ள அண்ணன்,
சாரநாதன்.

கடிதத்தைப் படித்த சாரதா கதறினுள். அவள் உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது. எழுந்து வெளியே ஓடினுள், 'பிரேமா' 'பிரேமா' என்று கதறிக்கொண்டே பள்ளி வாயி லிலே திரு திருவென்று விழித் துக்கொண்டு நின்றிருந்த பிரே மாவை வாரியெடுத்து உச்சி மோந்து "நான் இருக்கிறேன் பிரேமா. நீ அனுதையில்லை. நான் இருக்கும்வரை நீ அனுதை யில்லை" என்று உரக்கக் கத்தி னுள்.

விவரம் புரியாத பிரேமாவின் கண்களில் நீர் வழிந்து கீழே விழுந்து தெரித்தது.

தாமரை சிவந்தது!

வி. ஜி, ஸ்ரீநிவாஸன்

அன்ருேர் கயத்தில் மன்னிய தாமரை
தன்னிற மாக வெண்மையே கொண்டது.

பன்னலம் சார்ந்த பாவை யொருத்தி
தன்னலக் கையால் தாவிப் பிடித்தனள்;
தாங்கிப் பிடித்தத் தாமரை மலரை
அன்பு கனிந்த இன்பாற் குவிந்த
அன்னவள் மார்பிலே அணைத்துக் கொண்டனள்.

மின்னவள் அகமலர் வெண்மையைக் கண்ட
நன்னிற மலரும் நாணமேற் கொண்டு
தன்னிற மாறிச் செந்நிறம் ஏற்றது.

அன்றி லிருந்தே அம்மலர் சிவந்தது!

தமிழ்ப் பாசுரங்கள்

கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்களுள் இசைத் தமிழே மக்கள் மனத்தை பெரும்பாலும் கவருகிறது. ராக தாள பாவங்களுக்கு இசைந்து வருவது பற்றியே இசை என கூறப்படினும் எளியோர் முதல் பண்டிதர் வரை ஒவ்வொருவரும் இசையை அனுபவித்து தான் வருகிறார்கள். ஐந்து அறிவு படைத்த விலங்கினங்களும் இசையின் மேன்மையை உணராமலில்லை.

இசைத் தமிழின் முக்கியமான பங்கு சமயக் குரவர்கள் பாடிச் சென்ற தேவாரம், திருவாசகம், ராமலிங்க ஸ்வாமிகளின் திருவருட்பா, அருணகிரியாரின் திருப்புகழ், ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவை, ஆழ்வாராதிகளின் நாலாயிர திவ்ய ப்ரபந்தம் முதலியவை ஆகும். மேல் நாட்டு நாகரிகங்கள் மலிந்து விளங்கும் இந்த இருபதாம் நூற்றுண்டில் இந்நூல்கள் நாளுக்கு நாள் தம் சோபையை இழந்து வருகின்றன. இந்நூல்களில் பக்தி, கலாசாரம், சத்யம், அன்பு, முதலியன பிரதிபலிப்பதுடன் இலக்கிய சோபையும் மிளிர்கின்றது.

இப்போது பக்திரசம் உள்ள பாடல்கள் சிலவற்றை ஆராய்வோம். பக்தர்கள் இறைவனை பொன்னாகவும் முத்தாகவும் வைரமாகவும், வைடூர்யமாகவும் போற்றி வணங்கி வந்தனர். தேவாரப் பாசுரத்தில் அப்பர் ஸ்வாமிகள் இறைவனை "இப்பொன் நீ, இம்மணி நீ, இம்முத்தும் நீ, இறைவன் நீ" என்று கூறுகிறார். மற்றொரு பாசுரத்தில் "மண்ணாகி விண்ணாகி வயிரமுமாய் மாணிக்கந்தானேயாகி" என விளிக்கிறார். திருவரங்கத் தந்தாதியில் குலசேகராழ்வார் "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி, திரைக்கையால் அடிவருடப் பள்ளிக் கொள்ளும் கருமணியை கோமளத்தை கண்டு கொண்டேன்" என துதிக்கிறார்.

அப்பர் ஸ்வாமிகளின் தேவாரம் ஒன்று நம் மனதை உருக்குகிறது. "கருவுற்ற நாள் முதல் உன் பாதமே காண்பதற்கு உருகிற்று என் உள்ளமும் நானும் கடந்தீற்றொழித்தேன் திருவொற்றியூரா, திருவாலவாயா, திருவாரூரா, ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய் ஏகச்சி ஏகம்பனே" என முடிக்கிறார். "மனிதப் பிறவியின் காரணமாக கருவுற்றபோதே இறைவனைப் பற்றிய எழுச்சி உள்ளத்தில் தோன்றியிருக்கலாம். விலங்கினங்களாக பிறப்பின் என் செய்வது" என்று ஐயுற்றார் போலும். மற்றொரு பாசுரத்தில் "புழு வாய்ப் பிறக்கினும் புண்ணியா நின் அடி என் மனத்தே

> புதுமை எங்கும் பிரகாசிக்க வேண்டும் என்பதை மறுப்போர் இல்லை. ஆனல் பழமையை அடியோடு பாழ்படுத்திவிட வேண்டும் என்பது தவருன மனேபாவம். தமிழ்ப் பாசுரங்கள் பண்டைய இலக்கியப் பாதையில் குறிப்பிடத்தக்க ஒரு எல்லை. அதை அறவே மறக்கும்போது இன்றைய நமது இலக்கியம் பொலிவுற முடியாது, இதுதான் கட்டுரையாளரின் இதயத் துடிப்பு. —ஆசிரியர்.

வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும் இவ்வையகத்தே''

மாணிக்க வாசகரோவெனில் இறைவனை தந்தையாக பாவித்து தனயன் கூறுவது போல ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே'' என குறிப்பிடுகிறார். வடலூரார் ''கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே'' என வழுத்தி ''ஆடையிலே எனை மணந்த மணவாளா, பொதுவில் ஆடுகின்ற அரசே என் அலங்கலணிந்தருளே'' என இறைஞ்சுகிறார். திருப்பாவையில் ஆண்டாள் குறிப்பிடும் விதமே மிக அழகாக உள்ளது.

''மாயனை மன்னு வட மதுரை மைந்தனை, தூய பெருநீர் யமுனைத்துறைவனை, ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை தாயைக்குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்''

திருமங்கை மன்னனோ வெனில் ''குலந்தரும் செல்வமும் அடியார் படுந்துயராயின வெலாம்'' என ஆரம்பித்து இப் ப்ரபஞ்சத்தின் கண் உள்ள சேதனா சேதன வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டதும், அப்ராக்ருதமானதுமான சொல் ''நாராயணா என்னும் நாமம்'' என்று குறிப்பிடுகிறார். அருணகிரியார் இவ்வுலகின் கண் உள்ள சிற்றின்ப ஆசையை வெறுத்து தமக்கு பேரின்ப வீட்டை அருளுமாறு முருகனை இங்கனம் துதிக்கிறார். ''பூணு முலை மாதர் தங்கள் ஆசை வகையே நினைந்து போக முறவே விரும்பும் அடியேனை, நீ தயவதாயிரங்கி நேசவருளே புரிந்து, நீதி நெறியே விளங்க உப்

'உமா' வாசகர்களுக்கு மகிழ்ச்சிச் செய்தி!

ஆசிரியர் ஜி. உமாபதி

எழுதும்

அற்புதத் தொடர்கதை

விரைவில் தொடர்ந்து 'உமா'வில் வெளியாகும்.

முழு விபரங்களுக்கு 'உமா' அடுத்த இதழ் பார்க்கவும்.

தேசா'' என முருகனை ப்ரார்த்திக்கிறார்.

இங்ஙனம் பக்திப்பரவசம் பெருக்கெடுத்தோடும் இப்பாடல்களிலே சங்கீத பாணியும் நிறைந்துள்ளது. ஆண்டாள் அருளிச் செய்ததும் 30 பாசுரங்கள் கொண்டதுமான திருப்பாவையின் ஒவ்வொரு பாசுரமும் ஒவ்வொரு ராக தாள லக்ஷணங்கள் கொண்டவை. தேவாரப் பதிகங்களும் ராக பாவத்துடனேயே அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் ராகத்துக்கு ஏற்றபடி இப்பாசுரங்கள் பாடப்படுவதில்லை. தேவார இசைப் பயிற்சி கூடங்களில் ராகத்துடனேயே கற்பிக்கப் பட்டபோதிலும் பல தேவாலயங்களில் கௌசிகப் பண் பாடலை கேதாரப் பண்ணில் பாடுகிறார்கள்.

நிற்க, நாயன்மார்களின் உபமானங்கள் எவ்வளவு உயர்தரமாக உள்ளது என்பதற்கு ஒரு உதாரணம் காட்டுவோம். ''கடன் பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன்'' என கம்பர் பாடுகிறார். உவமை முற்றிலும் எக்காலத்துக்கும் ஏற்றது பற்றியே உயர்வாக கருதப்படுகிறது. ஆனால் முப்புரமெரித்த மஹேஸ்வரனின் அன்புக்கு உவமை காட்டுகையில் மாணிக்கவாசகர் கம்பரையும் தோற்கடித்துவிட்டார் எனவே கூறலாம். இவ்வுலகின் கண் தாயின் அன்புக்கு ஈடானது எது? ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி உள்ளொளிப் பெருக்கி உளப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே, சிவபெருமானே'' என்று துதிக்கிறார். நம் மனம் அறியாமலேயே நம் கைகள் செய்யும் உதவி குறித்து ''உடுக்கை இழந்தவன் கைபோல'' என்று குறிப்பிடும் வள்ளுவர்வாக்கும், குழவி கேட்காமலேயே அதன் தேவை அறிந்து ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து'' என்று கூறும் வாதவூராரின் வாக்கும் போற்றத்தக்கவையன்றோ!

ஞானசம்பந்தரின் திருவையாறு பற்றிய ஒரு தேவாரம் மிகவும் உயர்தரமாக உள்ளது. மாலை நேரம். பெண்கள் கோவிலை வலம் வந்து கோவிலினுள் நடனமாடுகின்றனர். அச்சமயம் முரசு ஒலிக்கிறது. அந்த ஒலி எங்கும் ப்ரதிபலித்து எதிரொலிக்கிறது. எதிரொலியின் சப்தமும் நடனமாடும் பெண்களின் காலில் உள்ள சலங்கையின் சப்தமும் கலந்து மேகத்தின் கர்ஜனை போலும் ஒலிக்கிறது. அவ்வொலி கேட்டு பயந்து சில பெண் குரங்குகள் மழைவருவதின் அறிகுறியாகத்தான் இந்த ஒலி எழுந்திருக்க வேண்டும் எனக் கருதி மரத்தில் ஏறி வானத்தை நோக்குகின்றன. எப்படியிருக்கிறது கற்பனை! ''வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சி சில மந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே'' என்று பாடுகிறார் சம்பந்தர். கம்பன். காளிதாஸன், ஏன் ஷெல்லி, கீட்ஸ் முதலியவர் கூட இக்கற்பனை ஓவியத்தின் முன் தலை குனியத்தான் வேண்டும்.

உள்ளத்தை தொடும் சில அருட்பாக்களை நாம் குறிப்பிடாமலிருக்க முடியாது. இறைவனின் மனமே உருகும்படி பாடிய பெருமை. ராமலிங்க ஸ்வாமிகளுக்குத்தான் உண்டு. அவற்றுள் ''தடித்ததோர் மகனை தந்தை ஈன்றடித்தால்

நண்பர்: ஸார் உங்களைக் கண்டதும் ஒன்று ஞாபகத்துக்கு வந்தது ஸார்!

மற்றவர்: என்னது ஸார் அது?

நண்பர்: வீட்டில் ஆஞ்சநேயர் படம் ஒன்று வாங்கிட்டு வரச் சொன்னாங்க. அதுதான்!

தாய் அணைப்பள். தாய் அடித்தால் யிடித்தொரு தந்தை அணைப்பன். இங்கு எனக்கு பேசிய தந்தையும் தாயும் பொடித்திருமேனி அம்பலத்தாடும் புனிதா நீ. ஆதலால் அடித்தது போதும், அணைத்திடல் வேண்டும். அம்மை அப்பா இனி ஆற்றேன்'' என்னும் பாசுரம் முக்யமானதாகும்.

மற்றொரு பாசுரத்தில் ''ஒறுமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்'' என்று ஆரம்பித்து தமக்கு வேண்டுவன, வேண்டாதன இரண்டையும் கூறுகிறார். அப்பர் ஸ்வாமிகள் ''குணம் பொல்லேன், குலம் பொல்லேன், குறியும் பொல்லேன், குற்றமே பெரிதுடையேன்'' என்ற பாசுரத்தில் தம்மிடம் உள்ள குறைபாடுகளை இறைவனிடம் முறையிடுகிறார்.

அருணகிரியார் தம் திருப்புகழில் ''தோலெலும்புசீநரம்பு பீளை துன்ற கோழை பொங்கு சோரி பிண்ட மாயுருண்டு வடிவான'' என்ற பாசுரத்தின் கண் இப்பூதவுடலின் அமைப்பையும் அதன் சேர்க்கைப் பொருள்களையும் வெறுத்து கூறி தமக்கு புகழுடம்பை அருளுமாறு குமரக் கடவுளை துதிக்கிறார்.

இங்ஙனம் பல வகைகளிலும் உயர்வு பெற்றுள்ள இப்பாசுரங்கள் நாளுக்கு நாள் மங்கி வருகிறது. தேவாலயங்களின் கண்காணிப்புகளை ஆதீனகர்த்தர்கள் எனப்படும் பண்டார சந்நிதானங்கள் ஏற்று நடத்தி வருங்காலத்தில் தேவாரப்பாராயணை விசேஷமாக நடைபெற்றது. தற்சமயம் நம் அற நிலைய பாதுகாப்பு இலாகா இதை சரிவர கவனிக்க வேண்டும். மேலும் தேவாரக் கல்லூரிகள் தற்சமயம் தமிழ் நாட்டில் கிடையாதெனவே கூறலாம். அரசாங்கத்தினர் மேற்படி கல்லூரிகளை நிறுவி மறைந்துவரும் இக்கலையை புனருத்தாரணம் செய்ய வேண்டும். தேவாரப் பதிகங்கள் பாடப்பெற்ற காலத்து தமிழ் நாடானது சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு, பறம்பு நாடு என பிரிக்கப்பட்டிருந்தது. ஆதலால் பதிகங்கள் பாடப்பெற்ற ஸ்தலங்களை குறிப்பிடுகையில், கொங்கு நாட்டிலுள்ளது, சேர நாட்டிலுள்ளது எனவே கூறுகின்றனர். சமயக் குரவர்களின் தேவாரத்தில் கைலாயம் என்ற ஊர் வட நாட்டிலுள்ளது என குறிப்பிடப் பட்டிருக்கிறது. இவர்கள் வட நாடு என்று எதைக் குறிக்கின்றனர் எனபதும் தெரியவில்லை. மேலும் பதிகங்களில் சீர்காழி பிரமாபுரம் எனவும் மாயவரம்

திருமயிலாடுதுறை எனவும், வைத்தீஸ்வரன் கோவில் புள்ளிருக்குவேளூர் எனவும் லால்குடி திருத்தவத்துறை எனவும் பாடப்படுகிறது. அரசாங்கத்தினர் ஒரு ஆராய்ச்சிக் குழு அமைத்து அக்குழுவினர் ஆராய்ந்து வெளியிடும் தகவல்களை கொண்டு தேவாரப் பதிகங்கள் கொண்ட மற்றொரு புதிய பதிப்பு வெளியிட வேண்டும். தேவாரப் பதிகம் பாடப்பெற்ற ஊர், அதற்கு தற்சமயம் வழங்கும் பெயர், அது உள்ள ஜில்லா, செல்லும் வழி முதலான குறிப்புகளும் இருக்க வேண்டும். இதனால் தேவாரம் பயில்வோரும் மற்றும் மக்களும் பயனடைவர்.

தேவாரம் மட்டுமல்ல, திருப்புகழும் இது போன்று ஆராய்ந்து வெளியிடத்தக்கதோர் நூலாம். மறைந்து வரும் இப்பாசுரங்களை சங்கீத வித்வான்களும் ஆதரிக்க வேண்டும். தங்கள் கச்சேரிகளில் குறைந்தது இரண்டு தேவாரப் பாசுரமோ அல்லது திருப்புகழோ அன்றி அருட்பாவோ பாடவேண்டும். இதனால் மக்கள் மனதில் அப்பாடல்கள் குறித்து ஓர் எழுச்சி ஏற்பட வகையுண்டு. இயற்கையிலேயே மதிப்பு வாய்ந்த இப்பாடல்கள் பெரிய வித்வான்களாலும் பாடப் பெற்றால் வைரம், தங்கத்துடன் கலந்து ஆபரணமாவதைப் போல் சிறந்து விளங்கும். மேலும் தற்சமயம் தமிழ்நாட்டில் நடத்தப்படும் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடுகள் போல் தேவார திருப்புகழ் மாநாடுகளும் நடத்தப்படவேண்டும். மக்கள் தேவாரம் திருப்புகழ் பற்றி அதிகம் உணராதது பற்றியே அவர்களுக்கு அப்பாடல்கள் மீது பற்று ஏற்படவில்லை. தேவார திருப்புகழ் மாநாடுகள் நடைபெற்றால் தமிழ் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் இப்பாடல்களின் நயத்தையும் மேன்மையையும் அறிந்து மேலும் விரும்புவர். இங்ஙனம் இம்மாநாடுகள் கூட்ட ஆதீன கர்த்தர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

இப்படி நாமும் ஆதீனகர்த்தர்களும் சங்கீத வித்வான்களும் அரசாங்கத்தினரும் இக்கலையை மேலும் வளர்த்து தமிழ் மொழிக்கு சிறந்ததோர் தொண்டைச் செய்த பெருமையையும், நம் சந்ததிகளுக்கு சிறந்ததோர் கலைப் பொக்கிஷத்தை அழியவிடாது காத்து அளித்த பெருமையையும் அடைவோமாக!

வீட்டிலேயே அச்சிடக் கூடிய பாக்கெட் பிரஸ் :— பெயர்கள், விலாசம், கடிதங்கள்

லேபில்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை வீட்டிலேயே வெகு அழகாக அச்சிடலாம். ஒவ்வொரு வீட்டிற்கும் அவசியமானது, நெ. 1 ரூ. 1-4-0 நெ. 2 ரூ. 2-4-0. ஸ்பெஷல் ரூ. 3-0-0, உயர்ந்த ரகம்ரூ. 3-8-0.

Big Size High Class Rs. 4-4 0.

தபால் செலவு அணா 1-8-0

உயர்தர கடிகாரங்கள்

ஸ்விஸ்மேக் 10 ௵ உத்திரவாதம் 5 ஜுவல் க்ரோமியம் கேஸ் ரவுண்டு ஷேப் ரூ. 16. சிறந்தது ரூ. 16|8. நீண்ட சதுரம் க்ரோமியம் கேஸ், 7 ஜுவல் ரூ. 24. ரோல்டுகோல்டு 15 ௵ உத்திரவாதம் 9 ஜுவல் ரூ. 28. சிறந்தது ரூ. 30. ஸ்பெஷல் 15 ஜுவல் ரூ. 27. அலாரம் டைம்பீஸ் ரூ. 10. சிறந்தது ரூ. 17.

தபால் செலவு அணா 1-8-0.

French Commercial Stores, (B.S-B.)
P. B. No. 12216 CALCUTTA. (5)

இலங்கைக் கடிதம்

ராஜன்

ஆகஸ்டு 12,

ஆகஸ்டு 12-ந் தேதி இலங்கை சரித்திரத்தில் ஒரு முக்கிய தினமாகிவிட்டது. அரசாங்கம் திடீரென்று பங்கீட்டு அரிசிக்கு அளித்து வந்த மான்யத்தை நீக்கியத்தினால் நாடு முழுவதும் பெரியதொரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது,

பாடசாலைச் சிறுவரின் இலவச மத்தியானச் சாப்பாட்டை ரத்துச் செய்தது, தபால் ரெயில்வே கட்டணங்களை அதிகரித்தது ஆகியவை பொது மக்களை பெரும் கஷ்டத்துக்குள்ளாக்கியிருக்கிறது. அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டிலுள்ள சகல எதிர் கட்சிகாரரும் ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி அடையாள வேலை நிறுத்த மொன்றை நடத்தினர்.

இலங்கை தொழிற் சங்க சம்மேளனம், இலங்கை தொழிலாளர் சம்மேளனம், இலங்கை லேபர் யூனியன், அ. இ. ஹா. டொ. தொ. சங்கம், சிலோன் மெர்கண்டைல் யூனியன், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, இலங்கை (நவ) சமசமாஜக் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகிய கட்சிகள் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டன.

மேற்படி வேலை நிறுத்தத்தைச் சமாளிப்பதற்கு அரசாங்கத்தின் போலீஸார், கப்பல் படையினர், காலாட் படையினர், தொண்டர் படையினர் ஆகிய சகல பாதுகாப்புப் படையினரும் ஜரூராக கடமைபுரிந்தனர். இருந்தும் பொது மக்களின் கிளர்ச்சியை அடக்குவதில் அவர்கள் வெற்றி பெறவில்லை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

ஒரு நாள் நடத்துவதென்று செய்யப்பட்ட அடையாள வேலை நிறுத்தத்தின் எதிரொலி ஒரு வார காலமாகியும் அடங்குவதாய் இல்லை.

இலங்கை பூராவும் ரெயில்கள் ஸ்தம்பித்துப் போயின. ரெயில் பெட்டிகள் எரிக்கப்பட்டுள்ளன. தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டு, தந்தி, டெலிபோன் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. பஸ் வண்டிகள், பெற்றோல் தாங்கிகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. பல அரசாங்கக் கட்டடங்களும், தனிப்பட்டவர்களின் ஸ்தாபனங்களும் தீக்கிரையாக்கப் பட்டிருக்கின்றன. இப்படியாக நாடு பூராவும் ஏராளமான நாச வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. அரசாங்கத்துக்கும், தனிப்பட்டவர்களுக்கும் பல லட்சக் கணக்கான சொத்துகள் நஷ்டமேற்பட்டிருக்கின்றன.

போலீஸாரோடும், ராணுவத்தினரோடும் பொது மக்கள் பல இடங்களில் கை கலந்ததினால் போலீஸிலும், பொது மக்களிலும் பல நூற்றுக் கணக்கானவர்கள் படுகாயமடைந்திருக்கின்றனர். சுமார் ஐம்பது பேர் வரை சுடுபட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். பட்டப் பகலிலேயே பகற்கொள்ளைகள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றை அடக்குவதற்கு அரசாங்கம் போலீஸிற்கும், ராணுவத்துக்கும் சகல உரிமைகளையும் கொடுத்திருக்கிறது.

மேல் மாகாணம், தென் மாகாணம் ஆகிய பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருக்கிறது. ஆபத்து நீங்கும் வரை ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்து வருமென்று பாதுகாப்பு வெளி நாட்டு மந்திரி காரியாலயத்தின் நிரந்தரக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

இலங்கையில் இது போன்ற மிகப் பகங்கரமான சூழ் நிலை இந்த நூற்றாண்டிலே ஏற்படவில்லை. ஒரு வாரம் வரையில் கடிதங்களும், பத்திரிகைகளும் பெற முடியாத வகையில் பொது மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென்றால் நிலைமை எவ்வளவு தூரம் சீர்கெட்டிருக்குமென்று நினைத்துப் பாருங்கள். வேலை நிறுத்தத்தில் பங்கெடுப்பவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்களென்று அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் ஆயிரக் கணக்கானவர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள். ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு மீண்டும் வேலை அளித்துள்ளது....!

இலங்கை இந்திய காங்கிரஸ்

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக இது கால வரை பலமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த இ. இ. காங்கிரஸ் இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் அவ்வளவு தூரம் பங்கெடுக்கவில்லை. இது பற்றி நாடு பூராவும் பலவிதப்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. இருந்தும் இ. இ. காங்கிரஸ் அரிசிக்கு அளித்து வந்த மான்யத்தை நீக்கியமைக்கு தனது எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறது. நூற்றுக் கணக்கான தோட்டங்களில் ஆகஸ்டு 12-ல் வழக்கமாக தொழிலாளர்கள் வேலைக்குப் போய், திரும்பி வேலைவிட்டு வந்து கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதை சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.

விபுலானந்த அடிகளாரின் ஜெயந்தி

இம்மாதம் 13-ந் தேதி இலங்கையின் பல பாகங்களிலும் ஸ்ரீமத் விபுலானந்த அடிகளாரின் ஜெயந்தி விழா அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது, புலவர் மணி வித்வான் ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் தலைமையில் மட்டக்களப்பில் நடைபெற்ற விபுலானந்த ஜெயந்தி விழாவில் விசேஷ பேச்சாளராக விஜயம் செய்த ''வீரகேசரி'' ஆசிரியர் திரு. கே. வி. ஹரன் அடிகளோடு தமக்கு சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட தொடர்பை எடுத்துக் கூறி, தமிழுக்கும், தமிழ் இசைக்கும், தமிழ் நாட்டுக்கும் அவர் அளித்த ''யாழ் நூலின்'' பெருமையையும் விளக்கி அவர் பிறந்த இந்நாட்டில் அன்னாருக்கு அழகும், அறிவும் பொதிந்த ஓர் மணி மண்டபம் அமைக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களது கடமையாகுமென்றும் வேண்டிக்கொண்டார்.

கடந்த மாதம் விபுலானந்த அடிகளாரின் மணி மண்டப நிதிக்காக நடைபெற்ற உதவி நிதி நாடகங்களிலிருந்து ரூபா. 20,00 கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது. அத்தொகையோடு அடிகளாரின் மண்டப வேலை அதிவிரைவில் ஆரம்பிக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

197201

இந்தியாவிலேயே முதன் முதலாக

மிகச் சிறந்த முறையில்

தயாரித்த பௌன்டென்

பேனு இங்க்.

SOLE DISTRIBUTORS :

NATIONAL PRODUCTS SYNDICATE

'INK MANSION'

141, GOVINDAPPA NAICK STREET, MADRAS-1.

Grams : "PERMANANCY" Phone : 3189

சூரியன் மார்க் படுக்கையறை விளக்குகளையும் விளக்குத்திரிகளையும் இந்தியாவில் மிக அதிக அளவில் உற்பத்தி செய்பவர்கள்.



உற்பத்திசாலை :

62/27, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.

சன்லாம்ப் இண்டஸ்ட்ரீஸ்

23, ஆண்டர்ஸன் தெரு, சென்னை-1.

Edited, Printed and Published by G Umapathy, M C. at the Uma Printers, 4/32, Thathamuthiappan Street, Madras-1. Phone : 2200

Managing Editor: Ra. Shanmugam.

Vummidiars

STAINLESS STEEL

HOUSEHOLD UTENSILS

You can buy them with utmost confidence for they are backed by Vummidiars' reputation for superfine workmanship.

Use **SHINO**

CLEANING COMPOUND

IDEAL FOR CLEANING
SILVERWARE.
STAINLESS STEELWARE ETC.

VUMMIDIARS (MFRS.) LTD., MADRAS-2

Regd. No. M. 6309. UMA

Telegrams & Cables :
"INCREASE"
MADRAS.

TELEPHONE:
"2610"
P. B. No. 541.

DADHA & CO.,

PHARMACEUTICAL CHEMISTS & DRUGGISTS,

MADRAS-3.

AGENTS IN SOUTH INDIA FOR:

Messers. British Drug Houses (India) Ltd ; Bombay.
,, Anglo-French Drug Co. (Eastn.) Ltd ; Bombay.
,, C. E. Fulford (India) Ltd; Bombay.
,, Birla Laboratories Calcutta.
,, G. W. Carnrick Co. (Asia) Ltd; Bombay.
,, International Chemical & Biological Institute Ltd; Bangalore city.
,, Thiocalcin Co ; Madras.
,, Garbhani Laboratories, Madras.
,, O. Scruton and Co. Ltd ; York, England.
(Manufacturers of Nurse Harvey's Mixture)
,, International Traders, Calcutta.
,, Ward, Blenkinsop & Co. (India) Ltd; Bombay.
,, Crookes Laboratories Ltd; Bombay.

Direct Importers of Drugs, Chemicals, Patent Medicines Etc.,

Suppliers to Government Hospitals, Native-States
District Boards, Doctors Etc.,

Sole-Proprietors of:

HEDAURIN FOR DYSENTRY & CHOLERA & CIROBIL FOR LIVER & SPLEEN

Proprietors of MAHENDRA & CO., MADRAS.

(Depot for B. I. CO., LTD., & I. R. I. LTD., CALCUTTA.)

Edited, Printed and Published by G. Umapathy, M. C. at Uma Printers, 4/32. Thathamuthiappan Street, Madras-1 Phone: 2200